உ

கடவுள் துணை.

குமரகுருபரசுவாமிகள்

இயற்றியருளிய

நீதிநெறிவிளக்கம்

மூலமும் உரையும்.

இது

சென்னைப் பச்சையப்பன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1913

விலை அணா 3

ஸ்ரீ

முகவுரை.

சங்கமருவிய தொகைநூற்கள் மூன்றனுள் ஒன்றாகிய பதினெண்கீழ்க்கணக்கிலுள்ள நீதிநூற்களுக்குப் பின்வந்த நீதிநூற்களுள் நடையினாலும், பொருட்சிறப்பாலும் அப்பதினெண்கீழ்க்கணக்கிலுள்ள நீதிநூற்களை முற்றும் ஒத்திருப்பன அறநெறிச்சாரமும், நீதிநெறிவிளக்கமுமேயாகும். அவ்விரண்டனுள், நீதிநெறிவிளக்கம் மிகச் சமீபகாலத்தில் இயற்றப்பட்டதாயிருந்தும் இதற்குப் பலநூறு வருடங்களுக்கு முற்பட்டனவாகிய சங்கநூற்களின் நடையைச் சிறிதும் வேறுபாடின்றி ஒத்திருப்பது மிகவும் வியப்பைத் தருகின்றது. இதன் நடை சங்கநூற்களின் நடையை ஒத்திருக்க வேண்டுமென்று வருந்திச் செய்யப்பட்டதன்று. மிக இயற்கையாய் அமைந்ததே. இதனை இயற்றிய குமரகுருபரர்வாக்கே அத்தகையதாகும்; அதனை அவரியற்றிய ஏனைய நூற்களாலும் நன்குணர்தலாம். அவரது வாக்கு ஒன்றோடொன்று இயைபுறவமைந்த சொற்றொடர்களின் செறிவையும், கம்பீரமான ஓசையின்பத்தையு முடையது.

இந் நீதிநெறிவிளக்கத்திற்குப் பல உரைகள் இருக்கின்றன. அவற்றுளெல்லாஞ் சென்ற நூற்றாண்டில் இலக்கணத்திற்கோர் இலக்காய் விளங்கிய மகாவித்துவான், கோமளபுரம்-இராஜகோபாலப்பிள்ளை யவர்களியற்றிய உரையே மிகவுஞ் சிறப்புடையது. இவர் காலத்துப் பல அரும்பெரும் புலவர்களிருந்தும் இலக்கண விஷயத்தில் இவர் பெயரே மிகவுஞ் சிறந்து பிரகாசித்ததென்றால் இலக்கணத்தில் இவருக்கிருந்த

வன்மையைப்பற்றி வேறாக என்ன சொல்வது. இவர்காலத்து இச் சென்னையில் இலக்கணம் பயிலும் விருப்புடையாரிற் பலரும் இவரிடமே சென்று பயின்று வந்தனர். இவரிடம் பயின்றோர் எல்லா மிகச் சிறந்த இலக்கணிகளாகவே மதிக்கப் படுகின்றனர். யாழ்ப்பாண முதலிய இடங்களிலிருந்தும் வந்து சிலர் இவரிடம் இலக்கணமும் இராமாயணமும் படித்தனர். சென்னையில் இலக்கணம் படித்தவர்கள் இப்பொழுது பச்சை யப்பன் கலாசாலையில் தமிழ்த் தலைமைப் புலவராக விருக்கும் திரு. செல்வகேசவராய முதலியார், M. A., அவர்களின் தந் தையாராகிய வேசவ சுப்பராய முதலியார் அவர்கள், மிகச் சிறந்த இலக்கணப் புலவரென மதிக்கபபட்டிருந்த திருமயிலை சண்முகம் பிள்ளையவர்கள், முதலியோர்.

பிற ஆசிரியர்களிடம் இலக்கணம் பயின்றவர்களிலுஞ் சிலர் இலக்கணத்தில் தமக்குளவாகுஞ் சந்தேகங்களை இவரி டம் வந்து கேட்டுத்தெளிந்துகொள்ளுவாராம். ஒருவன் இலக் கணத்தை நன்கு பயின்றபின் இவருடைய உரைகளைப் படிப்ப னேல் இலக்கணத்தில் அவனுக்குளவாகுஞ் சந்தேகங்கள் நீங்கி அவன் சிறந்த இலக்கணியாவான். சிலர் பிறருக்கு எங் குச் சந்தேக முண்டாகுமோ அந்த இடத்தை விட்டுவிட்டு மற் றைய இடங்களில் உள்ள சொற்களுக்கும், சொற்றொடர்களுக் கும் இலக்கணமும் விசேஷமும் தம் உரையில் விரித்துக் கூறி யிருப்பர். இவர் பிறருக்கு எந்த இடத்தில் எந்தச்சொல்லில் எந்தச் சொற்றொடரிற் சந்தேக முண்டாகுமோ அதைச் சொல்லிவைத்தாற்போ லறிந்து அந்த இடத்தில் அந்தச்சொற் கும், அந்தச்சொற்றொடருக்கும் இலக்கணங்கூறி அவற்றை நன்கு விளக்கி யிருக்கின்றனர். இவர் கூறும் விசேஷங்கள் இடத்தோடும், சொல்லோடும், தொடரோடு மிவும் பொருத்த முடையனவா யிருத்தலின் படிப்போர் மனதை மிகவுங் களிப்

கின்றன. பிறருரையிலுள்ள குற்றங்களைக் காட்டல், பிறி தொடுபடாமல் தம்மதங்கொளல் என்னும் இவ்விருமதங்க ளும் இவருரையில் மிகுதியுங் காணப்படுகின்றன. இவர் தம் முரையிற் பெரும்பாலு மறுத்துரைப்பது சோடாசாவதானம் சுப்பராயச் செட்டியாரவர்க ளுரையையே.

இவருக்கு இங்ஙனம் உரையியற்றும் சக்தியோடு போ தனு சக்தியும் இருந்ததாம். பசுமரத்தில் ஆணிபதிவதுபோல் மாணவர் மனதில் தாங்கூறும் விஷயங்கள் பதியும்படி போதி ப்பாராம். சுமார் ஏழெட்டு வருஷங்களுக்குமுன் பிரபந்த வித் வான் முத்துகிருஷ்ணநாயுடு அவர்களும், யானும் செல்வ கேசவராய முதலியார், M. A., அவர்களிடம் பேசிக்கொண் டிருக்கையில் அவர்கள் "நான் B. A., வகுப்பில் இராஜகோ பாலப்பிள்ளை யவர்களிடம் இராமாயணத்திற் சிலசெய்யுட்க ளுக்குக் கேட்ட உரை இப்பொழுது தான் கேட்டதுபோல் இருக்கின்றது" என்று கூறினார்கள். இவர் கம்பராமாயணத்தை உரை நடையில் எழுதியிருக்கின்றனர். செய்யுள் நடையில் இவரியற்றியனவாகக் காணப்படுவன பத்து இரட்டையா சிரிய விருத்தங்களாலாகிய திருவெவ்வுளூர் வீரராகவப்பெரு மாள் பதிகமும், பல நூற்களுக்கு இவர் கொடுத்த சாற்றுக் கவிகளுமேயாகும். இவற்றையன்றிச் செய்யுள் ரூபமாக வேறு நூற்களை இவர் செய்திருப்பதாகப் புலப்படவில்லை. இவற்றைக்கொண்டு இவருக்கு நூலியற்றுந் திறம் எம்மாத்தி ரம் இருந்ததென்பது கணித்தற்குக் கூடாததாயினும், இவர் கற்ற வன்மையினுற் கவிபாடும் வன்மை படைத்தவரே யன்றி இயற்கைக் கவிஞர் அல்லர் என்பது மாத்திரம் ஒருவாறு இவற் றாற் புலனாகின்றது.

இவர் தெலுங்கு யாதவர், வைஷ்ணவமதத்தினர். இவர் முதலில் அஷ்டாவதானம்-சபாபதி முதலியாரவர்களிடம் பல

இலக்கியங்களைப் பயின்று பிறகு இலக்கணம் படிக்கவேண்டுமென்னும் விழைவால் அஷ்டாவதானம் வீராசாமிச் செட்டியாரை யடைந்து அவரிடம் இலக்கணமும் இராமாயணமும் படித்தனர். இவர் முதலில் நார்மல் ஸ்கூலில் தமிழ்ப்புலவராயிருந்து பிறகு பிரசிடென்சி காலேஜில் தமிழ்த்தலைமைப் புலமை நடாத்தினர். இவர் காலத்திருந்த புலவர் விசாகப் பெருமாளையரவர்கள், சரவணப்பெருமாளையர் அவர்கள், காஞ்சிபுரம் சபாபதி முதலியார் அவர்கள், அஷ்டாவதானஞ் சபாபதி முதலியார் அவர்கள், அஷ்டாவதானம் வீராசாமிச் செட்டியார் அவர்கள், மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள், தியாகராயச் செட்டியார் அவர்கள், சோடசாவதானம் சுப்பராயச்செட்டியார் அவர்கள், ஆறுமுகநாவலர் அவர்கள், தொழுவூர்-வேலாயுதமுதலியார் அவர்கள், ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள், ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள், வித்துவஜ்ஜன சேகரர் கோவிந்தப்பிள்ளை அவர்கள், புதுவை இராமாநுஜ நாவலரவர்கள், மழவை மகாலிங்க ஐயரவர்கள், கதிரைவேற் கவிராயரவர்கள் முதலியவர்கள். இவர்கள் இவர் காலத்தில் மிகவும் பிரபல வித்துவான்களா யிருந்தவர்கள். நன்னூலுக்கு விருத்தியுரை யியற்றியவராகிய இலக்கணப்புலி முகவை-இராமாநுஜகவிராயரவர்களும், தொல்காப்பியம் வரதப்ப முதலியாரவர்களும், காலேஜ் வேங்கடாசல முதலியாரவர்களும் இவர்காலத்தின் மிகவும் வயது முதிர்ந்தவர்களாம். இப்பொழுது சென்னையிலுள்ள மகாவித்துவான் இராமசாமி நாயுடு அவர்களும், பிரசிடெண்ட் காலேஜ் மகோமகோபாத்தியாயர் சாமிநாத ஐயரவர்களும் இவருக்குச் சமகால வித்துவான்களே. இவரது முழுச்சரித்திரமும் இனி இதை அடுத்து வெளியிடப்படும் நளவெண்பாவின் உரைப்புத்தகத்தில் எழுதப்படும். இப்போது இவரது சரித்திரம் போதியவளவு கிடைத்திலாமையின் இங்கு எழுதப்படவில்லை.

இவர் உரை இயற்றிய நூற்களில் நாலடியார் சற்றேறக் குறைய ஏழு வருஷங்களுக்கு முன்னர் அச்சுவாகனமேறித் தமிழ்நாட்டிற் பல இடங்களிலும் பரவியிருக்கின்றது. இப்பொழுது இந்நீதிநெறிவிளக்கவுரை கிடைத்தல் அருமையாக விருத்தலின் அச்சிடப்பட்டது. இதற்குப்பின் நளவெண்பாவின் உரை கூடியசீக்கிரத்தில் வெளிவரும்.

இம்முகவுரைக்குப் பின்னுள்ள குமாரகுருபரசுவாமிகள் சரித்திரச் சுருக்கம் கைலாசபரம்பரை பொம்மபுர ஆதீனம் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டதாகும்.

பெரியோர்கள் என திச்சிறு முயற்சியை இகழாமல் இதன்பொருட்டு என்னை ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்:

கா. ர. கோ.

குமரகுருபரசுவாமிகள் சரித்திரச் சுருக்கம்.

பாண்டிவளநாட்டிலே, தாமிரபர்ணி நதிதீரத்திலே, ஸ்ரீ வைகுண்டமென்றும் வழங்குகின்ற கைலாசபுரத்திலே வேளாளர் குலத்திலே, ஏறக்குறைய முந்நூறு வருடங்கட்குமுன்னே சிவபத்தியிற் சிறந்தவரும், இல்லறவொழுக்கத்திலே வழுவாதவருமாகிய சண்முகசிகாமணிக் கவிராயரென்பவர் ஒருவரிருந்தார். அவர் தமக்குப் புத்திரப்பேறின்மையால் தமது பத்தினியாராகிய கற்பிற்சிறந்த சிவகாமசுந்தரியாரோடு மிகக் கவலையடைந்து, அதுகாரணமாகத் திருச்செந்தூர் முருகக்கடவுளை உபாசித்து வந்தனர். அக்கடவுளுடைய திருவருளினாலே ஒருபுத்திரர் அவதரிக்க; பிதாமாதாக்களிருவரும் பேருவகையுற்று, அவருக்குச் சாதகன்மமுதலியவற்றை உரியபருவங்களிலே மிகுந்த சிறப்போடு செய்வித்து, அருமைபாராட்டி வளர்த்துவருநாளில், ஐந்துவயதாகியும் அவர் பேசாமைகண்டு, ஊமையெனத் தெளிந்து, புத்திரப்பேறின்மையினும் மிக வருந்தி, முருகக்கடவுளைக்குறித்துப் பல அரியவிரதங்களை அநுட்டித்துவந்தார்கள்.

அந்நாளிலே, ஒருநாள் சண்முகசிகாமணிக்கவிராயர் மனைவியாரோடு புத்திரரையும் உடன்கொண்டு, திருச்செந்தூரையடைந்து, முருகக்கடவுளைத் தரிசித்துத் துதித்து, "எம்பெருமானே! இப்புத்திரனை ஊமைதீர்த்து ஆட்கொண்டருளவேண்டும்." எனப் பிரார்த்தித்து, சந்நிதிமுன்னுள்ள சண்முக

விலாசத்திற்றானே வசித்துக்கொண்டு, "இப்புத்திரனுக்கு ஒரு மண்டலத்திற்குள் ஊமைத்தன்மை நீங்காதொழியுமேல் மனைவியோடு பிராணத்தியாகஞ் செய்துகொள்ளக்கடவேன்" என உறுதிகொண்டு, நியமமாகத் தினந்தோறும் * வதனாரம்பத்திலே ஸ்நானஞ்செய்து, முருகக்கடவுளைத் திரிகாலங்களினும் தரிசித்து, வழிபட்டுவந்தனர். தயாநிதியாகிய முருகக்கடவுள், அவர் பிராணத்தியாகம் பண்ணிக்கொள்ளும்படி குறித்துள்ள அந்நாளிலே, சூரியனுதிக்க ஒருயாமமிருக்குமளவில் சண்முகவிலாசத்திலே நித்திரை செய்கின்ற அவர்புத்திரனிடத்தில் அருச்சகர் வடிவங்கொண்டு எழுந்தருளி, † "குமரகுருபரா!" என்று தட்டியெழுப்பி, அவருடைய நாவிலே தம்முடைய சடாக்ஷரத்தையெழுதி, அவரைநோக்கி, "குழந்தாய்! விரைவிலே நமது விசுவரூபதரிசனத்திற்கு வருவாயாக." என்று ஆஞ்ஞாபித்து, மறைந்தருளினார். உடனே குமரகுருபரசுவாமிகள் தமது மாதாபிதாக்களை "அம்மே அப்பா" என்று தட்டியெழுப்பி, நடந்தவிடயங்களையறிவிக்க; அதுகேட்ட மாதாபிதாக்களிருவரும் முருகக்கடவுள் தங்கள் புத்திரருக்கருளிய பெருங்கருணைத்திறத்தை வியந்து புகழ்ந்து, அப்புத்திரரோடு வதனாரம்பத்திலே ஸ்நானஞ்செய்து, நியதிமுடித்து, சந்நிதியையடைந்து, விசுவரூபதரிசனஞ் செய்துகொண்டு நின்றார்கள். அப்போது குமரகுருபரசுவாமிகள் முருகக்கடவுளுடைய திருவருளினாலே தமிழ்ச்செய்யுள்பாடுஞ் சத்தியுண்டாகப்பெற்று, கந்தர்கலிவெண்பா என்னும் ஓர் பிரபந்தத்தை அருளிச்செய்தார்.

. . . .

மற்றைநாட் பிராதக்காலத்திலே, குமரகுருபரசுவாமிகள் சிவசின்னமாகிய விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்துத் திருக்

---

* வதனாரம்பம் - சமுத்திரத்திலுள்ளதொரு ஸ்நானகட்டம்.

† குமரகுருபரரெனுந்திருநாமம் அன்றுமுதலுண்டாயிற்று.

கோயிலையடைந்து, சுவாமியைத் தரிசித்து, இனி ஞானாசாரியரைப் பெறவேண்டுமென்னும் விருப்பத்தோடு முருகக்கடவுளுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டு பிரதக்ஷிணஞ் செய்யும்போது, அக்கடவுளுடைய திருவருளினால் ஆகாயத்திலே, "அன்பனே! நீ இவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு உத்தரயாத்திரை செய்யுங்கால் எவ்விடத்திலே உன்வாக்குத் தடைப்படுமோ அவ்விடத்திலே ஞானோபதேசம் பெறக்கடவை." என்று ஓர் அசரீரிவாக்கு அங்கே சமஸ்தருங் கேட்க எழுந்தது. அதுகேட்டுக் குமரகுருபரசுவாமிகள் திருவுளமகிழ்ந்து, திருவருளைப் புகழ்ந்து, நிலத்திலேவிழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, தம்மை ஆண்டருளிய அக்கடவுளிடத்தில் அநுமதிபெற்றுத் திருச்செந்தூரை அரிதினகன்று, மாதாபிதாக்களோடு தமது ஜன்மஸ்தலமாகிய கைலாசபுரத்திற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு சிலகாலம் வசித்திருந்தார். * பின்பு, ஒருநாள் மதுரைக்குப் போக விரும்பி, தமது தாய்தந்தையர்களுடைய பிரிவாற்றாமையைத் தேற்றி, விடைபெற்றுத் தம்பியாராகிய குமாரகவிகளும் உடன்வரப் புறப்பட்டுவரும்போது, வழியிலே மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் என்னும் ஒரு அருமைப் பிரபந்தத்தைப் பாடிமுடித்துக்கொண்டு, திருப்பரங்குன்றத்தை யடைந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

அன்றிரவு மீனாக்ஷியம்மையார், மதுரையையாளும் அரசராகிய திருமலைநாயகர் சொப்பனத்திலே தோன்றி, "நமது குமாரனாகிய சுப்பிரமணியனுடைய கிருபையைப்பெற்றவொருவன் நம்மைக்குறித்து ஓர் பிள்ளைத்தமிழ் பாடி முடித்துக்கொண்டு திருபரங்குன்றத்தில் வந்திருக்கின்றான்; நீ பரிவாரங்க

---

* இங்குவசிக்குநாளிலே இத்தலத்தைச்சுட்டிக் கைலைக்கலம்பகம் என ஒருபிரபந்தம் அருளிச்செய்ததாகவும் சரித்திரமுண்டு. அப்பிரபந்தம் கிடைக்கவில்லை.

ளோடு சென்று அழைத்துவந்து அப்பிள்ளைத்தமிழை நமது சந்நிதியில் அரங்கேற்றக்கடவாய்" என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினர். உடனே திருமலைநாயகர் விழித்தெழுந்து, குதூகலமடைந்து, தாங் கண்ட சொப்பனத்தைச் சமஸ்தருக்கும் மற்றைநாட் காலையி லறிவித்து, மிகுந்த மனமகிழ்ச்சியோடும் கைகளைச் சிரசிலே யஞ்சலி செய்துகொண்டு, தமது பரிவாரங்களோடு திருப்பரங்குன்றத்திற் சென்று, சுவாமிகளைத் தரிசித்து வணங்கி, "யாவராலும் பெறுதற்கரிய திருவருளைப்பெற்ற சுவாமீ! தேவரீரை அடியேன் பூர்வத்திலே புரிந்த புண்ணியத்தினால் தரிசிக்கப்பெற்றேன்" என்று துதித்து, மீனாக்ஷியம்மையாருடைய ஆஞ்ஞையைத் தெரிவித்து, அவரையும், அவரருளிச்செய்த பிள்ளைத்தமிழையும் யானைமீதேற்றிக்கொண்டு, மதுரையை யடைந்து நகர்வலஞ் செய்வித்தார். பின்பு குமரகுருபரசுவாமிகள் திருக்கோயிலை யடைந்து, சித்திவிநாயகக்கடவுளையும், சோமசுந்தரக்கடவுளையும் தரிசித்து, துதித்துத் தொழுது மீண்டு.மீனாக்ஷியம்மையாருடைய சந்நிதியிற் சேர்ந்து, நமஸ்கரித்து எழுந்துநின்றார். அப்பொழுது, சர்வலோகங்களையும் பெற்றும் குமரியாகவே விளங்காநின்ற மீனாக்ஷியம்மையார், தெய்வத்தன்மைபொருந்திய தமது இளந் திருக்கோலத்தைக் காட்டியருள; சுவாமிகள் தரிசித்து, அடியேன் செய்த பிள்ளைத்தமிழுக்கு இது பரிசு போலுமென்று நினைத்து, அத்தியந்த ஆச்சரியமுற்று, தாம் இயற்றிய பிள்ளைத்தமிழைச் சந்நிதானத்திலே அரங்கேற்றுவாராயினர்.

அக்தருணத்தே ஆங்குள்ள சிவனடியார்களிலொருவர் பிள்ளைத்தமிழ்த் திருமுறையைப் பீடத்திலெழுந்தருளுவித்து விதிப்படி பூசித்து வணங்கித் துதிக்க, குமாரகவிகள் அரசருடைய வேண்டுகோளின்படியே அதனை வாசிக்க, சுவாமிகள் அதன் பொருளை யாவருங்கேட்டு இன்புறும்படி விரித்துப்

பிரசங்கித்தார். அத்தினத்திலே காப்புப்பருவம் ஒன்றே நடந்தது. சுவாமிகள் இவ்வாறே, தினமும் ஒவ்வொரு பருவமாகப் பிரசங்கிக்கும்போது, வருகைப்பருவத்தில், மீனாக்ஷியம்மையார் அருச்சகரது பெண்குழந்தைபோன்று இளந்திருக்கோலத்தோடு திருமலைநாயகர் மடியின்மீது எழுந்தருளியிருந்து, "தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின் பயனே நறைபழுத்த, துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்,—தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே வளர்சிமைய, விமையப் பொருப்பில் விளையாடு மிளமென் பிடியே யெறிதரங்க,—முடுக்கும் புவனங் கடந்துநின்ற வொருவன் றிருவுள் ளத்திலழ, கொழுக வெழுதிப் பார்த்திருக்கு முயிரோ வியமே மதுகரம்வாய்,—மடுக்குங் குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே வருகவே, மலயத்துவசன் பெற்றபெரு வாழ்வே வருக வருகவே." என்னும் ஒன்பதாவது செய்யுளை வாசிப்பித்துப் பொருளுரைக்குந்தருணத்தில், "இன்னுமொருமுறை இச்செய்யுளை வாசிப்பித்துப் பொருளுரைக்க." என யாவருமகிழ வினவி, கேட்டுவியந்து, இறுதிச் செய்யுளை வாசித்து நிறுத்துந்தருணத்தில்* மறைந்தருளினார்.

---

* வருகைப்பருவத்திலன்றி முத்தப்பருவத்திலே, "காலத்தொடுகற்பனைகடந்த கருவூலத்துப் பழம்பாடற், கலைமாச் செல்வர் தேடிவைத்த கடவுண் மணியே யுயிராலவாலத்துணர்வு நீர்பாய்ச்சி வளர்ப்பார்க் கொளிபூத்தருள்பழுத்த, மலர்க்கற் பகமே யெழுதாச்சொன் மழலைததும்பு பசுங்குதலைச்,—சோலைக் கிளியே யுயிர்த்துணையாந் தோன்றாத் துணைக்கோர் துணையாகித், துவாத சாந்தப் பெருவெளியிற் றுரியங்கடந்த பரநாத,—மூலத் தலத்து முளைத்தமுழு முதலே முத்தந் தருகவே, முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய் முத்தந் தருகவே." என்னும் முதற்செய்யுளை வாசிப்பித்துப் பொருளுரைக்குங்கால் மீனாக்ஷியம்மையார் இளந்திருக்கோலமாகக் காட்சியளித்து, ஒரு முத்துவடம் சுவாமிகள் கழுத்திலணிந்து மறைந்தருளியதாகவும் சரித்திரம் உண்டு.

அவ்வமையத்தில், திருமலைநாயகர் அருச்சகாது பெண்குழந்தையென்று அஃதுகாறும் தாம் எண்ணிக்கொண்டிருந்த எண்ணத்தை யொழித்து, இங்ஙன மெழுந்தருளி யிருந்தவர் சர்வ ஜீவதயாபராகிய மீனாக்ஷியம்மையாரே யென்று தெளிந்து, சுவாமிகளுக்கு அம்மையாரருளிய திருவருளின் திறத்தைப் புகழ்ந்து கொண்டாடினார். சபையாரும் அளவிறந்த ஆச்சரிய மடைந்தார்கள். இவ்வண்ணமே பிள்ளைத்தமிழை அரங்கேற்றிய பின்பு, திருமலைநாயகர் சுவாமிகளைச் சிங்காதனத்தி லெழுந்தருளுவித்து, திருவடிகளில் வீரகண்டாமணியைத் தரித்து, பொன்னினாலும் அரதனத்தினாலும் அபிஷேகஞ் செய்து, யானை, குதிரை, சிவிகைகளையும், குடைகொடி முதலிய விருதுகளையுங் கொடுத்தார்.

அதன்பின்னரும் சுவாமிகள், திருமலைநாயகர் முதலியோர் வேண்டுகோளின்படி மீனாக்ஷியம்மைகுறம், மீனாக்ஷியம்மை யிரட்டைமணிமாலை என்னும் இரண்டு பிரபந்தங்களையும், சோமசுந்தரக்கடவுளைத் துதித்து மதுரைக்கலம்பகம் என்னும் ஒரு பிரபந்தத்தையும் அருளிச்செய்தனர். பின்பு ஒருநாள், திருமலைநாயகர் வெகுநேரம்வரையில் போசனஞ் செய்யா திருந்தமைகண்டு, சுவாமிகள், "* வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்தலரிது." என்னுந் திருக்குறளை யெடுத்தோத; அரசருவந்து, "அரிய திருக்குறளெனப்படும் தமிழ்வேதத்தை முற்றும் ஆராய்ந்து தெளிதற்குக் காலமில்லை யாதலால், அதிலுள்ள நீதிகளை விளக்கிச் சுருக்கமாக அடியேன்பொருட்டு ஒரு நீதிநூல் செய்து தரவேண்டும்." என்று பிரார்த்தித்தனர். சுவாமிகள் அவ்வாறே நீதிநெறிவிளக்கம் என்னும் ஒருநூலை அருளிச்செய்து தந்து, அவ்வரசர் வேண்டுகோளின்படியே

* திருக்குறள் உஅ - ம் அதிகாரம்; ஊழ். எ.

மீனாக்ஷியம்மையையும் சோமசுந்தரக்கடவுளையும் தரிசித்துக் கொண்டு, அத்தலத்திலே வசித்தருளினார்.

சிலநாட் சென்றபின்பு தமது சகோதரராகிய குமார கவிகளை யழைத்து, மாதா பிதாக்க ளனுமதிப்படியே, தாமவதரித்த கைலாசபுரத்திலே இல்லறதருமத்தில் வழுவாது நிற்கும்படி பணித்து, விடையளித்தனுப்பிவிட்டு, தாம் நானாவித வாத்தியங்கள் முழங்க, விருதுகள் புடைசூழ, தமக்கபிஷேகித்த திரவியங்களை அரசர் வேண்டுகோளின்படியே ஒட்டகங்களின்மீ தேற்றிக்கொண்டு, மதுரையை யகன்று, தம்மைப் பிரிவாற்றாது தொடர்ந்துவரும் அரசரையும், மந்திரி மார்களையும், பிறரையும் மீண்டு செல்லும்படி வற்புறுத்தி, தாம் சிவிகைமேற்கொண்டு, பாண்டிநாட்டைக் கடந்து, சோழ நாட்டையடைந்து, அங்குள்ள திரிசிராப்பள்ளி, திருவானைக்கா முதலிய தலங்களிலுள்ள அடியார்கள் எதிர்வந்து பணியச் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, அவ்வத்தலங்களிலே சில நாள்வசித்து, திருவாரூரைச்சேர்ந்து, தியாகேசப்பெருமானைத் தரிசித்து, திருவாரூர் நான்மணிமாலை என்னும் ஒருபிரபந்தத்தை அருளிச்செய்தனர். ஆண்டுவசிக்குநாளில், திருக்கைலாச பரம்பரையாகிய * தருமபுராதீனத்திலே நான்காவது குரு மூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமாசிலாமணித்தேசிக சுவாமிகளுடைய திருவருட்சிறப்பைக்கேள்வியுற்று, அவரைக் காணவிரும்பிப் புறப்பட்டு, இடையிலுள்ள பலதலங்களையும் வணங்கிக்கொண்டு தருமபுரத்தை யடைந்தார்.

அத்தினத்திலே, சைவசித்தாந்தசாஸ்திரங்களையும், அவற்றிற்குரிய அங்கங்களாயுள்ள நூல்களையும், ஐயந்திரிபற ஓதி

* இத்தருமபுராதீனத்தின் பிரதம குருமூர்த்திகள் ஸ்ரீ ஞானசம்பந்ததேசிகர்; இரண்டாவது குருமூர்த்திகள் ஸ்ரீ ஆனந்தபரவசதேசிகர்; மூன்றாவது குருமூர்த்திகள் ஸ்ரீ சச்சிதானந்ததேசிகர்.

யுணர்ந்து, அவற்றிற் கூறப்படும் சரியை, கிரியை, யோக, ஞானுனுசந்தானங்களை மேற்கொண்டு, குருபத்தியிற் சிறந்து விளங்கும் அடியவர் திருக்கூட்டங்களும், வேதசிவாகம விற்பன்னர்களும், சைவாசாரியர்களும், இலக்கணவிலக்கியங்களில் வல்ல வித்வான்களுஞ் புடைசூழும்படி, ஞானசூரியனைப்போல, ஸ்ரீ மாசிலாமணித்தேசிகர் தக்ஷிணாபிமுகமாய் எழுந்தருளியிருந்தார். அச்சமயத்திலே, சுவாமிகள் பரிசனங்கள் பின்னே வர, விருதுகளோடும் அத்திருமடத்திலுள்ளே சென்று, அவருடைய சந்நிதியிலே உத்தரீயத்தோடு ஆசனத்தின்மீதிருந்துகொண்டு, மாசிலாமணித் தேசிகரால் வினவப்பட்ட வினாக்கள் பலவற்றிற்கும் உத்தரஞ் சொல்லிக்கொண்டுவந்தார். மாசிலாமணித்தேசிகர் திருப்புன்முறுவல்செய்து, இறுதியிலே திருத்தொண்டர் பெரியபுராணத்தில், * "ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்க ளான்குஞ், சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக, விந்துவாழ் சடையா னாடுமா னந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின், வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்." என்னுந் திருவிருத்தத்தின் அனுபவப்பயனை வினவ, வாக்குத் தடைப்பட்டது. உடனே சுவாமிகள் இருக்கைவிட்டெழுந்து, முருகக்கடவுளுடைய ஆஞ்ஞையைநினைந்து, மனங்கலங்கி, ஆசனத்தையெடுத்தெறிந்துவிட்டு, உத்தரீயத்தை இடையிலே கட்டிக்கொண்டு, சந்நிதானத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்துநின்று அஞ்சலியஸ்தராகி, "எம்பெருமானே! ஆணவமலத்தினாலே மறைக்கப்பட்ட தமியேன் அறியாமையாற் செய்த பெருங்குற்றத்தை மன்னித்து, அடிமைகொண்டருளவேண்டும்." என்று பிரார்த்தித்து வணங்கினார். அதுதிருச்செவியேற்ற ஞானசாரியராகிய மாசிலாமணித்தேசிகர் அவரை நோக்கி, "நீ, காசியாத்திரை முடித்து மீள்வை

---

* தடுத்தாட்கொண்ட புராணம். (௧0௬)

யேல், அநுக்கிரகம் புரிவோம்." என்று வலியுறுத்த; சுவாமிகள் பின்னும் பலமுறை வணங்கி, "கருணாநிதியே! சிறியேன் தேவரீருடைய கட்டளையின்படி, பசியினாலும், பிணிமுதலியவற்றினாலும்வருந்திக் காசியாத்திரையை முடித்துக்கொண்டு வருமளவும் தேகநிற்பதோ நிலையில்லை; அன்றி இறக்கினும், பின்னரும் இம்மானுடப்பிறவியே வாய்த்துத் தேவரீர் திருவருட்பேற்றிற்குப் பாத்திரனாகலும் நிச்சயமில்லை: ஆதலால், அடியேனுடைய குற்றத்தைச் சிறிதும் திருவுள்ளத்திற் கொள்ளாது, திருவருள்பாலித்தல் வேண்டும்." என்று பிரார்த்தித்தார். பரங்கருணைக்கடங்கடலாகிய மாசிலாமணித்தேசிகர் திருவுளமிரங்கி, "அன்பனே! அது இயலாதாயின், சிதம்பரஸ்தலத்தையடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு ஒருமண்டலம் வசித்து வருவாயாக." என்று ஆஞ்ஞாபித்தருளினார்.

சுவாமிகள், அவ்வாஞ்ஞையைச் சிரமேல் வகித்து, அநுமதிபெற்று, சிவிகையிலாரோகணித்துத் திருப்புள்ளிருக்குவேளூரையடைந்து, திருக்கோயிலினுள்ளே பிரவேசித்து, வைத்தியநாதசுவாமியையும் தையனாயகியம்மையும் முத்துக்குமாரசுவாமியையுந் தரிசித்து, வந்தித்துத் துதித்து, அத்தலத்தின் எல்லையைக் கடந்து புறத்திற் செல்லும்போது; முத்துக்குமாரக்கடவுள், சுவாமிகளிடத்தில் அருச்சகர்வடிவமாக எழுந்தருளி விபூதிகொடுத்து, "நம்மைக் குறித்துப் ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவாயாக." என்று கட்டளையிட்டு, அந்தர்த்தானமாயினார். உடனே சுவாமிகள் இங்ஙனம் எழுந்தருளினவர் நம்மையாண்டருளிய முருகக்கடவுளேயென்று தேறி நிலத்திலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து, மீண்டும் அத்திருப்பதியை யெய்தி எவ்வாறு பாடுவேனென்று திகைக்குங்கால், அக்கடவுளுடைய திருவருளினால் "பொன்பூத்த குடுமி" என்று ஓசரீரிவாக்கு எழுந்தது. சுவாமிகள் அதனை

பே முதலாகக்கொண்டு, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தத்தைப் பாட ஆரம்பித்து, செங்கீரைப்பருவம் பாடும்போது, "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாளன்" எனவும், தேவாருகிளவிக்கு என்று தொடங்குங்கால் "வாயூறி நின்றவன்" எனவும் இன்னனவாகத் தெய்வகதியாய்ப் பிறர்பா ணிகழ்ந்த சொற்களையும், இவையும் திருவருட் டிறம்போலும் என்று விடாதமைத்துப் பாடி முடித்து, அக் கடவுளுடைய சந்நிதியிலே பலருந் துதிக்கும்படி அரங்கேற்றிச் சிலநாள் அவ்விடத்திலே வசித்தார்.

பின்பு, சீர்காழியைப் பணிந்து, சிதம்பரத்தைச் சார்ந்து திரிகாலங்களிலும் வழுவாமல் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு அமருநாளில், சிதம்பர மும்மணிக்கோவை என்னும் ஓர் பிரபந்த மியற்றியருளினார். அந்நாளிலே, சுவாமி தரிசனத்துக்குப் பரிசனங்களோடு செல்லுந் தருணத்தில் வழியிலே தினந்தோறும் புராணப் பிரசங்கஞ் செய்துகொண்டிருந்த சைவாசாரியரொருவர் தவிர, அது கேட்பவர் யாவரும் எழுந்து, மரியாதை செய்வார்கள். அவர்களுள்ளே ஒருவர் ஒருநாள் புராணிகரை நோக்கி, "ஐயா! புலவர்திலகராயும், சிவாநுபூதிப் பெருவாழ்வினராயும்விளங்காநின்றசுவாமிகளைக் கண்டுதாங்கள்மாத்திரம் மரியாதை செய்யாதது என்னை?" என்று வினவ; அதுகேட்ட புராணிகர் "அவர் இலக்கண கவியா? வாககவிதானே!" என்றார். அதுபொறாத ஒருவர் சுவாமிகளுக்குத் திருச்செவிசாத்த; சுவாமிகள் திருப்புன்முறுவல்செய்து, "மிகமுயன்று அரிதிற் பெறுவது இலக்கணகவியும், அவ்வாறன்றி எளிதிற்பெறுவது வாககவியுமன்றோ? இதை யுணரா தவராயினும், அவர் சொல்லளவில் நம்மைத் துதித்தவரேயாயினர்; ஆயினும், அவர் சந்தேகத்தையும் நிவிர்த்தி செய்வோம்." என்று சிதம்பரச் செய்யுட்கோவை என்னும் ஓர் சிறந்த பிரபந்தத்தை அருளிச்செய்

தனர். புராணிகர் அந்நூலி லமைந்துள்ள அரிய இலக்கணங் களையும், சொற்சுவை பொருட்சுவைகளையும் நோக்கி, சுவாமி களையடைந்து வணங்கி வேண்டிக்கொள்ள; சுவாமிகள் திரு வுளமகிழ்ந்து, அளவளாவியபின்பு, சிவகாமியம்மை யிரட்டை மணிமாலை என்னும் ஓர் பிரபந்தத்தையும் செய்தருளினார்.

இவ்வாறு நியதிபூண்டு ஒருமண்டலம் வசித்து, அத்தலத் தை அருமையாகநீங்கி, தருமபுரத்தைச் சார்ந்து, ஞானசாரிய ரைத் தரிசித்து வணங்கி, அவரைத் துதித்தியற்றிய பண்டார மும்மணிக்கோவை என்னும் பிரபந்தத்தை அவர் சந்நிதானத் திலே அரங்கேற்றினார். உடனே ஞானசாரியர் திருவுள மிக மகிழ்ந்து சுவாமிகளை நோக்கி, "நீ இயல்பாகவே துறவியாயி னும் நமது வான்முறைப்படியே அத்துறவிற்குரிய காஷாய வஸ்திரமுதலிய முக்கிய சின்னங்களையும் தரித்துக்கொள்ளுக." எனப் பணித்து, அவரை யடிமைகொண்டு, அச்சின்னங்களையளி த்து, ஞானோபதேசமும் பாலித்தருளினார். சுவாமிகள்* அணுக் கத்தொண்டராகி அவ்வுழிவசிக்குநாளிலே ஒருநாள், தமக்கு முன்னே பரிசாகக் கிடைத்த திரவியங்களை அந்த ஞானசாரி யர் சந்நிதியில் வைத்து ஏற்றருளும்படி பிரார்த்திக்க; அவர் முன்னர்ப் பணித்தவாறே "நீ, காசியை யடைந்து இவற்றைக் கொண்டு தருமமியற்றுக." என்று திருவாய்மலர்ந்தருளினார்.

சுவாமிகள், அவ்வரியபணியை மேற்கொண்டு, அநுமதி பெற்று, அத்திரவியங்களை ஒட்டகங்களின்மீ தேற்றிக்கொண்டு

---

* அணுக்கத்தொண்டராகி வசிக்குநாளிலே அவ்வவ் வமையங் களில் "பூதங் கடந்த புகழ்க்கடற் சம்பந்தன் போதித்த சொல், வாதங் கடந்து மனோலய மாயிந்து மண்டலம்போய், நாதங் கடந்து நடுவெளி தாண்டி நலஞ்சிறந்த, போதங் கடந்தின்ப பூரண மாகிப் பொலிந்ததுவே." என்னும் இச்செய்யுள் முதலிய சில செய்யுள்கள் அருளியதாக வும் கூறுவதுண்டு.

பரிசனங்களோடு புறப்பட்டுத் தருமபுரத்தினெல்லையைக் கடந்து, சிவிகையில் ஆரோகணித்துச் சென்று, சிதம்பரமுதலிய தலங்களைவணங்கிக்காஞ்சீபுரத்தையடைந்து,சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வீற்றிருக்குநாளிலே, தம்மிடத்தில் அநேக வைஷ்ணவர்களோடு வந்து சமயக்கோட்பாட்டைப்பற்றி வாதித்த பிள்ளைப்பெருமாளையங்கார் முதலியோரைப் பல பிரபல நியாயங்கொண்டு வாதித்து, அவர்களை வென்று, அவ்விடத்தினின்றும் நீங்கி, இடையிலுள்ள திருக்காளத்திமுதலிய ஸ்தலங்களை யிறைஞ்சிக் காசியென்னுந் திவ்வியதலத்தி னெல்லையை யணுகினர். அணுகியவுடன் சிவிகையினின்று மிறங்கிக் கங்கையை வந்தித்து, அதிலே ஸ்நானஞ்செய்து தமது நியதிமுடித்து நோக்குங்கால், அக்கங்கையின் இருபுறத்திலுங்காடுகளடர்ந்து துருக்கர்களுடைய பள்ளியும் சமாதியுமே நிறைந்திருப்பதைக் கண்டு மனநொந்து, அன்றிரவு அருநித்திரை செய்தார். அப்போது அக்காடுகளால் மறைக்கப்பட்டிருந்த கேதாரத்தி லெழுந்தருளிய சிவபெருமான் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நம்மைப் பூசிப்பாயாக." என்று ஆஞ்ஞாபிக்க; சுவாமிகள் அவ்வாறே மற்றைநாட் பிராமமுகூர்த்தத்திலே கேதாரத்தை யடைந்து, காடுகளை அழிப்பித்து, அதனடுவே எழுந்தருளிய சிவபெருமானைப் பூசித்துத் துதித்து, பின்னர் விசுவநாதரை விசாலாக்ஷி யம்மையாரோடும் அருச்சித்து வணங்கி, காசிக்கலம்பகம் என்னும் ஓர் பிரபந்தத்தை அருளிச்செய்தார்.

அத்தலத்தில் வசிக்குநாளிலே, அங்ககரத்தை யாண்டு கொண்டு ஆங்கிருந்த டில்லிபாக்ஷாவைக் கண்டு வசனித்துத் தரும மியற்றுதற்குத் தக்க இடம்பெற விரும்பி, அவனுக்குரிய இந்துஸ்தான் பாஷையைத் தெரிவித்தருளும்படி சகல பாஷைகளிலும் வல்ல சரஸ்வதி தேவியைப் பிரார்த்தித்து,

சகலகலாவல்லிமாலை என்னும் பிரபந்தத்திலே ஒன்பதுபாடலருளியும், திருவருள் செய்யாமைகண்டு, "மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென், பண்கண் டளவிற் பணியச்செய்வாய்" என்னும் பத்தாவது பாட்டை அருளிச்செய்தார். உடனே சரஸ்வதியார் திருவருள்சுரந்து அப்பாஷையை விளக்கியருள; சுவாமிகள் களிகூர்ந்து, அவ்வரசன் சமுகத்திற் கெழுந்தருளினார். அவன் சுவாமிகளுடைய அருமைபெருமைகளைச் சிறிதும் அறியாதவனாகையால் சிங்காதனத்தி லிருந்துகொண்டே வரலாற்றை வினவ; சுவாமிகள் அதனாலே தமக்கு யாதொரு குறைவும் இல்லையாயினும், அவனுக்கு நேரிடும் கெடுதியை யோசித்துக் கருணைகூர்ந்து, "மஹாராஜாவே! உம்மை ஆசீர்வதிக்கவந்த நம்மை இப்படி நிறுத்திக்கொண்டு வினவுவது தருமமல்ல." என்று உரைத்தருளினார். அது கேட்ட அரசன் "உம்மிடத்திலே தெய்வீகங் கண்டாலன்றி உமது சரீரத் தோற்றத்திற்கு நான் மரியாதை செய்யேன்" என்று சொல்ல; சுவாமிகள் "அப்படியாயின் அதனை நாளைக்குக் காட்டுவோம்" என்று சொல்லி மீண்டு, மற்றைநாள் காளியினுடைய அநுக்கிரகத்தால்வந்த ஒரு சிங்கத்தின்மே லேறிக்கொண்டு, யாவரும் அஞ்சும்படி சபையிற் புகுந்து, அரசனை நோக்கி, "நீர் இருப்பது உயிரற்ற சிங்கம்; நாமிருப்பது உயிருற்ற சிங்கம்; ஆயினும் நீர் அஞ்சவேண்டுவதில்லை: உமக்குமாத்திரம் இது பசுவாகத் தோன்றும்." என்று சொல்லி, அதிலிருந்தபடியே அவன் வினக்களுக்கு உத்தரங் கொடுத்து அவன் வணங்கும்படி செய்து அங்கே வீற்றிருந்தருளினார்.

அக்காலத்திலே அரசனையும் பிறரையும் சந்தோஷிப்பிக்கும்படி நடாத்திய பிரசங்கங்களுள்ளே சிற்றின்பத்தைக் குறித்துச்செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு, துறவிகளாய் விருத்தப்

பருவமடைந்துள்ள அரசனுடைய குருமுதலியோர்களும் விரகத்தினாலே மயங்கிப் பூமியிலே விழுவார்கள். யுத்த விஷயமாகச் செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு, வயோதிகர்களும் கண்சிவந்து பற்களைக் கடித்து, ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு ஆரவாரிப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு விஷயங்களையும் பற்றிப் பிரசங்கிக்கும் பிரசங்கங்களிலும் தாங்கள் அந்தந்த மயமாதலை யடைந்தும், சில துருக்கர்கள் மற்றவைகளைப் பற்றிச் சந்தேகியாமல் சிற்றின்பத்தைக் குறித்துச் செய்த பிரசங்கத்தில் மாத்திரம் சந்தேக முடையராய், இவருக்கு அநுபவ மில்லாமலே சாஸ்திரத்தால் இவ்விஷயத்தில் இவ்வளவுபேச முடியுமாவென்று சுவாமிகளை நோக்கி, "இவர் பகற் சன்னியாசிபோலும்" என்பது முதலாகப் பலவாறு பிதற்றுவாராயினர்கள். அதுகண்டு சுவாமிகள் மிகவும் களிம்பேறிய ஒரு செப்புப் பாத்திரத்தை அழைப்பித்து, அவ்வாறு பிதற்றிய துருக்கர்களை நோக்கி, "நாளைக்கு இதை மருந்தில்லாமலே பொன்னாக்குதலாகிய ஒரு இரசவாதம் செய்வோம்." என்று சொல்லி, அப்பாத்திரத்தை அவர்கள் காணும்படி மலத்திலே புதைப்பித்தார்.

மறுநாள் அரசன்முதலிய பலரும்வந்து கூடியபின்பு, அப்பாத்திரத்தை யெடுப்பித்துச் சுத்திசெய்வித்துப் பொன்னென எதிரே வைக்கக்கண்டு, முதனாள் ஆக்ஷேபித்த துருக்கர்களுட் சிலர், "இது இரசவாதத்தாலன்று; மலம் புளிப்பாதலால் இப்படிப் பிரகாசிக்கின்றது." என்ன; உடனே சுவாமிகள் அவர்களை நோக்கி, "நீவிர் மலம் புளிப்பென்றீர்களே, அதையும் புசித்து அநுபவித்தீர்கள்போலும்" என்றார். அவர்கள் அது கேட்டு மிகவும் கோபங்கொண்டு சூழ; சுவாமிகள் அவர்களை நோக்கி, "நேற்றைக்கு இப்படிப்பட்ட கோபம் நமக்கும் உண்டாயிருக்குமே?" என்று சொல்லினர். அப்போ

மூது விவேகிகளாகிய அரசன் முதலாயினோர் அவர்களை யடக்கி, சுவாமிகளுடைய புத்தியை வியந்து புகழ்ந்தார்கள். மூடர்களாகிய அத்துருக்கர்கள் முன்னையினும் மிக்க பொறாமையுடையவர்களாய் ஒருநாள் அரசனிடத்திலே வந்து, "உமது நண்பராகிய குமரகுருபரசுவாமிகள் சாஸ்திரங்களில் வல்லவரேனும் அவர் கைக்கொண்ட தெய்வமோ பொய்." என்றார்கள். அதுகேட்ட அரசன் அதனைச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ்செய்ய; சுவாமிகள், உண்மையை யாவருக்கும் வெளிப்படுத்த விரும்பி, அத்துருக்கர்களுடைய உத்தேசப்படியே காய்ச்சப்பட்ட இரும்பைக் கொணர்வித்து, சைவசமயமே மெய்ச்சமயமானால், அச்சமயத்திற்குரிய சிவபெருமானுக்கு பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுமே திருவுருவமானால், அவ்வெட்டனுள்ளும் அக்கினியே பிரதானமானால், இது சுடமாட்டாதென்னுங் கருத்தோடு அவ்விரும்பைத் தமது திருக்கரத்திலே ஏந்தியருளினார். அதுகண்ட யாவரும் அதியற்புதமடைந்து சிவபெருமானே பரம்பொருளென்று தெளிந்து, சுவாமிகளைத் துதித்தார்கள். பொறாமை யதிகரித்துள்ள துருக்கர்களோ தங்கள் கருத்து முற்றாமையால் முகம் புலர்ந்து, தலை கவிழ்ந்து நிற்க; சுவாமிகள் யாதொரு சலனமுமின்றி அரசனுடைய வேண்டுகோளின்படியே அந்த இரும்பை எறிந்துவிட்டுச் சபையிலே வீற்றிருந்தருளினார்.

பின்னொருநாள் அத்துருக்கர்கள் அரசனையடைந்து, "துறவிகளுக்குச் சாதிபேதங்கூடாது என்று சாஸ்திரங்களிலே சொல்லப்பட்டிருப்பதால் துறவியாகிய குமரகுருபரசுவாமிகளுக்கு நமது கிருகத்திலே போஜனஞ் செய்விக்கவேண்டும்." எனக் கூறக்கேட்டு, அரசனும் அதற்குடன்பட்டவனாய்ச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ்செய்ய; அதற்குமிசைந்து, தமது

வேலைக்காரனொருவனை ஒருதட்டிலே சில செவ்வரத்தம்பூவை வைத்து ஒரு வெள்ளைப்பரிவட்டத்திலே மறைத்துக்கொண்டு வரும்படி நியமித்துவிட்டு, தாம் முற்சென்று; அங்கே தமக்காகப் படைக்கப்பட்டிருந்த மாமிசங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே வினவி, "பன்றிமாமிசம் ஒன்றுமாத்திரம் தவறியதுபோலும்; ஆனால் அது நம்மிடத்தி லிருக்கின்றது." என்றுசொல்லி, வேலைக்காரன் கொண்டுவந்த தட்டைவாங்கும்படி கைநீட்ட; அம்மிருகத்தின் பெயரையுஞ்சொல்லாத துருக்கர்களோடு அரசனும் வெட்கப்பட்டு அதனைத் தடுத்தான். சுவாமிகள் அரசனைத் தம்வயமாக்க விரும்பி, அங்கே படைத்துள்ள மாமிசங்களனைத்தையும் உற்று நோக்க; அவைகளெல்லாம், காய்கனி முதலிய பல அரிய தின்பண்டங்களாயின. அதுகண்ட, அரசன் சுவாமிகளை வணங்கித் தனது குறையையிரந்து, "இனி அடியேன்செய்யவேண்டிய பணியாது?" என்று வினவ, சுவாமிகள், "உமது ஆளுகையிலுள்ள இக்காசிமாநகரத்தில் நாம்எண்ணிவந்த தருமத்தைநடத்துதற்கு ஓரிடம் வேண்டும்." என்றார். அரசனும் "தேவரீருக்குப் பிரீதியான இடந்தருவேன்." என்று உடன்பட்டான். அன்றிரவு நித்திரை செய்யும்பொழுது கேதாரேஸ்வரர் சுவாமிகளுடைய சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே! நீ அரசனிடத்திலே உபயகருடன் வட்டமிடுமிடத்தைக்கேள்." என்று கட்டளையிட்டு மறைந்தருளினார். சுவாமிகள் விழித்தெழுந்து திருவருளைத் துதித்து, மற்றைநாள் உஷஸ்காலத்திலே கேதாரேஸ்வரரைத் தரிசித்துக்கொண்டு வெளியிலேவந்தபோது, அந்தக் கேதாரகட்டத்தின் அருகில் அரசனுடைய பள்ளிவாசலில் சிவாஞ்ஞைப்படி உபயகருடன் வட்டமிடக்கண்டு, திருவுளமகிழ்ந்து, அரசனிடத்திற் சென்று தெரிவித்தார். உடனே அரசன் யாதொருதடையுஞ் சொல்லாமல் அந்த இடத்தில் ஒரு பெரிய திருமடங்கட்டி, அதிலே தனது முகரும் வைத்து தத்தஞ்

செய்து, அவருக்கு வேண்டிய சிறப்புக்களையும் கொடுத்தான். இதுவே குமாரசாமிமடம் என்று சொல்லப்படுகின்றது.

சுவாமிகள் அத்திருமடத்திலே எழுந்தருளி யிருந்து கொண்டு, திருமலைநாயகர் கொடுத்த திரவியங்களைக்கொண்டு அவர் பெயரினால் ஒரு சத்திரங் கட்டுவித்து, தருமபரிபாலனஞ் செய்தமையே யன்றி, கேதாரநாதருக்கும் ஆலயமமைத்து, விதிப்படி நித்திய நைமித்திகங்களை ஏற்படுத்தி, காலந்தோறும் தரிசனஞ் செய்துகொண்டு அத்தலத்திலேயே வசித்திருந்தனர். ஒருநாள் தமது ஞானாசாரியரைத் தரிசிக்க வேண்டுமென்னும் அன்பு அதிகரித்தலால் கேதாரநாதரையும் விசுவநாதரையும் தரிசித்து விடைபெற்று பிரஸ்தானமாகி இடையிலுள்ள ஸ்தலங்களை இறைஞ்சி, தருமபுரத்தின் எல்லையையடைந்து, சிவிகையினின்று மிறங்கி, திருமடத்தினுள்ளேசென்று, ஞானாசாரியரைத் தரிசித்து வணங்கித் துதித்து திருவருள்பெற்றுச் சிலநாள் உடன்வசித்து, காசியை யடைந்தனர். இங்ஙனம் மூன்றுமுறைவந்து தரிசித்துச் சென்ற பின்பு நாலாவது முறையிலே ஞானாசாரியருடைய சந்நிதியிலே நின்று, "இனி அடியேனுக்கு எம்பெருமானுடைய தரிசனத்தைவிட்டு நீங்கிக் காசியிலிருக்க மனமில்லை." என்று விண்ணப்பஞ் செய்தனர். அப்போது ஞானாசாரியர் பிரிவாற்றாமையால் வருந்தும் சுவாமிகளை நோக்கி,

"காட்டிருந் தாலு மலையிருந் தாலுங் கருதரிய
நாட்டிருந் தாலு நமக்கென்ன காணல்ல தோர்கமலை
வீட்டிருந் தாண்டருள் ஞானப்ர காசன் விரைமலர்த்தாள்
கேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே."

என்னும் கட்டளைக் கலித்துறையை அருளிச்செய்து, சொக்கலிங்கமூர்த்தியையும் மீனாக்ஷியம்மையையும் கிரியாபூசையாக எழுந்தருளப் பண்ணிக்கொடுத்து, திருவருள்பாலித்து விடை

யளித்தனர். சுவாமிகள் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு வணங்கி விடைபெற்று, அங்கே எழுந்தருளி விளங்கும் சொக்கலிங்கமூர்த்தியின் சந்நிதியிலே நமஸ்கரித்தெழுந்து அரிதினீங்கிக் காசியையடைந்து, அரிய சிவதருமங்களை இயற்றிக்கொண்டு சிவாநுபூதிச் செல்வராய்ச் சிலகாலம் வீற்றிருந்து, வைகாசிமாதத்திலே, கிருஷ்ணபக்ஷ திருதியையிலே, சிவபெருமான் திருவடிநீழலிற் கலந்தருளினர்.

குமரகுருசுவாமிகள் சரித்திரச் சுருக்கம் முற்றிற்று.

குமரகுருபரசுவாமிகள்
சரித்திரசார பஞ்சகம்.

பதினான்குசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அருந்தமிழ்ப் பாண்டி நாட்டில்வண் புகழ்க்கை லாசமா புரத்தில் வே ளாள, ரரியசண் முகசி காமணிக் கவிரா யருஞ்சிவ காமியம் மையுஞ்செய்,—பெருந்தவ மதனாற் செந்தில்வேற் குகன்றன் பேரரு ளாலுதித் தொருவர், பேசுத லிலாதைந் தாண்டுகா றமரப் பெற்றவர் பெரிதுள மயர்ந்தே,—திருந்துமக் குகன்சந் நிதியினி லொருமண் டலத்தினிச் சேயுறு மூகைத், திறமகன் றிலதேன் மடிவமென் றுறையச் சிறுவர்சொப் பனத்தினிற் கடைநாட்,—பொருந்திவேள் குமர குருபரனெனப்பேர் புனைந்துநா வதனிலா றெழுத்தும், பொறித்தனு முடன்வாக் குடையராய்க் கந்தர் கலிவெண்பாப் புகன்றுபோற் றினரே. ()

போற்றியோர் குருவை யருள்கென வேண்டப் புகலுமை தடைப்படும் யாங்கப், புங்கவன் றனையே கொள்கென வசீ ரியிற்பகர் தலும் புற விடைகொண்,—டாற்றல்சான் மதுரைக் கயற்கண யகிபிள் ளைத்தமி ழியற்றுபு கைக்கொண், டடைதலும் பாங்குன் றறுதிரு மலைநாயகர்க்கம்மை கனவினிலருளத்,—தேற்றிய வாறே யெதிர்கொடு பணிந்தன் னவர்திரு முறையொடு மவரைத், திறல்கயத் தேற்றிச் சந்நிதி சேர்க்கத் திகழ்ந்தாங் கேற்றுழி வருகை,—சாற்றுறு பருவத் துடையி

ளங் கோலந் தயங்காா யகர்மடி யமர்ந்து, தானுவந் தருளி மணிவடந் தரிக்குந் தகைபெறீஇ முற்றுவித் தனரே. (உ)

முற்றுவித் ததன்பின் கனகமா திகளா லாட்டிமொய் கழல்பதத் தணிந்து, முதிர்ந்தபல் விருதும் வைத்தா சிறைஞ்ச முழுதுமேற் றம்பிகை குறமும்,—மற்றிரட் டைமணி மாலையு மதுரைப், பிரான்கலம் பகமுமம் மன்னர், வாஞ்சையி னிதி நெறிவிளக் கமுமே வனைந்தாரூர் நான்மணி மாலை,—தெற்றெனு விளம்பித் தருமைசார்ந் தொளிர்மா சிலாமணித் தேசிகர் கடாவச், செப்பிறுக் குங்காற் றிருத்தொண்டர் புராணத் தினிலேந்து போறி வென்ன,—வுற்றவவ் விருத்தத் தனுபவம் விளுவ வுறுவிடை நடைப்படு தலுமுன், ஞுயர்குகன் பணித்த துணர்ந்துட னிருக்கை யொருவியே பணிந்தனர் மாதோ. (௩)

பணிந்தெதிர் நின்றென் பிழைபொறுத் தாட்கொண் டருள்கெனப் பாவலுங் காசிப், பதியினி லன்றேற் றில்லையம் பதியிற் பரிந்தொர்மண் டலம்வசித் தெய்திற்,—றிணிந்தபே ரருளீ குவமெனப் பணிக்கச் சென்றுவே ளூர்தொழு தொருவுஞ், செவ்வியிற் செவ்வேளுருச்சகர் போலச் சேர்ந்துவெண் ணீறளித் தெமக்கு,—மணிந்துரை யொருபின் னிக்கவி யெனச்சொற் றகன்றுபொன் பூத்தவென் மொழிவா, ளளிக்கவங் கனமே துதித்துநற் றில்லை யணுகிமும் மணிக்கோவை யோடு,—தணிந்தொரு புலவர் பணிந்திடுஞ் செய்யுட் கோவையுந் தரித்திறைக் குமைக்குந், தகவிரட் டைமணி மாலையு மிலந்து தந்திடு தருமையெய்ந் தனரால். (௪)

எய்ந்துமும் மணிக்கோ வைத்துதி யியம்பி யேற்றுப தேசமும் விடைபெற், றேகுழிப் பிள்ளைப் பெருமாளை யங்கா ராதிய ரிகல்காஞ்சி யினில்வென்,—றுய்ந்துகா சியிற்கே தாரமுன் விளக்கிக் கலம்பக மறைந்தகி லேசர்க் கருட்கலா வல்லி மாலைசொற் றிந்துஸ் தானபா ஷையில்விற லமைந்தே,—பாய்ந்தெழு மரிமேல் டில்லிபா ஷாவின் பாலுறீஇப் பலபிரசங்கம், பண்ணியுந் தீர்த்தம் பந்தமு வியுமுன் பலவுணவாக்கியும் வேட்கை,—வாய்ந்துறச் செய்தன் னவர்புரி மடத்தில் வளர்த்தறம் பலவும்வை காசி, மதிகுறை பக்கத் திருதிகைத் திதியிற் சிவனருட் கழலின்மன் னினரே. (௫)

குமரகுருபரசுவாமிகள் சரித்திரசாரபஞ்சகம் முற்றிற்று.

ஸ்ரீ

நீதிநெறிவிளக்கம்

மூலமும் உரையும்.

நீதி மனுமுதலிய நூல்களில் விதித்தனவற்றைச் செய்த
லும், விலக்கினவற்றை ஒழிதலுமாகிய முறைமை, நெறி அது
வாகியவழி, விளக்கம் அதனைக் காட்டுந்தீபம். இப்பொருளமை
ந்த இம்மூன்று சொற்களும், முன்னது பண்புத்தொகை
நிலைத்தொடரும், பின்னது இரண்டாம் வேற்றுமை யுருபும்
பயனும் உடன்தொக்க வேற்றுமைத் தொகைநிலைத்தொடரு
மாகத் தொக்க நீதிநெறிவிளக்கமென்பது நீதியாகிய நெறி
யைக்காட்டும் தீபம்போல்வதாகிய நூலுக்கு இரண்டாம் வேற்
றுமைத்தொகைநிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்
காரணக்குறியாயிற்று. எனவே பேதைமையால் நீதியல்லாத
நெறியில் செல்வார்க்கு அப்பேதைமையாகிய இருளைப்போக்கி
நீதிநெறியைக் காட்டுவதென்பது கருத்து. மக்கள் ஒழுகல்
முறைமை, முறைமையல்லாமை என்னும் இரண்டே அன்றி
வேறின்மையால் நீதிநெறி என்னுந் தொடரைப் பண்புத்
தொகைநிலைத்தொடராக உரைத்தாம். ஒற்றுமைப்பொருள
தாகிய ஆறாம்வேற்றுமைத்தொகைநிலைத் தொடரெனினும்
பொருந்தும். விளங்கு - பகுதி, அம் - புடைபெயர்ச்சிப் பொரு
ண்மை விகுதி, பகுதி மெல்லொற்று வல்லொற்றானது வலித்
தல், உகரக்கேடு சந்தி, இவ்வாறு முடிந்துநின்ற விளக்கமென்
னுந் தொழிற்பெயர் தீபத்தை யுணர்த்தலால் தொழிலாகு
பெயர். தான் காரணமாகநின்று மற்ற பொருள்கள் விளங்குத

லாகிய காரியத்தைச் செய்கின்றமையால் காரியவாகுபெயரு மாம். இங்ஙனங் கொள்ளாமல் விளங்குதலுடையதென்னும் பொருளில் அம் வினைமுதற்பொருண்மை விகுதி எனக் கொண்டு தொழிலடியாகப் பிறந்த பெயரெனினும் இழுக்காது.

கடவுள் வாழ்த்து.

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் - நீரில்
எழுத்தாகும் யாக்கை நமராங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

(பதவுரை.) இளமை - இளமைப்பருவம், நீரில்-நீரிலுண்டாகும், குமிழி(ஆகும்)-குமிழிபோல நிலையில்லாததாகும்; நிறைசெல்வம் - குறைவில்லாத செல்வம், நீரில்-நீரினிடத்து, சுருட்டும்-(காற்றினால்) சுருட்டப்படும், நெடு திரைகள் (ஆகும்)-நெடுமையாகிய அலைகள் போல நிலையில்லாததாகும்; யாக்கை - உடம்பு, நீரில் - நீரிலெழுதிய, எழுத்து ஆகும் - எழுத்துப்போல நிலையில்லாததாகும்; (ஆதலால்) நமராங்காள் - நம்மவரே, எம்பிரான்-நம் கடவுளுடைய, மன்று-சபையை, வழுத்தாதது - துதியாமலிருப்பது, என்னே-யாது காரணமோ, என்றவாறு.

(விசேஷவுரை.) கருத்து - இளமையும், செல்வமும், உடம்பும் நிலையில்லாதன ஆதலால் விரைந்து கடவுளைத் துதிக்கவேண்டுமென்பது. ஆகும் என்பதனைக் குமிழி திரைக ளென்பவற்றோடுங் கூட்டுக. இது கடைநிலைத்தீவகம். சுருட்டும் - செயப்பாட்டு எதிர்காலப் பெயரெச்சம்; சுருள் - தன்வினை முதனிலை, டு-பிறவினை படுத்தும் விகுதி, ளகரம் டகரமாதல் சந்தி, இவ்வாறு முடிந்துநின்ற சுருட்டு - பகுதி, அ-சாரியை, ப் - சந்தி, படு-செயப்பாட்டு வினைப்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்தும் ஒரு பகுதி, உம் எதிர்காலப் பெயரெச்ச

விகுதி, உகரக்கேடு சந்தி, இங்ஙனம் முடிந்த சுருட்டப்படும் என்பது பொருவிகுதி முதலியவை தொகுக்கப்பட்டு நின்றது. குமிழி-தொழிலடியாகப் பிறந்த பெயர்; குமிழ் - பகுதி, இ - வினைமுதற்பொருண்மை விகுதி; இப்பகுதி முகிழ் என்றும் முதனிலைத் தனிவினைப்பெயர் தசை சதை, நாரிகேளம் நாளிகேரம், மரகதம் மரதகம் என எழுத்து நிலைமாறி நின்றாற்போல் நின்றசொல். வினைமுதற்பொருண்மை இகர விகுதி புணர்ந்து கெட்டுநின்ற பெயராகிய திரை பன்மை விகுதியாகிய கள் விகுதியேற்றுநின்றது. எழுத்து எழுதப்படுவதென்றும் பொருளில், எழுது-பகுதி, ஐ - செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, ஐ விகுதி புணர்ந்து கெட்டமாத்திரத்தில் தகரவொற்றுத் தோன்றிநின்றது. உருக்கு, பெருக்கு என்பனபோல முதனிலை திரிந்த தொழிற்பெயரெனக்கொண்டு எழுதுவதினாற் றோன்றிய வரிவடிவிற்கு ஆனது காரணவாகுபெயர், அன்றித் தொழிலாகுபெயரெனினும் பொருந்தும். யாக்கை: யா-பகுதி, க்-சந்தி, கை -புடைபெயர்ச்சி விகுதியால் முடிந்த தொழிற்பெயரெனக் கொள்ளின் தொழிலாகுபெயரெனவும், யா-பகுதி, க்-சந்தி, கு-சாரியை, ஐ-செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, இவற்றான் முடிந்த தொழிலடியாகப் பிறந்த பெயரெனவுங் கொள்ளலாம். நமரங்காள், நமர்களென்றும் முறைப்பெயர் விளியேற்று, ஈற்றகரம் ஆகாரமாகி, இடையே அம் முச்சாரியை பெற்றது. என் எவனென்பதன் மரூஉ. எ-இரக்கப்பொருளது. வழுத்தாதது - எதிர்மறைத் தொழிற்பெயர்; வழுத்து - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்து மொருபகுதி, த் - எழுத்துப்பேறு, அ - சாரியை, து - புடைபெயர்ச்சி விகுதி. இது பாயிரம்.

கல்வி.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும் - உறுங்கவலொன்

றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

(இ-ள்.) அறம் - தருமத்தையும், பொருள் - செல்வப்பொருளையும், இன்பமும் - இன்பத்தையும், வீடும்-மோட்சத்தையும், பயக்கும்-கொடுக்கும்; புறங்கடை - தலைவாயிலில் நல் இசையும்-குற்றமில்லாத கீர்த்தியையும், நாட்டும் - நிலைபெறச் செய்யும்; உறும் - வரவேண்டியதாகிய, கவல் ஒன்று - ஒருகவலை, உற்றுழியும் - நேரிட்டவிடத்தும், கைகொடுக்கும் - உதவிசெய்யும்; (ஆகலால்) சிறு உயிர்க்கு - சில வாழ்நாளையுடைய உயிர்களுக்கு, உற்ற துணை - நீங்காததுணை, கல்வியின் ஊங்கு - கல்வியினும் மேற்பட்டது, இல்லை - இலதாம், எ - று.

(வி-ரை.) கருத்து - விதிவிலக்குகளைத் தெரிவித்துப் பொருள் தேடி இன்பத்தை அநுபவிக்கு முறையையும் மோட்சத்தையுந் தரவும், நல்ல கீர்த்தியைத் தரவும், துன்பத்தினின்று நீங்குவிக்கவும் வல்லது கல்வி இம்மைப்பயன். மறுமைப்பயன், மோட்சம் இம்மூன்றையுந் தருவதாதலால் முதலில் அறத்தையும், இம்மை மறுமைப்பயன்களைத் தருவதாதலால் அதன்பின் பொருளையும், இம்மைப்பயனொன்றனைத் தருவதாதலால் ஈற்றில் இன்பத்தையும் முறையே வைத்தும், அவற்றோடு, சாத்தியமாய் நிரதிசய நித்திய இன்பத்ததாகிய வீட்டிடை வேற்றுமை தோன்ற அம்மூன்றையும் அறம்பொருளின்பமென ஒருசேரவைத்து உம்மை கொடுத்துப் பிரித்தும், மக்கள் அடைதற்குரிய பொருள் இந்நான்குமாதலால், வீடுமென அவற்றுடனெண்ணியும், இந்நான்கையுமே அன்றித் தன்னைப்பற்றியுளதாம் கீர்த்தியையும் நேரிட்ட இடுக்கணினின்று நீக்கும் உபாயத்தையுந் தரவல்லதாதலால் பயக்கும், நாட்டும், கைகொடுக்கும் எனத் தனித்தனிப் பயனிலை கொடுத்துங் கூறினர். இன்பம்-பண்புப்பெயர்; இன்-பகுதி, ப்-பகுதிப்பொருள் விகுதி; இவ்வாறன்றி மாட்சிமை என்பதுபோல, இன் - பகுதி, பு- பகுதிப்பொருள் விகுதி, அம் - அப்பொருளதாகிய விகுதி

மேல் விகுதி எனினும் பொருந்தும். பயக்கும்-செய்யுமென் வாய்பாட்டெதிர்கால வினைமுற்று; பயம் என்னும் பெயரடியாகத் தோன்றிய பய-பகுதி, க்-சந்தி, கு-சாரியை, உம்-எதிர்கால முற்றுவிகுதி, உகரக்கேடு சந்தி; இது பெயரெச்சமே வினைமுற்றானது. கடைப்புறம் என்னும் ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் பின்முன்னாக நின்றதாதலால் புறங்கடை இலக்கணப்போலி. அறம்பொருளின்பம் வீடு இவற்றைத் தருதலே அன்றி எனப் பொருள்தரலால் இசையும் என்னும் உம்மையும், நேரிடாதபோதே அன்றி எனப்பொருள் தருதலால் உற்றுழியும் என்னும் உம்மையும் இறந்தது தழீஇய எச்ச உம்மை. கல்வியினென்னும் ஐந்தனுருபு எல்லைப்பொருளது. ஊங்கு - மிகுதிப்பொருள் தருவதோரிடைச்சொல். சிற்றுயிர் - செம்பொனணியணிந்த செவியுடையாரைச் செஞ்செவியர் என்பதுபோல்வதாகிய ஒரு குறிப்பு. வீடு-முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; இது முற்ற விடுதலாகிய காரணத்தாலுண்டாம் காரியமாகிய முத்திக்கு ஆதலால் காரணவாகுபெயர். கல்வியென்னும் இவ்விகுதித் தொழிற்பெயர் அறிவின் மேலது. துணை-பண்பாகுபெயர். துணை-எழுவாய், இல்லை-பயனிலை. (க)

கல்வி.

தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி - நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீ ரின்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது.

(இ - ள்.) முற்றிழாய் - தொழில் முடிந்த ஆபரணத்தையுடையாளே! கல்வி - கல்வியானது, தொடங்குங்கால் - (தன்னை) ஆரம்பிக்குங்காலத்தில், துன்பம் ஆய் - துக்கத்தைத் தருவதாகி, இன்பம்-சுகத்தை, பயக்கும் - (பின்) தரும்; (அல்லாமலும்) மடம் - அறியாமையை, கொன்று - இல்லாமற்செய்து, அறிவு - அறிவை, அகற்றும்-விசாலமாக்கும்; நெடு காமம் - பெருங்காமமானது, முன் - ஆரம்

பத்தில், பயக்கும் - கொடுக்கிற, சின்மை நீர - அற்பத்தன்மையுள்ள, இன்பத்தின் - சுகத்தைப்பார்க்கிலும், பின் - பின்பு, பயக்கும்-கொடுக்கிற, பீழை - துக்கம், பெரிது - மிகுந்ததாகும், எ-று.

(வி-ரை.) எனவே கல்வியையே மிகுதியும் பயிலவேண்டும் என்பது இசையெச்சம். காலமென்னும் பெயர் காலெனக் கடைக்குறையாய்வந்தது. துன்பமென்னுங் காரியத்தைத் தருவதாகிய காரணத்தைத் துன்பமாயென்றது உபசாரவழக்கு, அகற்றும்-பிறவினையாகிய வினைமுற்று; அகல்-தன்வினைப்பகுதி, று-பிறவினைப்படுத்தும் விகுதி, லகரம் றகரமானது சந்தி, இவ்வாறு முடிந்துநின்ற அகற்று-பகுதி, உம்-எதிர்காலவிகுதி, உகரக்கேடு சந்தி; இது பெயரெச்சம் வினைமுற்றானதெனக. காமத்துக்குச் சிறுமை அடைகொடாது நெடுமை அடைகொடுத்தது அறிவிலான் அதனைப் பெருமையாகக் கொள்ளுதல்பற்றி எனக. முன், பின் என்பன பண்புப்பெயர்கள். முன் என்பது ஐ விகுதி பெற்று முன்னை எனவும், பு விகுதி பெற்று முன்பு எனவும், னர் விகுதி பெற்று முன்னர் எனவும், அம் விகுதிபெற்று முன்னம் எனவும் வரும். பின் என்பது அம் விகுதி ஒழிந்தவற்றைப் பெற்று வருதல் அறிக. னர் விகுதியை அர் விகுதியெனக் கொள்வாரொருவர்; அது நன்றென்பதற்குப் பொருந்தாமையறிக. சின்னீர் - பண்புத்தொகை நிலைத்தொடர்; விரிந்தால் சின்மையாகிய நீர் என விரியும். சின்மை என்னும் அடை நீரென்னும் பகுதியை அடுத்து வந்தது. சிறுமையைச் சின்மை என்பது வழக்கெனவும், மரபுவழுவமைதி எனவுங் கூறுவர் சேனாவரையர் முதலியோர். நீர-பண்படியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். முற்றிழையென்னும் வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர் விளி அடைந்து, ஈற்றைகாரம் ஆயெனத் திரிந்தது. (௨)

சொல்வன்மை.

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவிபாச் - சொல்வளம்

மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
செல்வமு முண்டு சிலர்க்கு.

(இ - ள்.) கல்வியே - கற்றகல்வியே, கற்பு உடைய - கற்பை யுடைய, பெண்டிர் (ஆக) - மனைவியாகவும், அப்பெண்டிர்க்கு - அம்மனைவியர்க்கு, ஈர் கவியே - இனிமையாகிய செய்யுளே, செல்வப்புதல்வன் ஆக - செல்வப்புத்திரனாகவும், சொல்வளம் (ஏ) - (கேட்போர்க்குப் பொருள் அறிவுறுத்துகின்ற) சொல்லினது வளப்பமே, மல்லல் - மிகுதியாகிய, வெறுக்கை ஆக - பொருளாகவும், (இருத்தலும் அல்லாமல்) சிலர்க்கு - சிலருக்கு, மாண் அவை - (கல்வியறிவு கேள்விகளால்) மாட்சிமைப்பட்ட சபையை, மண் உறுத்தும் - அலங்காரப்படுத்தவல்ல, செல்வமும் உண்டு - செல்வமும் உளதாம், எ-று.

(வி-ரை.) மாணவை மண்ணுறுத்துஞ் செல்வமுளதாதலருமை நோக்கிச் செல்வமும் என்றமட்டிலமையாமல், சிலர்க்கென்றுங் கூறினர். ஏ-பிரிநிலை. இருத்தலும் அல்லாமல் என்பது இசையெச்சம். உம்மை இறந்தது தழீஇயதனோடு உயர்வுசிறப்புப்பொருளது, உடைய என்னும் குறிப்புப்பெயரெச்சமும், ஆக என்னும் செயவெனெச்சமும் ஈறுதொகுத்தலாய் நின்றன. பெண்டிரென்பது ஒருவர் மனைவியை வேறொருவர் கூறுங்கால் பன்மையாற் கூறுதல் முறைமையாதலால் அவ்வாறு உயர்வுபற்றிவந்த பால்வழுவமைதி; பெண்டிர்-பண்படியாகப் பிறந்த பெயர்; பெண்டு-பகுதி, இர்-பல்லோர்படர்க்கை விகுதி, உகரக் கேடு சந்தி. பெண்டு-பண்புப்பெயர்; பெண்-பகுதி, து - பகுதிப்பொருள் விகுதி, தகரம் டகரமானது சந்தி. கவிக்கு ஈரமாவது கேட்போர் செவிக்கும் மனத்துக்கும் இனிமையா யிருத்தல். கற்புடைப் பெண்டிரும், புதல்வனும், வெறுக்கையும், செல்வமும் தம்முள் சம்பந்தமுடைமையினால் இச்செய்யுள் இயைபுருவகம். ஈர்ங்கவியாம் வெறுக்கையாம் எனப் பாடமானால், பெண்டிரென்பதனீற்றில் ஆம் என்னுஞ் சொல்லைத் தந்து மனைவியராம், புத்திரனும், பொருளாம் என உரைக்க.

மண்-முதனிலைத் தொழிற்பெயர், (அலங்கரித்தல்). உறுத்தும் - பிற வினையாகிய பெயரெச்சம், (அடைவிக்கும்); உற-பகுதி, த்-சந்தி, து-பிறவினைபடுத்தும் விகுதி, உம்-எதிர்காலப் பெயரெச்சவிகுதி, உகரக் கேடு சந்தி. (௩)

சொல்வன்மை.

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும் - உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து.

(இ-ள்.) எத்துணைய ஆயினும் - எவ்வளவின ஆனாலும், இடம் அறிந்து - நல்ல ஆசிரியனைத்தெரிந்து, கல்வி - கல்விகளை, உய்த்து உணர்வு - ஆராய்ந்து அறிதல், இல் எனின் - இல்லையானால், இல் ஆகும் - (அக்கல்விகள்) இல்லையாம்; உய்த்து உணர்ந்தும் - அவ்வாறு ஆராய்ந்தறிந்தும், சொல் வன்மை - (பிறருக்கு ஏற்கச் சொல்லும்) சொல்லினது வன்மை, இன்று எனின் - இலதானால், என் ஆம் - என்ன பயன்படும்; அஃது உம் உண்டு எல் - அச்சொல்வன்மையும் உளதானால், பொன் மலர்-பொன்னாற்செய்தமலர், நாற்றம் உடைத்து-மணமுடையதுபோலும், எ - று.

(வி-ரை.) கணிதம், எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் முதலிய பலவகையதாதலால் கல்வியை 'எத்துணைய' எனப் பன்மையாற் கூறினர். எத்துணையவாயினு மென்ற உம்மை மிகுதி குறைவு இரண்டிற்கும் பொதுவாய் நிற்றலால் உயர்வு சிறப்பினோடு இழிவுசிறப்பில் வந்ததென்க. அஃதென்பதனீற்றில் இறந்தது தழீஇய எச்சவும்மை தொகுத்தல். எல் - எனிலென்பதன் மரூஉ. உய்த்தல்-செலுத்தல்; அது அறிவை நுழைத்தலென்பது. பொன்மலர் - மூன்றும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகக் கொள்ளுதலே அன்றி, பண்புத்தொகை நிலைத்தொடராகக்கொண்டு, பொன்னுகிய மலரெனவிரித்துப் பொருள்

கொள்ளலுமாம். நல்லாசிரியனிடத்தே கல்வி கற்கவேண்டுமாதலால் இடம் அவனுக்காயிற்று. எத்துணையவாயினும் கல்வியிடமறிந் துய்த் துணர்வு என்பதற்கு, கல்வி எத்துணைய ஆயினும்-கற்ற கல்விகள் எவ்வளவு மிகுதியுடையனவாயிருப்பினும், இடம் அறிந்து - (ஒருநூலில்) இடந்தெரிந்து, உய்த்து - யூகித்து, உணர்வு - (இங்கு இதுவே பொருளெனத்) துணிதல் என உரைத்தலுமாம். உம்மை-உயர்வு சிறப்பு. இல்லாகும் என்பதற்கு அவை கல்விகளல்ல என்பது கருத்து. உணர்ந்துமென்ற உம்மை உயர்வுசிறப்பு. என் - எவனென்பதன் மரூஉ. பொன்மலர் நாற்றமுடைத்தென்பது அபூதவுவமை. போலும் என்பது சொல்லெச்சம். (௭)

புலவர் சிறப்பு.

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும் - நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று.

(இ-ள்.) அவை - (கற்றவர் கூடிய) சபையை, அஞ்சி - பயந்து, மெய் விதிர்ப்பார் - உடம்பு நடுங்குவோருடைய, கல்வியும் - கல்வியறிவும், கல்லார் - மூடர்களுடைய, அவை அஞ்சாத - சபையை அஞ்சாத, ஆகுலச்சொல்லும் - ஆரவாரமாகியசொல்லும், நவை அஞ்சி- (பொருள்தேடுங் காலத்தில் பழிபாவங்களாகிய) குற்றத்தைப் பயந்து, ஈந்து - (இரப்பவர்க்குக்) கொடுத்து, உண்ணார் - (தாமும்) அநுபவியாதவருடைய, செல்வமும் - செல்வப்பொருளும், நல் கூர்ந்தார் - தரித்திருடைய, இன்நலமும் - (ஈகைக்குணமுதலிய) இனிமையாகிய நல்ல தன்மையும், பூத்தலின் - உண்டாயிருப்பதினும், பூவாமை - உண்டாகாமையே, நன்று - நல்லது, எ-று.

(வி-ரை.) அவையஞ்சி என்பதில் அவைக்கு அஞ்சி என நான்காவதை விரிப்பினும் அமையும். இது மற்ற இரண்டிற்கும் பொரு

தாம். ஈந்து என்றதனால் இரப்பவரென்பது பெற்றாம். ஈத்து-எதுகைத் தொடை நோக்கிவந்த வலித்தல் விகாரம். அஞ்சா-சீர்தளை நோக்கிவந்த தொகுத்தல்விகாரம். மெய்விதிர்ப்பார்-வினைவழுவமைதி. சிறந்தபொருள் அமைந்திராமையினால் கல்லார்சொல்லை 'ஆகுலச்சொல்' என்றார். ஈகைக்குணமுதலிய தன்மையாவன-ஈகைக்குணம், இளமை, அழகு, கல்வியறிவு என்பன. விதிர்ப்பார்-எதிர்காலவினையாலணையும் பெயராயினும், பகர இடைநிலை இயல்பு குறித்து நின்றதெனவுணர்க. நல்கூர்ந்தார் - நல்குரவு என்னும் பெயரடியாகப் பிறந்த இறந்தகால வினையாலணையும் பெயர்; நல்கூர்-பகுதி, த்-சந்தி, த்-இறந்தகால இடைநிலை, ஆர்-பல்லோர்படர்க்கை விகுதி, சந்தித்தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்; நல்கூர்தல்-தொழிற்பெயர். நன்று-ஒன்றன்படர்க்கைக் குறிப்புவினைமுற்று; நல் - பகுதி, று - ஒன்றன்படர்க்கை விகுதி, லகரம் றகரமானது சந்தி, அது னகரமானது மெலித்தல் விகாரம். பூவாமை-எதிர்மறைத் தொழிற்பெயர்; பூக்கின்றமை, பூத்தமை என நிகழ்கால இறந்தகாலத் தொழிற்பெயர்க்கும், ஆண்மையெனக் கால இடைநிலை பெறாத தொழிற்பெயர்க்கும் இம்மைவிகுதி வருதல்காண்க. கல்விப் பொருளின தன்மை இன்மைகளைக் கூறுவார் செல்வப்பொருளின தன்மையின்மைகளையும் உடன் கூறினமையால் இது பழிப்பொப்புமைக் கூட்ட அணி. (௫)

புலவர் சிறப்பு.

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

(இ-ள்.) வண் தமிழோர் - வளமாகிய தமிழ்ப்புலவர், செய்யும் - படைக்கின்ற, மற்று உடம்பு - (செய்யுள்களாகிய) உடம்புகள், புகழ்

கொண்டு - புகழை அடைந்து, மலரவன் செய் - பிரமன்படைத்த, வெறு உடம்பு - பயன்படாத உடம்புகள், மாய்வனபோல - அழிவன போல, மாயா-அழிவன அல்ல; (ஆகலால்) கலைமகள்-சரசுவதியினது, வாழ்க்கை - வாழ்க்கையானது, முகத்தது எனினும் - (இருவர்க்கும்) முகத்தினிடத்ததாயினும், மலரவன் - அப்பிரமன், இவர்க்கு - இத் தமிழ்ப்புலவர்க்கு, ஒவ்வான் - ஒப்பாகான், எ-று.

(வி-ரை.) வண்டமிழோ ரென்பதை ஈற்றடியிலும், அங்குள்ள இவரென்பதை அச்சொல்நின்ற இடத்திலுங்கூட்டிப் பொருளுரைக்க. உம்மை-உயர்வுசிறப்பு. முகத்தது - இடமடியாகப் பிறந்த குறிப்புவினை முற்று; முகம்-பகுதி, அத்து, அ-சாரியைகள், து - ஒன்றன்படர்க்கை விகுதி, பகுதி ஈற்று மகரமும், சாரியை முதலகரமும், ஈற்றுகரமும் கெடுதல் சந்தி. மலரவன் - இடமடியாகப் பிறந்தபெயர்; வினைமுதற் பொருண்மை விகுதியாகிய இகரம் புணர்ந்து கெட்ட மலர்-பகுதி, அ-சாரியை, வ்-சந்தி, அன்-ஆண்பாற்படர்க்கை விகுதி. பின்னுள்ள மல ரவன் சுட்டுப்பொருளது. ஒவ்வான்-இடைச்சொலடியாகப்பிறந்த எதிர் மறை வினைமுற்று; ஒ-பகுதி, வ்-உடம்படு மெய்யாகிய சந்து, வ்-தன் னொற்றிரட்டலாகிய சந்தி, ஆ - எதிர்மறை விகுதி, அனைத்து மொரு பகுதி. ஆன்-ஆண்பாற் படர்க்கைவிகுதி, விகுதி ஆகாரக்கேடு முதற் குறையாகிய விகாரம், குச் சாரியைபெறின் ஒக்கானெனவரும். மற்று-பிறிதென்னும் பொருளது. கலைமகள் வாழ்க்கை - ஆறுவது வினை முதற்பொருண்மையில் வந்த காரகம். இது இருபொருள் வேற்றுமைச் சமவணி. (௬)

கல்வியோம்பல்.

நெடும்பகல் கற்ற வவையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி - கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால்.

(ரு-ள்.) நெடு பகல் - பலநாள், கற்ற - கற்கப்பட்ட நூற்பொருள்கள், அவையத்து - (கற்றுவல்லோர் கூடிய) சபையினிடத்து, உதவாது - ஞாபகத்துக்குவாராமல், உடைந்துளார் - (தம்மோடு வாதிப்பவருக்குத்) தோற்றவராது, உட்குவரும் - நாணம் உண்டாகும், கல்வி - கல்வியானது, தீது என்று - கொடியதென்று, நீப்பு அரிது - நீக்குதல் கூடாது; (ஆதலால்) நடு பகல்-நடுப்பகலில், ஏதிலான்பால் - அயலானிடத்து, கண்ட-(இருக்கக்) கண்ட, இல்லினும்-தம்மனையாளினும், பொல்லாதே - கொடியதே, எ-று.

(வி-ரை.) கடுமைப் பண்பு கடுநட் பென்பதிற்போல மிகுதியை உணர்த்தியது. கற்ற-செயப்பாட்டு வினையாகிய இறந்தகால வினையாலணையும்பெயர்; கல்-பகுதி, கு, அ-சாரியைகள், உகரக்கேடும், பகரத்தோற்றமுஞ் சந்தி, படு - செயப்பாட்டு வினைப்பொருண்மைவிகுதி, அனைத்தும் ஒருபகுதி, அ-பலவின்படர்க்கை விகுதி, குற்றியலுகரமாதலால் பகுதி ஒற்றிரட்டியதும், உகரக்கேடும் சந்தி, இதில் படு விகுதியும், அதுபற்றிவந்த சாரியை முதலியவும் தொகுக்கப்பட்டன. உடைந்துளார்-பல்லோர்படர்க்கை இறந்தகால வினையாலணையும்பெயர்; உடை-பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உள் - பகுதிப்பொருள் விகுதி, அனைத்துமொருபகுதி, ஆர்-பல்லோர்படர்க்கை விகுதி, சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம். இதற்கு எதிர்மறை உடைந்திலார் என்பது. உட்கு - முதனிலைத் தொழிற்பெயர்; விகுதிபெற்று உட்கல், உட்குதல் எனவரும். உட்குவரும் - எழுவாய்த் தொகாநிலைத் தொடர்; இது வெருவரும், வெருவந்து, வெருவந்தான் என்பனபோலப் பயின்று வாராமையால் இருசொல்லாகவே கொள்க ஏதிலான்-பண்படியாகப் பிறந்தபெயர்; ஏதில் - பகுதி, ஆன் - ஆண்பாற் படர்க்கை விகுதி; சம்பந்தம் யாதுமிலானென்பது பொருள் ஏது வென்பதற்குக் காரணமெனப் பொருள்கூறின், அது வடமொழியாதலால் உகரங் கெடாது வரல்வேண்டுமென மறுக்க. ஏதிலான்பாலென்றது இடக்கரடக்கல். பொல்லாது - குறிப்பு வினைமுற்று; பகுதி பொல்லா; இது

தனக்குரிய பகுதிப்பொருள் விகுதி பெறின் பொல்லாங்கு, பொல்லாப்பு எனப் பெறும். பொன்மை எனின் குற்றமாம். ஏ-தேற்றம். (எ)

கல்வியோம்பல்.

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல் - கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

(இ-ள்.) தாம் - தாங்கள், வருந்தி - வருத்தப்பட்டு, கற்றன - கற்றநூற்பொருள்களை, ஓம்பாது - (சிந்தித்தல் முதலானவற்றால்) பாதுகாக்காமல், மற்று சில உம் - வேறு சில நூல்களையும், பரிந்து - வருந்தி, கற்பான் - கற்க, தொடங்கல் - ஆரம்பித்தல், கைத்தலத்த - கையிலுள்ளன ஆகிய, கரு தனம் - மிக்கபொருள்களை, உய்த்து-தாங்கிக் கொண்டுபோய், சொரிந்திட்டு - எறிந்து, ஆங்கு-எறிந்த இடத்தில், அரிப்பு அரித்து - அரிப்புத் தொழில்செய்து (அதாவது அரித்து), எய்த்து - இளையாநின்று, பொருள் செய்திடல் - பொருள் சேர்த்தல் போலும், எ-று.

(வி-ரை.) மற்று பிறிதென்னும் பொருளது. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. அரிப்பரித்து என்பது போர்பொருதான் என்பதுபோல நின்றதாதலால் அதற்கு அரிப்புச்செய்து எனப் பொருள் சொல்லப்பட்டது. இவ்வாறன்றி அரிப்பு - அரிப்புக் கருவியால், அரித்து - (மண்ணை) அரித்து எனப் பொருளுரைத்து, அரிப்பு தொழிலாகுபெயராய், அத்தொழிற் கருவியை உணர்த்தியதெனக் கொள்ளினும் பொருந்தும்; அரித்து செயப்படுபொருள் குன்றாவினைய தலால் மண் என்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. கற்பான் - எதிர்கால வினையெச்சம்; விகுதி பான்; இதுவே வினையெச்சப் பொருண்மையையும், எதிர்காலத்தையும் உணர்த்திற்று. கைத்தலத்த-இட

மடியாகப்பிறந்த பலவின் படர்க்கைப்பெயர்; ஒற்றுமைப் பொருள தாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகிய கைத்தலம் - பகுதி, அத்து - சாரியை, அ - பலவின் படர்க்கை விகுதி, நிலைமொழி யீற்று மகரமும், சாரியைமுதல்அகரமும், ஈற்றுகரமுங் கெடுதல் சந்தி; இது குறிப்புவினைப்பெயரெனினும் பொருந்தும்; கைத்தலத்த கருந் தனம்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். அது வினை முற்றன்று; பெயரெச்சமெனக் கொள்ளின் கருந்தனமென்னும் பய னிலைக்குமுதலில் வரவேண்டும்; அப்படி வாராமையால் கொள்ளலாகா தென்க, கருமை - பெருமை. சில-சின்மையென்னும் பண்படியாகப் பிறந்த பலவின் படர்க்கைப்பெயர். பழையபாடத்தைச் சிந்திக்காதவ னுக்குப் புதுப்பாடம் பயன் தராதென்பது கருத்து. (அ)

• உலகவியல்பு.

எனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவாம் - மனைத்தக்காள்
மாண்பில ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல்.

(இ-ள்.) மனை - இல்வாழ்க்கைக்கு, தக்காள் - தகுந்தவளாகிய மனைவி, மாண்பு - நற்குண நற்செய்கை, இலள் ஆயின் - இல்லாதவ ளானால், மணமகன் - கணவன், பூண்ட - மேற்கொண்டன ஆகிய, நல் அறம் - நல்ல தருமங்கள், புலப்படாபோல்-விளங்காதனபோல, இலம் பாட்டார்-தரித்திருடைய, கல்வி - கல்விகள், எனைத்துணைய எனும் - எவ்வளவு மிகுதியுடையன ஆனாலும், தினைத்துணையும் - தினையளவும், சீர்ப்பாடு - சிறப்புண்டாதல், இல ஆம் - இல்லையாம், எ - று.

(வி-ஈ.) எனவே செல்வப்பொருளில்லான் கல்வி சிறப்படையா தென்பது கருத்து. இது வருஞ் செய்யுளால் நன்குவிளங்கல் காண்க.

தினை - சிறுமைக்குக் காட்டியதோரளவை. தினைத்துணை - பண்புத் தற்கிழமைப்பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். எனை - எத்தனை என்பதன் மரூஉ. உம்மைகளிரண்டில் முன்னது உயர்வுசிறப்பு; பின்னது இழிவுசிறப்பு. என் - எனினென்பதன் மரூஉ. இலம்பாட்டார் - தொழிலடியாகப் பிறந்த பெயர்ச்சொல்; இலம்பாடு - பகுதி, ஆர்-பல்லோர் படர்க்கை விகுதி, குற்றியலுகரமாதலால் பகுதி ஒற்றிரட்டலும், உகரக்கேடும் சந்தி; இலம் : நலம் என்பதுபோல அம் விகுதிப் பண்புப்பெயர். இப்பண்புப்பெயர் பெரும்பாலும் பாடென்னுந் தொழிற்பெயரைச் சார்ந்தே வருமென உணர்க. பாடு - படு என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; இவ்விரண்டு சொல்லுந் தொக்க இலம்பாடென்பது ஒருசொல்லின் தன்மையது. பொருள் இல்லாமை யுண்டாதலென்பது. சீர்ப்பாடு - இதுவும் அதுபோல்வதோர் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். கல்வி சீர்ப்பாடில என்பது பால்வழுவமைதி. மனைத்தக்காள் மாண்பிலள் - திணைவழுவமைதி. கல்வி சீர்ப்பாட்டையில, மனைத்தக்காள் மாண்பையிலள் என இரண்டாவதை விரிக்கின் வழாநிலையாம். இங்ஙனம் வருதலால் இல் என்னும் வினைக்குறிப்புப் பண்படி செயப்படுபொருள் குன்றியதும், குன்றாததுமென வுணர்க. மனை என்னும் வீட்டின்பெயர் அதன்கண் நடத்தப்படும் வாழ்க்கைக்கு ஆதலால் இடவாகுபெயர். இரண்டு சொல் கூடி ஒரு சொல்லின் தன்மைப்பட்டு நின்ற மனைத்தக்காள் இறந்தகாலவினையாலணையும்பெயர். நல்லறம்பூண்ட - இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். பூண்ட-பலவின் படர்க்கை இறந்தகாலவினையாலணையும் பெயர். போல என்னும் செய என்னெச்சம் ஈறு தொகுத்தலாய்ப் போலென நின்றது. (௬)

உலகவியல்பு.

இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா - என்சொலினும்

கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற.

(இ-ள்.) இன் சொல்லன் - இனிமையாகிய சொல்லையுடையானும், தாழ் நடையன் - (தகுந்தவருக்கு) அடங்கி நடக்கும் ஒழுக்கமுடையானும், ஆயினும்-ஆனாலும், ஒன்றும் இல்லான் எல் - பொருள் சிறிதும் இல்லானாயின், கடல் ஞாலம் - கடலாற் சூழப்பட்ட உலகத்துள்ளார், வல் சொல்லின்-(அவன் முகநோக்கிக்) கடுஞ்சொல் சொல்லுதலினின்றும், அல்லது - இன்சொல் சொல்லுதற்கு, வாய் திறவா - வாயைத்திறவார்கள்; என் சொல்லினும் - கடுஞ்சொல்லைச் சொல்லினும், கைத்து உடையான் - பொருளுடையானது, காற்கீழ் - காலின் கீழ், ஒதுங்கும் - அடங்கி நடப்பார்கள்; (ஆதலால்) பித்து - பைத்திய குணத்தை, உடைய - உடையார்கள், பிற - நற்குணங்களையுடையோர், அல்ல - அல்லர், எ - று.

(வி-ரை.) ஒன்றென்னும் வரையறைப்பண்பு இஃதுச் சிறுமையை உணர்த்திநின்றது. அதனீற்றில் இழிவு சிறப்பொடு முற்றுப்பொருள் தரும் உம்மை தொக்கது. வன்சொல்லினென்னும் ஐந்தனுருபு நீக்கற்பொருளது. அல்லது பண்படியாகப்பிறந்த ஒன்றன்படர்க்கைக் குறிப்புவினைப்பெயர்; பண்படியாகப்பிறந்த பெயரன்று. என் வினாப்பெயர் "என்னாலும் விளம்பரிது" என மூன்றனுருபேற்றும், "என்னுக்கடைவுடையேன்யான்", "என்னுக்கோ வளர்கின்றதே" என நான்கனுருபேற்றும் வரும். உருபேற்பது பெயரே அன்றி வினையன்றென அறியமாட்டாதார் குறிப்பு வினைமுற்றென்பார். ஆயினுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. சொல்லினுமென்ற உம்மை இழிவுசிறப்பு. கைத்து-இடமடியாகப்பிறந்தபெயர்; கை-(வசம்) பகுதி, த் சந்தி, து-ஒன்றன்படர்க்கை விகுதி. கைத்துடையானென்பதை ஏழாம்வேற்றுமைத் தொகையாகவும், இடைநின்ற அத்துச்சாரியை முதல் அகரங்கெட்ட

தாகவுங்கொண்டு, கையில் பொருளுடையானெனப் பொருள் கூறினும் பொருந்தும். உடையானென்பது உலகவழக்கு. ஞாலம் இடவாகுபெயராய் மக்களை உணர்த்தியதாதலால் நிறவா, ஒதுங்கும், உடைய, அல்ல, பிற என்னுஞ் சொற்களுக்குப் பலர்பாலாகப் பொருள் கூறப்பட்டன. (௪௦)

கற்றோர் சிறப்பு.

இவறன்மை கண்டு முடையாரை யாரும்
குறையிரந்துங் குற்றேவல் செய்ப - பெரிதுந்தாம்
முற்பக னோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை யன்று.

(இ-ள்.) இவறன்மை - உலோபத்தன்மை யுடையவாயிருத்தலை, கண்டும் - அறிந்தும், உடையாரை - செல்வமுடையார்களை, யாரும் - எல்லாரும், குறை - குறையாகிய பொருளை, இரந்து - யாசித்து, குறு ஏவல் உம் - (அவர்) ஏவின சிறுதொழில்களையும், செய்ப - செய்வார்கள்; முன் பகல் - முன்னாளில், பெரிதும் - மிகுதியும், நோலாதார் - தவஞ்செய்யாதவர், நோற்றாரை - தவஞ்செய்தவரை, பின் செல்லல் - பின்செல்லுதல், கற்பு அன்றே - அறிவே ஆம்; கல்லாமை அன்று - அறியாமை அன்று, எ-று.

(வி-ரை.) உலோபத்தன்மை யுடையராயிருத்தலை அறிந்தபோது அவரை யணுகல் கூடாதாதலால் கண்டும் என்றவும்மையும், பெரிதும் என்ற உம்மையும் உயர்வுசிறப்பு. இரந்தும் என்னும் உம்மையைக் குற்றேவலென்பதனோடு கூட்டுக. இது இறந்ததுதழீஇய எச்சவும்மை. ஏவல்-தொழிலாகுபெயர்; காரணவாகுபெயருமாம். இவறன்மை-தொழிற்பெயர்; இவறு - பகுதி, அல் - புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி, மை - விகுதிமேல்விகுதி யார் - யாவரென்னும் வினாப்பெயரின் மரூஉ; இது முற்றும்மையைச் சார்ந்து வந்தமையால் யா - எஞ்சாமைப் பொருளது. ஏவல்செய்ப என்பதில் ஏவல் என்னும் பெயர் அஃறிணைப்

பெயராதலாலும், இப்புணர்ச்சி இரண்டாம்வேற்றுமைத் தொகையாதலாலும், ஈற்று லகரம் நன்னூல் - மெய் - உ௪ - ஆம் சூத்திரத்தின்படி திரியாமல் உருபு - கசு - ஆம் சூத்திரத்தின்படி விகாரத்திபல்பாயிற்று. செய்ப - பல்லோர் படர்க்கை வினைமுற்றாதலால் ப - விகுதி என்க. பெரிது-குறிப்பு வினையெச்சம்; நோலாதாரென்னும் எதிர்மறை வினைமுற்றின் பகுதியோடு முடிந்தது. பகல்-தொழிலாகுபெயர்; பகு-பகுதி, அல்-புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. அல்லென்பதைப் பகுதிப்பொருள்விகுதி யென்னாமல் புடைபெயர்ச்சி விகுதி யென்பதென்னையெனின், நட, வா முதலிய புடைபெயர்ச்சியாகிய தொழிற்பண்பை யுணர்த்தும் முதனிலைகள் பெறும் அல், தல் முதலிய விகுதிகளும், பெரு, நல் முதலிய குணப்பண்பை யுணர்த்தும் முதனிலைகள் பெறும் மை, கு முதலிய விகுதிகளும் பகுதிப்பொருள்விகுதி யெனப்படுமாயினும், தொழிற்பண்பாகிய புடைபெயர்ச்சியை யுணர்த்தும் நட, வா முதலிய முதனிலைகள் பெறுவனவற்றைப் புடைபெயர்ச்சி விகுதியெனவும், குணப்பண்பை யுணர்த்தும் பெரு, நல் முதலிய முதனிலைகள் பெறுவனவற்றைப் பகுதிப்பொருள்விகுதி யெனவும் யாம் கூறுதல் மாணாக்கர்க்கு விளங்குதற்கென்க. தல் முதலிய விகுதிகளை நன்னூலுரைகாரரும், சூத்திரவிருத்திகாரரும் புடைபெயர்ச்சியை யுணர்த்தும் விகுதியெனக் கூறலாலு முணர்க. நோற்றார்-இறந்தகால வினையாலணையும் பெயர்; நோல் - பகுதி, ற் - இறந்தகால இடைநிலை, ஆர் - பல்லோர் படர்க்கைவிகுதி, லகரம் றகரமானது சந்தி, இதற்கு நோன்பகுதியென்பார் இதன் எதிர்மறையாகிய நோலாதார் என்பதற்கு யாது பகுதி கூறுவரோ அறியோம். கற்பு, கல்லாமை என்னுங் காரணப்பெயர்கள் முறையே அவற்றின் காரியமாகிய அறிவுக்கும், அறியாமைக்கும் ஆதலால் காரணவாகுபெயர்கள்; தொழிலாகு பெயர்களெனினும் ஒக்கும். அன்றே-தேற்றப்பொருள் தரும் இடைச்சொல். குறை - பண்பாகுபெயர்; குறு-பகுதி, ஐ-பகுதிப்பொருள் விகுதி, உகரக்கேடு சந்தி. இது எதுவணி. (கக)

கற்றோர் சிறப்பு.

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம் - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்.

(இ-ள்.) கற்றோர்க்கு-கற்றுணர்ந்தவருக்கு, கல்வி நலனே - கல்வியாலாகிய அறிவே, கலன் அல்லால் - ஆபரணம் அல்லாமல், மற்று ஓர் அணிகலம் - வேறோராபரணம், வேண்டா-வேண்டப்படுவதில்லை; முழு மணி - பெருமணிகளால் செய்யப்பட்ட, பூணுக்கு-ஆபரணத்துக்கு, பூண்-வேறுபாணம், முற்ற-ஒருகாலத்திலும், வேண்டா - வேண்டப்படுவதில்லை; யாரே - எவர்தாம், அழகுக்கு - அழகினுக்கு, அழகு செய்வார் - அழகு செய்பவர், எ - று.

(வி-ரை.) மற்றோரணிகலம் என்பதற்கு மற்றோர் - செல்வப்பொருளுடையார், அணிகலம் - அணிந்துகொள்ளும் ஆபரணம், என உரைப்பினும் பொருந்தும். வேண்டா என்னுஞ்சொல் "அறத்தாறிதுவெனவேண்டா" என முன்னோர் செய்யுளிலும் ஒருமைக்கண் பெரும்பாலும் வழங்கி வருதலால், இல் என்பது இல்லை என்பதன் கடைக்குறை என்னல்போலக் கடைக்குறையி லடக்குக. கடைக்குறை விகாரம் பெறுவிட்டால் வேண்டாது எனவரும்; இது செயப்பாட்டு வினைமுற்றாதலால் படுவிகுதி முதலியன தொகுத்தல் எனக்கொள்க. ஆம்-அசை. அணிகலம் என்பதில் அணி வினைத்தொகைக் குறிப்பாயினும் புணர்ச்சி வினைத்தொகை நிலைத்தொடரொன்றே கூறுக. கலன் - இருகுறிலை அடுத்த மகரவீற்றுப் பெயராதலால் மகரத்துக்கு னகரம்போலியாக வந்தது. முன்னுள்ள ஏ பிரிநிலை; பின்னுள்ள ஏ உயர்வுசிறப்பு. பூண் பூணப்படுவதென்னும் பொருளில் பூண்-பகுதி, செயப்படுபொருண்மை விகுதியாகிய ஐ புணர்ந்து கெட்டதெனக்கொள்க. பூண் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் பூணப்படும் பொருளுக்கானமையால்

தொழிலாகுபெய ரெனினும் பொருந்தும். காலத்தின்மேல் நின்ற செயவெனெச்சமாகிய முற்ற என்பது எல்லாமென்னும் பொருள்பட நின்றது. அடைய, முடிய என்பனவும் இப்பொருள்படல் காண்க. இதுவும் மேலையணி. (௧௨)

தற்குறை யுணர்தல்.

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றன மென்று களியற்க - சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்.

(ப-ரை.) கனங்குழாய்-கனமாகிய காதணியையுடையாளே! முற்றும் - எல்லாம், உணர்ந்தவர் - அறிந்தவர், இல்லை - இலர்; (ஆதலால்) முழுவதும் - எல்லாம், கற்றனம் என்று - படித்தறிந்தோமென்று, களியற்க - செருக்குக் கொள்ளற்க; கல்லும் - மலைகளும், சிறு உளியால்-சிறிய உளியினால், தகரும் - உடையும்; கொல்-கொல்லனுடைய, உலை - உலைக்களத்துள்ள, கூடத்தினால் - சம்மட்டியினால், தகரா - உடையா, எ-று.

(வி-ரை.) பின்னிரண்டடி மிக்க கல்வியறிவுடையவனாலும் வெல்லப்படாத ஒருவன் சிறிது கல்வியறிவுடையவனால் வெல்லப்படுவானென்னும் பொருள்பட நின்று, பிறிதுமொழிதலென்னும் அணியின்பாற்படினும், இச்செய்யுள் ஏதுவணி ஆம். கனங்குழை - பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்; விளியுருபேற்று ஈற்றைசாரம் ஆகாரமாயிற்று; நன் - பெயர் - சூ-௪௧. ஒருவன் தன்னில் தன்னைப்பற்றிக் கருதும்போதும், பேசும்போதும் தன்னைத் தனித்தன்மையாகவைத்தல் இயல்பாதலால் கற்றனமென்பது வழாநிலையேயாம். முன்னுள்ள உம்மைகளிரண்டும் முற்றும்மை. பின்னுள்ள உம்மை உயர்வுசிறப்பு முழுவது - பண்புப்பெயர்; முழு - பகுதி, வ் - சந்தி, அ - சாரியை, து - பகுதிப்பொருள் விகுதி. அள

பெடை இன்னிசை நிறைக்க வந்தது. கல்-காரணவாகுபெயர். கொல்-சொல்லால் அஃறிணையும், பொருளால் உயர்திணையுமாகிய பெயர். ()

தற்குறை யுணர்தல்.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க - தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று.

(இ-ள்.) தம்மின் - தம்மினும், மெலியாரை - எளியவரை, நோக்கி - பார்த்து, தமது உடைமை - தம்முடைய பொருள், அம்மா-ஆச்சரியம், பெரிது என்று-அதிகமானதென்று, அகம் மகிழ்க-மனமகிழ்க; தம்மினும் - தம்மைப்பார்க்கினும், கற்றாரை - படித்தறிந்தவர்களை, நோக்கி - பார்த்து, நாம் கற்றது எல்லாம் - நாம் கற்றதுமுழுதும், இவர்க்கு - இவரது கல்விக்கு, எற்றே என்று-எத்தன்மையதாமென்று கருதி, கருத்தழிக - மனம் வருந்துக, எ - று.

(வி-ரை.) ஐந்தனுருபிரண்டும் எல்லைப்பொருளன. மெலியார்-குறிப்பு வினையாலணையும் பெயர். உடைமை-பண்பாகுபெயர். அம்மா-வியப்பிடைச்சொல். அகமகிழ்க, கருத்தழிக - திணைவழுவமைதி. உம்மை - உயர்வுசிறப்பு. எல்லாம் - ஒருமையில் பன்மைவந்த பால்வழுவமைதி; அவரெல்லாம், அவையெல்லாம், நாமெல்லாம், நீரெல்லாமெனத் திணைக்கும், இடத்துக்கும் பன்மைகுறித்துவரும் பொதுவாகிய பெயர்; உரிச்சொல்லாயின் அஃறிணை யிருபாற்கே உரியதாய் வரவேண்டுமாதலாலும், ஆகுபெயராய் இருதிணை மூவிடப்பொருளை உணர்த்தியதென்க் கொள்ளவேண்டுமாதலாலும் உரிச்சொலன்று. இவர்-பொருளாகுபெயர். எற்று-இடைச்சொலடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று; என்-பகுதி, று-ஒன்றன்படர்க்கை விகுதி, னகரம் றகரமானது சந்தி; இப்பகுதியடியாக என்ன கொடி எனப் பெயரெச்சமும் வரும். ஏ - இரக்கப்பொருளது. குவ்வுருபு ஐந்தாவதற்குரிய எல்லைப்

பொருளது. என்று - இடைச்சொலடியாகப் பிறந்த வினையெச்சம்; என்-பகுதி, த்-இறந்தகாலவிடைநிலை, உ-வினையெச்சவிகுதி. (கச)

தாழ்மை.

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும் - இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமும்
தலைவணங்கித் தாழப் பெறின்.

(ப-ரை.) இல்லார்-(கல்விபொருள்கள்) இல்லாதவர், குறை-தமது குறைகளை, இரந்து - சொல்லியாசித்து, தம் முன்னர் - தம் மெதிரில், நிற்பபோல் - (தலைவணங்கி) நிற்பார்போல, தாமும் - அவ்விருவகைச்செல்வமுடையாரும், தலை வணங்கி - தலையால் வணங்கி, தாழப்பெறின் - தாழ்ந்திருத்தலைப் பெறுவாராயின், கல்வி உடைமை (என்று)-கல்வியையுடையராதலும், பொருள் உடைமை என்று-பொருளுடையராதலும், இரண்டு செல்வமும் - ஆகிய இரண்டு செல்வங்களும், செல்வம் எனப்படும் - செல்வங்களென்று அறிவுடையோரால் சொல்லப்படும், எ-று.

(வி-ரை.) தலைவணங்குதலென்றது பெருமிதமில்லாமையை; பெருமிதமில்லாது தாழ்ந்திருத்தல் அவ்விருவகைச் செல்வர்களுக்கும் ஒருபேறுமென்பதும், அதனருமையுந் தோன்றத் 'தாழப்பெறின்' என்றார். உடைமை இரண்டும் குறிப்புத்தொழிற்பெயர். எண்ணுப்பொருளதாகிய என்றென்னும் இடைச்சொல்லை கல்வியுடைமை என்பதனோடுங் கூட்டுக. என்ற என்னும் இடைச்சொலடியாகப்பிறந்த பெயரெச்சம் அகரவிகுதி தொகுத்தல் பெற்றதெனக்கொண்டு, என்று சொல்லப்பட்ட என உரைப்பினும் பொருந்தும். எனப்படும் - இடைச்சொலடியாகப்பிறந்த செயப்பாட்டுச் செய்யுமென் வினைமுற்று. முன்னுள்ள உம்மை முற்றும்மை, பின்னுள்ளது இறந்தது தழீஇயதோடு, உயர்வுசிறப்பில்வந்தஉம்மை. தம்முன்னர்: பண்புத்தற்கிழமைப்பொருள

தாகிய ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகவும், ஐந்தாவதற்குரிய எல்லைப்பொருளதாகிய நான்காம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகவும் கொள்ளலாம்; விரிந்தால் முறையே தமதுமுன்னர், தமக்குமுன்னரென விரியும். நிற்ப என்பதில் ப - பல்லோர்படர்க்கை விகுதி. வணங்கி என்னுஞ் சினைவினை தாழ என்னும் முதல்வினை கொண்டது. (௧௫)

தாழ்மை.

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப - தூக்கின்
மெலிபது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு.

(இ-ள்.) ஆக்கம் பெரியார் - கல்வியாவது பொருளாவது மிகுந்தவர், சிறியாரிடை - (அவ்விருசெல்வமும்) குறைந்தவரிடத்து, பட்ட - உண்டாகிய, மீச்செலவு - வரம்புகடந்த நடக்கையை, காணின் - கண்டால், னனி தாழ்ப - மிகுதியுந் தாழ்வார்கள்; தூக்கின் - உயர்த்துப் பிடித்தால், துலைக்கு - தராசில், மெலியது - இலேசான பொருளுள்ள தட்டு, மேல்மேல் - மிகமேலே, எழ - எழும்படி, செல்லச்செல்ல - உயருந்தோறும், வலிது அன்றே - கனமான பொருளுள்ள தட்டே, தாழும் - தாழுகின்றது, எ - று.

(வி-ரை.) ஆக்கம்: ஆ-பகுதி, கு-சாரியை, ஆகு என நெடிற்றொடர்க் குற்றுகரமாய் நிற்றலால், அம் விகுதிப்புணர்ச்சியில் ககரம் இரட்டியதும், உகரக்கேடும் சந்தி; இவ்வாறு முடிந்துநின்ற தொழிற்பெயர், ஒருவன் ஆகுதற்குக் காரணமாகிய செல்வத்துக்கானமையால் காரியவாகுபெயர். இவ்வாறன்றித் தொழிலாகுபெயரெனினும், அம் விகுதி கருவிப்பொருளதெனக்கொண்டு, தொழிலடியாகப் பிறந்த பெயரெனினும் பொருந்தும். ஆக்கம் பெரியார்-திணைவழுவமைதி. செலவு-தொழிற்பெயர்; செல்-பகுதி, அ-சாரியை, வு-புடைபெயர்ச்சி விகுதி.

மீச்செலவு ஒருசொல்லின் தன்மையது. நெருங்கு நெருக்கு, இறங்கு இறக்கு என்பனபோலத் தூக்கின் என்பதில் தூங்கு என்னுந் தன்வினைப்பகுதி வலித்தலாகின்ற தூக்கு-பகுதி, இன் - எதிர்கால வினையெச்சவிகுதி, உகரக்கேடு சந்தி. தூங்குதல்-தொங்குதல், தூக்குதல்-தொங்கச்செய்தல். மெலியது, வலிது என்பன துலையைச் சார்கின்றமையாலும், எழச்செல்ல, தாழும் என்ற வினைகளாலும் தட்டுகளுக்காயின. அவ்விரண்டும் பண்படியாகப் பிறந்தபெயர்கள். முன்னுள்ள அடுக்கு மிகுதிப்பொருளது. பின்னது இடைவிடாமைப்பொருளது. அன்றே - தேற்றப்பொருள்தரும் இடைச்சொல். இருசொல்லாகக் கொண்டு ஏ - எதிர்மறை எனினும் பொருந்தும். குவ்வுருபு ஏழாவதனிடப்பொருளது. இது வேற்றுப்பொருள்வைப்பென்னும் அணி. ()

தற்புகழ்ச்சி.

விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யும்
நலத்தகையார் நல்வினையுந் தீதே - புலப்பகையை
வென்றன நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின்.

(இ-ள்.) புலப்பகையை-ஐந்துவிடயமாகிய பகையை, வென்றனம் - செயித்தோம், நல் ஒழுக்கில் - நல்லொழுக்கத்தில், நின்றேம் என்று - தவறாமல் நின்றோமென்று, தம்பாடு - தம்பெருமையை, தம்மில் கொளின்-தமக்குள் மதித்துக்கொள்வாராயின், விலக்கிய - (மநு முதலிய நூல்களால்) விலக்கின கருமங்களை, ஓம்பி-செய்யாமற்காத்து, விதித்தனவே - விதித்த கருமங்களையே, செய்யும் - செய்தற்குரிய, நலத்தகையார்-நன்மையாகிய தன்மையுடையாரது, நல்வினையும்-நல்ல கருமமும், தீதே - பயனில்லதே ஆம், எ - று.

(வி-ரை.) ஐந்துவிடயமாவன: சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தமென்பன. இவை மனத்தை முத்திநெறியிற் போகவிடாமல், தம்மை அநுபவிக்கும்பொருட்டு, துன்பத்தாலும் பாவத்தாலும் வரும்

பொருள்களின்மேற் போகவிடுதலால் 'புலப்பகை' என்றார். ஏ இரண்டில் முன்னது பிரிநிலை; பின்னது தேற்றம். புலப்பகை உருவகமாதலால் இருபெயரொட்டுப்பண்புத்தொகைநிலைத்தொடராக இலக்கணங் கூறுக. ஒழுக்கு: உருகு உருக்கு, பெருகு பெருக்கு என்பனபோல முதனிலை திரிந்த தொழிற்பெயர். பிற-அசை. நலத்தகையார்நல்வினை-தொழிற் பண்புத்தற்கிழமைப்பொருட்டாகிய ஆறும்வேற்றுமைத்தொகைநிலைத்தொடர். உம்மை-உயர்வுசிறப்பு. இந்திரன் நின்னையொப்பார் யாரென வினவியகாலையில் தன்னையொப்பவ ரில்லையெனத் தன் தவவொழுக்கத்தைநன்குமதித்துக்கொண்ட யயாதியிடத்து நல்வினை நீதாதல்காண்க. விலக்கிய-பலவின்படர்க்கை இறந்தகால வினையாலணையும்பெயர். விலகு என்னுந் தன்வினைப்பகுதி விலக்கென இரட்டினதென்றுவது, விலங்கு என்னுந் தன்வினைப்பகுதி ஙகரமெல்லொற்றுக் ககரவல்லொற்றாதலாகிய விகாரம் பெற்றதென்றுவது பகுதி கூறுக; இப்பகுதிக்கும், பலவின்படர்க்கை அகரவிகுதிக்கும் இடைநின்ற இன் என்னும் இறந்தகால இடைநிலை கடைக்குறைவிகாரம் பெறவே, யகர உடம்படுமெய் சந்தியாக வந்தது. பகை: பகு-பகுதி, ஐ-புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி; இவ்வாறு முடிந்துநின்ற பகை தொழிலும் பண்பினு ளடங்குதலால் பண்பாகுபெயராய்ப் பகையுடையபொருளை உணர்த்திற்று. தகை என்பதற்கும் அவ்வாறே பகுபதவிலக்கணங் கூறுக. (௧எ)

தற்புகழ்ச்சி.

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் — தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம்.

(இ-ள்.) தன்னை வியப்பிப்பான் - தன்னை (யாவரும்) உயர்வாக மதிக்க நினைப்பவன், தன் புகழ்தல் - தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளுதல், நல் நீர் - குளிர் நீரை, சொரிந்து - (அகலில்) வார்த்து, தீச்

சுடர் - தீவிளக்கை, வளர்த்தது அற்று - எரித்ததுபோலும்; (ஆதலால்) தன்னை - தன்னை, வியவாமை அன்றே - உயர்வாக மதியாதிருத்தலே, வியப்பாவது - மதிப்பென்பது; இன்பம் - ஒருசுகத்தையும், நயவாமை அன்றே - விரும்பாமையே, நலம் - இன்பமென்பது, எ-று.

(வி-ரை.) எனவே கெடுப்பாரில்லாமல் தானே கெடுமென்பது குறிப்பெச்சம். மணிவிளக்கென ஒன்றுண்டாயிருத்தலால் தீச்சுடர் என்பதில் தீ-பிறிதினியைபு நீக்கிய விசேடணம். சுடர் - பண்பாகுபெயர். வியப்பிப்பான் - பிறவினையாகிய எதிர்காலவினையாலணையும் பெயர்; பான்: எதிர்கால வினையெச்சவிகுதியெனக் கொண்டு, ஒருவன் தன்னை உயர்வாக மதிப்பிக்கும்படி என உரைப்பினும் பொருந்தும். தற்புகழ்தல்: இது இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் ஈற்று னகரம் நன்னூல் மெய்யீற்றுப்புணரியல்: கஅ-ஆம்-சூ - "தன் என் என்பவற்றீற்று னவ்வன்மையோடுறழும் நின் ஈறியல்பாம் உறவே" என்பதனால் உறழாமல், நன் - உருபு - கசு - ஆம் - சூத்திரத்தில் "அன்னபிறவும்" என்பதனால் திரிந்தேவந்தது. வளர்த்தற்று என்பதை வளர்த்தது அற்று எனப் பிரித்தலே அன்றி, வளர்த்தால் அற்று எனவும் பிரிக்க-வியவாமை, நயவாமை-எதிர்மறைத் தொழிற்பெயர்களாகிய காரணப்பெயர்கள் இங்குக் காரியங்களின்மேல் நின்றன. ஆவது இலக்கணையாகிய ஒன்றன்படர்க்கை எதிர்கால வினையாலணையும் பெயர். இன்பம்-பண்புப்பெயர்; இதன் பகுபத இலக்கணம் இரண்டாஞ் செய்யுளுரையிற் காண்க. அன்றே என்னும் இடைச்சொல் இரண்டும் தேற்றம். இது ஏதுவுவமையலங்காரம். (கஅ)

விழன்மொழி பேசல்.

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு - பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

(இ-ள்.) பிறரால் - மற்றவரால், பெரு சுட்டு - உயர்வாக மதித்தலை, வேண்டுவான் - (தான் அடைய) விரும்புவோன், யாண்டும் - மறக்கத்தக்ககாரணம் உண்டான இடத்தும், மறவாமே - மறவாமல், நோற்பது ஒன்று - ஆசரிப்பதாகிய ஒருகருமம், உண்டு - உளது; (அது) பிறர் பிறர் - மற்றவருடைய, சீர் எல்லாம் - சிறந்த ஒழுக்கங்களை எல்லாம், தூற்றி - பலர் அறியச் சொல்லி, சிறுமை - (அவர்களது) தீய ஒழுக்கத்தை, புறம்காத்து - வெளிப்படுத்தாமல், யார் யார்க்கும் - எல்லோர்க்கும், தாழ்ச்சி - பணிவை வெளிப்படுக்கும் சொற்களை, சொலல் - சொல்லுதலாம், எ - று.

(வி-ரை) கருத்தாப்பொருளதாகிய மூன்றனுருபு சுட்டு என்னும் முதனிலைத் தொழிற்பெயரோடு முடிந்தது. ஒருவனிடத்துள்ள பெருமையை அவனைச் சுட்டுதலின்மேலேற்றிப் பெருஞ்சுட்டென்றது ஒரு மரபுவழுவமைதி. சுட்டு: முதனிலைத் தொழிலாகுபெயராய்ச் சுட்டப்படுதலாகிய மதிப்புக்காயிற்று. பிறர்-இடைச்சொலடியாகப் பிறந்தபெயர்; பிற-பகுதி, ர்-பலர்பாற் படர்க்கை விகுதி; அர் - விகுதி எனக்கொண்டு, பகுதியீற்று அகரக்கேடாகிய கடைக்குறை பெற்றதென்றுவது, விகுதி முதல் அகரக்கேடாகிய முதற்குறை பெற்றதென்றுவது கூறினும் பொருந்தும். யாண்டு-வினவடியாகப் பிறந்த பெயர்ச்சொல்; யா - பகுதி, ட் - சந்தி, டு - இடப்பொருண்மை உணர்த்தும் விகுதி, சந்தி டகரம் ணகரமானது மெலித்தல் விகாரம். இது பெரும்பாலும் ஏழாவதன் இடப்பொருண்மையிலே வரும்; சிறுபான்மை யாண்டுநின்றேனினுனென ஐந்தாவதனுருபேற்று நீங்கற்பொருளினும் வரும்; டு - ஆண்டு, ஈண்டென நீண்ட சுட்டோடும் வரும். காலப்பொருண்மையைத் தரும் றுவ்விகுதி ஏற்று அன்று, இன்று, என்று எனவும், இடப்பொருண்மையைத் தரும் குவ்விகுதி ஏற்று அங்கு, ஆங்கு, இங்கு, ஈங்கு, ஊங்கு எனவும் சுட்டும் வினவும் அடியாகப் பெயர்கள் வருமாறறிக. யாண்டு என்பது முற்றும்மையைப் பெற்றதனால் வினப்பொருளைவிட்டு எஞ்சாமைப் பொருள்பட்டது. மறவாமே-

எதிர்மறை வினையெச்சம், மே-விகுதி; இது எதிர்மறையில் மாத்திரம் வரும். கோற்பது-எதிர்கால வினையாலணையும் பெயர். ஒன்று-எண்ணலளவையாகுபெயர். இத்தொடர் இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். அடுக்கிரண்டும் பன்மைப்பொருளன. தாழ்ச்சி: தாழ்-பகுதி, ச்-சந்தி, சி-புடைபெயர்ச்சி விகுதி, இவ்வாறு முடிந்த தொழிற்பெயராகிய தாழ்ச்சி தன்னைவெளிப்படுத்துஞ் சொல்லுக்கானமையால் காரியவாகுபெயர். சீர், சிறுமை-பண்பாகு பெயர்கள். (கஃ)

விழன்மொழி பேசல்.

> கற்றுப் பிறர்க்குரைக்குந் தாநில்லார் வாய்ப்படூஉம்
> வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை - சொற்றநீர்
> நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
> சொல்லாமே சூழ்ந்து சொலல்.

(இ-ள்.) கற்று - நூல்களைக் கற்றறிந்து, பிறர்க்கு - மற்றவர்க்கு, உரைத்து - (நல்லொழுக்கத்தைக்) கற்பித்து, நில்லார் - (அவ்வொழுக்கத்தில்) நில்லாதவருடைய, வாய் - வாயினிடத்து, படும் - உண்டாகும், வெறு உரைக்கு - பயனில்லாத சொல்லுக்கு, ஓர் வலியுடைமை - ஒருவல்லமையைக்கொண்டிருத்தல், உண்டு - உளது; (அது) சொற்ற நீர் - (எமக்கு நல்லொழுக்கத்தைச்) சொல்லிய நீர், நில்லாதது - (அவ்வொழுக்கத்தில்) நில்லாதகாரணம், என் என்று - என்ன என்று, நாண் - வெட்கம், உறைப்ப - வருத்த, ஒருவன் நேர்ந்து-ஒருவன் எதிர்த்து, சொல்லாமே - சொல்லாதபடி, சூழ்ந்து-ஆலோசித்துக்கொண்டு, சொல்லல் - சொல்லுதலாம், எ-று.

(வி-ரை.) வாய் இழித்தலில் வந்தது. தாம்-அசை. நில்லார், நீர் என்பன இழிப்பினால் வந்த பால்வழுவமைதி. அளபெடை இன்னிசையளபெடை. பயனுள்ள சொல்லாயினும் நில்லார் வாய்ப்பட்டமையால் அது வெற்றுரையாயிற்று. வெற்றுரை-பண்புத்தொகைநிலைத்தொடர். சொற்ற - இறந்தகாலப்பெயரெச்சம்; சொல் - பகுதி, ற் - இறந்தகால

இடைநிலை, அ-பெயரெச்சவிகுதி, லகரம் றகரமானது சந்தி. நில்லாதது: காரியவினையைக் காரணத்தின்மேலேற்றிக் கூறும் எதிர்மறை வினையாலணையும்பெயர்; நில்-பகுதி, ல்-சந்தி, ஆ - எதிர்மறை விகுதி, அனைத்து மொருபகுதி, த்-எழுத்துப்பேறு, அ-சாரியை, து-ஒன்றன் படர்க்கை விகுதி. இப்பெயர் எவனென்னுங் குறிப்புவினைமுற்றின் மரூஉ ஆகிய என் என்பதனோடு எழுவாய்த் தொகாநிலைத்தொடராக நின்றது. இது எதிர்மறைத் தொழிற்பெயரன்று. நாக்கின்புலனை மனத்தின்மேலேற்றி 'உறைப்ப' என்றார். காரியப்பொருட்டாகிய அவ்வெச்சம் சொல்லாமே என்னும் எதிர்மறை வினையெச்சங்கொண்டது. உறைப்ப என்பது காரியப்பொருட்டாகிய எதிர்கால வினையெச்சம்; உறை-பகுதி, ப்-சந்தி, ப்-விரித்தல் விகாரம், அ-எதிர்காலவினையெச்ச விகுதி; உகரவிகுதிபெறும் வினையெச்சமல்லாதவை விகுதியே காலங் காட்டுவன ஆதலால் ப் எதிர்கால இடைநிலையன்று; ஆயின் உறைக்க என்பதற்குப் பொருந்தாமை அறிக. ஆலோசித்துச் சொல்லுதலாவது கேட்பானோடு தம்மையுங் கூட்டித் தன்மைப்பன்மையால் கூறுதலாம். (௨०)

அடக்கமின்மை.

பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார் - திறப்படூஉம்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல்.

(இ-ள்.) தாம் கற்ற - தாம் கற்ற கல்வியறிவாலமையும் செய்யுள்களை, பிறர்க்கு - அந்நியர்க்கு, பயன்பட - பிரயோசனப்படும்படி, விற்பார் - (பொருளுக்காக) விற்கும் புலவர்கள், தமக்கு - தங்களுக்கு, வேறு பயன் - வேறுபலனை, உடையார் - உடையராவர்; (அது) திறம்படும் - வகைப்பட்ட, தீவினை - கொடுந்தொழிலுக்கு, அஞ்சாத - பயப்படாத, விறல் கொண்டு - வலியை அடைந்து, தென்புலத்தார் - பிதிர் தேவதைகளுக்கு; கோவினை - அரசனாகிய யமனை; வேலை கொளல்-

தொழில்கொள்ளுதலாம், (அதாவது தம்மைத் தண்டிக்கச் செய்து கொள்ளல்), எ-று.

(வி-ரை.) பயன் காலில்படும் யாதனை ஆதலால் அதனை 'வேறு பயன்' என்றார். வகைப்பட்ட தீவினையாவன நற்குண நற்செயல்க ளில்லாரெனை அறிந்தும் பொருளுடையானை அவை யுடையானாகக் கூறலாம் பொய்யும், தெய்வங்களிடத்துள்ள குணத்தையும் செயலையும் எடுத்து இயன்மேலேற்றுதலாம் களவும் முதலியவை. கற்ற- இறந்த கால வினையாலணையும்பெயர்; இது தன்காரியமாகிய செய்யுளின்மேல் நின்றது. பிதிர்தேவதைகளுக்கு இடம் தென்றிசையாதலால் அவர்க் குத் தென்புலத்தாரெனப் பெயராயிற்று. தென்புலத்தார்-ஏழாம்வேற் றுமைத் தொகைநிலைத்தொடர்; விரிந்தால் தெற்கின்கணுள்ள புலத்தா ரென விரியும். புலம் - இடம். தெற்காகிய புலத்தாரெனப் பொருள் கொள்ளின் வருமொழிப்பகுதிமுட்டில் பண்புத்தொகைநிலைத்தொட ராம். வேலைகொள வென்பதை ஒருசொல்லாகக் கொள்ளாமல் இரு சொல்லாகவே வைத்து, வேலையைக் கொள்ளவென இரண்டாவதை விரிக்கின்,கோவினை யென்னும் இரண்டாவதை ஏழாவதாகத் திரிக்க, நன்-பெயர்-ரு-௯௦. (உ௧)

அடக்கமின்மை.

கற்பன வூழுற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றூத்தைவா யங்காத்தல் - மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல்.

(ரு-ள்.) கற்பன - கற்பதற்குரிய கல்விகளுக்கு, ஊழ்-நல்வினை உற்றார் - இல்லாதவர், கல்விக் கழகத்து - கல்வியைப் பயிலும் இடத் தில் (அதாவது புலவர் சபையில்), ஒற்கம் - அடக்கம், இன்று-இல்லா மல், ஊத்தை வாய் - அழுக்குப்படிந்த வாயை, அங்காத்தல் - திறத்தல் கள், மா - மிருகங்களும், பறவை - பட்சிகளும், புல் உரு - புல்லாற் செய்யப்பட்ட உருவத்தை, அஞ்சுவபோல் - பயப்படுவனபோல, மற்

றுத்தம் - கல்லாத தம்முடைய, வல் உரு - வலிய உருவத்தை, அஞ்சன்மின்-அஞ்சாதிரும், என்பவே-என்று சொல்லல்களே ஆம், எ-று.

(வி-ரை.) இங்கு ஊழென்றது ஆகூழை. ஊழற்றார் - திணைவழுவமைதி. ஊழ்-முறைமை; அது செய்தமுறை தவறாதுவரும் வினைக்குப் பண்பாகுபெயராம். ஒற்கம்-தொழிற்பெயர்; ஒல்கு - பகுதி, அம் - புடைபெயர்ச்சி விகுதி; குற்றியலுகரமாதலால் உகரக்கேடும், லகரத் திரிபும் சந்தி. அம் - விகுதிப்புணர்ச்சியில் நாட்டமென நெடிற்றொடரும், முடுக்கமென உயிர்த்தொடரும், அடக்கமென மென்றொடரும், குற்றமென முற்றியலுகரமும் விகாரப்படல் காண்க. கழகமென்பது கல்வி, சூது, ஆயுதம், மல் இவை பயிலும் இடங்களுக்குப் பெயராயினும், கல்வி என்னும் அடையால் புலவர்சபையை உணர்த்தியது. இன்றி என்னும் எதிர்மறைக் குறிப்புவினையெச்சத்திறுதி இகரம், இது செய்யுளாதலால் உகரமாகத் திரிந்தது. இன்றென்னும் குறிப்பு முற்று வினையெச்சமானதென ஒரிலக்கண நூலார் கூறுவர். அது உயர்திணைக்கும் தன்மை முன்னிலைகளுக்கும் பொருந்தாமை அறிக. கல்லாதவர் பேசுஞ் சொற்கள் சிறந்த பொருள் தாராமையால் அவை சொல்லுதலல்லவென்பார் அங்காத்தலென்றும், கல்வி பயிலாத இழிவு தோன்ற வாயென்றமட்டில் அமையாமல் ஊத்தை என அடை கொடுத்து ஊத்தை வாயென்றும், நித்திரையையும், சுகத்தையும் வேண்டாமல் கல்வி பயின்றோர்போலாது, அவ்விரண்டையும் வேண்டிச் செய்து கொண்டோராதலால் அவருடம்பை அவர் கூற்றாக 'வல்லுரு' என்றுங் கூறினர். புல்லர்கள் பேசும்போது தாம் அடங்கியிராமல் இடையிடையே பலமுறை பேசலால் அவர் பேசுதல் பலவாயிற்று. மற்று - பிறிதென்னும் பொருளது. உரு-பண்பாகுபெயர். சொல்லுத லென்பதினின்றும் பிரித்தலால் ஏ பிரிநிலை. மாபறவை அஃறிணை யும்மைத்தொகையாதலால், இவ்வாறு பன்மையீறு பெறுதும், மாபறவைகளெனப் பன்மையீறு பெற்றும்வரும். புல்லுரு: கருவிப்பொருளதாகிய மூன்றும் வேற்றுமைத்தொகைநிலைத்தொடராகக் கொள்ளுதலே அன்

றிப் புல்லாகிய உரு எனப் பொருள்கொண்டு பண்புத்தொகைநிலைத் தொடராகவும் கொள்ளலாம். இது பெயர்பொருட்டற்குறிப்பேற்ற வணி. (உஉ)

இயல்பறிதல்.

போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொணகைமினார் வாய்ச்சேரா - தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்
பேடிகொளப்படுவ தில்.

(ப-ரை.) போக்கு - குற்றம், அறு - இல்லாத, கல்வி - கல்விகள், புலம் - அறிவில், மிக்கார்பால் - மிகுந்தவரிடத்து, அன்றி - அல்லாமல், நகை மீக்கொள்வார்வாய் - நகுதலை மேற்கொள்ளும் இயல்பினரிடத்து, சேரா - சேர்ந்து பயன்தாரா; தாக்கு - தீண்டிவருத்துகின்ற, அணங்கும் - தெய்வப்பெண்ணும், ஆண் - ஆண்தன்மையை, அவாம் - விரும்புதற் கேதுவாகிய, பெண்மை - பெண்தன்மையாகிய அழகு, உடைத்து எனினும் - (ஒரு பெண்ணை) உடையதாக இருப்பினும், பெண் நலம் - அப்பெண்ணினின்பம், பேடி - அலியால், கொள்ளப்படுவது இல் - கொள்ளப்படுவதில்லை அதுபோல, எ-று.

(வி-ரை.) ஒரு பெண்ணைப் பிறர் கண்டவுடன் விரும்பச்செய்வது அழகே ஆதலால் அச்சிறப்புக்கருதி அதனை வினைமுதலாக்கிக் கூறினார். தாக்கணங்கு-காமநெறியால் தீண்டி உயிர்கொள்ளுந் தெய்வப்பெண்; இலக்குமி என்று பொருள் சொல்வாருமுண்டு. அத்தெய்வப்பெண்ணும் தன்செயல்விட்டுக் காமங்கொள்ளும் அழகென்பது போல, இலக்குமி என்றதில் பொருள் அவ்வாறு சிறவாமையால் அது உரையன்றென்க. ஆணவாமென்றது இடக்கரடக்கல். மீக்கொணகைமினார் என்பதில் சொற்களைப் பின்முன்னாக நிறுத்தி விகுதி பிரித்துக் கூட்டிப் பொருள்கொள்க. நகை-தொழிற்பெயர்; நகு-பகுதி, ஐ-புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. இவ்வாறன்றி முதனிலைத்தொழிற்

பெயரெனினும் பொருந்தும். இல்லை என்பதில் ஐ தொகுத்தல். ஒருசாரார் கடைக்குறை என்ப. போக்கு: ஞ்சாரியை பெற்றுநின்ற போகென்று முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; கழியவேண்டிய குற்றத்துக்கானமையால் தொழிலாகுபெயரென்க. கொளப்படுவது - ஒன்றன்படர்க்கை எதிர்காலச் செயப்பாட்டுவினை, நீ செய்தாயில்லை, அவன் செய்தானில்லை என்பனபோல, இல்லை என்னும் குறிப்புவினைமுற்றோடு சேர்ந்து ஒருசொல்லின் தன்மைப்பட்டுநின்றது. இது எடுத்துக்காட்டுவமையணி. (உ௩.)

இயல்பறிதல்.

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉம்
குற்றந் தமதே பிறிதன்று - முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்.

(இ - ள்.) கற்றன - கற்ற நூற்பொருள்களை, கல்லார் - மூடருடைய, செவி-காதில், மாட்டி - நுழைத்து, கை உறும் - (அவரால்) அவமதிக்கப்படுதற்குக் காரணமாகிய, குற்றம்-பிழையானது, தமதே-தம்முடையதே, பிறிது அன்று - வேறன்று (அதாவது அவருடையதன்று ஆதலால்), முற்றும் உணர்ந்தும் - முழுவதுந் தெரிந்திருந்தும், அவர் தன்மை - அம்மூடருடைய தன்மையை, உணராதார் - அறிந்துகொள்ளாததாம், தம் உணராத - தம்மை அறியாத, ஏதிலரை - அயலாரை, நோவது - வெறுத்துக்கொள்ளல், எவன் - என்ன, எ-று.

(வி-ரை.) மாட்டி யென்னும் சொல்லாற்றலால் மூடர் கேட்பதற்கு இணங்காமையும், கற்றோர் அவரை இணக்கினமையும் தோன்றுகின்றன. அவர் தன்மையுணராமை தாம் நீதிகளைக் கூறினால் அவர் கோபங்கொள்வரென்று முன் அறியாமை. தம்மை அவருணராமை கல்லாத நாம் பணிந்து நடக்குங் கல்விப்பெருமை யுடையாரெனவும், நமக்கு உறுதிமொழிகளைக் கூறுபவரெனவும் அறியாமை. கை - முத

ளிலைத் தொழிற்பெயர். உறும் - செயப்பாட்டு வினைப்பொருண்மைப் பகுதி நிற்ப தொருந்தலாய் நின்ற செய்யுமென் பெயரெச்சம்; இது காரியப்பொருட்டு. தமது-இடமடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று; தாம்-பகுதி, அ - சாரியை, து - ஒன்றன்படர்க்கைவிகுதி, பகுதிக்குறுக்கம் குறுக்கல் விகாரம். தம்மிடத்ததென எழாவதற்குரிய இடப்பொருளதாதலால் இடமடியாகப் பிறந்ததென்றும்; எ-பிரிநிலை. பிறிது-இடைச்சொலடியாகப்பிறந்த குறிப்புமுற்று. பிற - பகுதி, இ - சாரியை, து-ஒன்றன்படர்க்கைவிகுதி, பகுதியீற்று அகரக்கேடு-கடைக்குறை. முற்றென்பதனீற்றில் முற்றும்மையும், உணராத என்னும் எதிர்மறைப் பெயரெச்சத்தில் அகரவிகுதியும் தொகுத்தல். நோவது - எதிர்காலத் தொழிற்பெயர்; இதில் நொ என்னும் பகுதி நோ என நீட்டல் பெற்றது. தாம்-அசை. (உச)

இறைமாட்சி.

வேந்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார் - மாத்தகைய
அந்தப் புரத்தது பூசை புறங்கடைய
கந்துகோல் பூட்கைக் களிறு.

(பொ-ள்.) பூசை - பூனையானது, மாத்தகைய - பெருந்தகுதியையுடைய, அந்தப்புரத்தது - அந்தப்புரத்திலுள்ளதாயினும் (சிறப்படையாது); கந்து - கட்டுந்தறியை, கோல் - முறிக்கின்ற பூட்கை - வலியையுடைய, களிறு - யானை, புறங்கடைய - தலைவாயிலிலிருப்பினும் (சிறப்படையும்); (அதுபோல) மிகல் மக்கள் - மேலோர், வேந்து அவை இராசசபையை, காவார்-காத்துக்கொண்டிரார் (ஆயினும் சிறப்படைவர்); வேறு சிலர் - (அவரின்) வேறாகிய கீழோர், காத்தது கொண்டு - (அச்சபையைக்) காத்திருந்ததனால் கிடைத்த பொருளால், உவப்பு-மகிழ்ச்சியை, எய்தார் - அடையார், எ-று.

(வி-ரை.) ஆங்கு - அசை. வேத்து - தொடைநோக்கிவந்த வலித்தல் விகாரம். கல்வி அறிவு கேள்வி ஒழுக்கங்களால் மிகுந்தவராதலால்

மேலோரை 'மிகன்மக்கள்' என்றும், அவையில்லாதவராதலால் கீழோரை 'மேவறுசிலர்' என்றும் கூறினர். தந்நானைத்தலைவகளெல்லாம் இசையெச்சம். மிகன்மக்கள்-பண்புத்தொகைநிலைத்தொடர். காத்தது - வினைமுதல் வினையைக் காரியத்தின் மேலேற்றிக் கூறும் இறந்தகால வினையாலணையும்பெயர் கொண்டு-என்பொருளதாகிய மூன்றாம் வேற்றுமைச்சொல்லுருபு. தகைய-பண்படியாகப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; தகு-பகுதி, ஐ - புடைபெயர்ச்சி விகுதி; உகரக்கேடு சந்தி; இவ்வாறு முடிந்துநின்ற தகை-பகுதி, ய்-சந்தி, அ-பெயரெச்சவிகுதி; தொழிலும் பண்பினுளடங்குமாதலால் பண்படியாகப் பிறந்ததென்றாம். அந்தப்புரத்தது, புறங்கடைய இரண்டும் இடமடியாகப்பிறந்த குறிப்புமுற்று. களிறுபுறங்கடைய-உயர்வுபற்றி ஒருமைப்பால் பன்மைப்பாலாய்வந்த வழுவமைதி; அவ்விகுதி தொகுத்தலெனக் கொண்டு வழாநிலையாகிய ஒருமை எனினும் ஒக்கும். இது எதிர்நிரனிறையாய்நின்ற எடுத்துக்காட்டுவமையணி. (உசு)

இறைமாட்சி.

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயு மறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை.

(இ-ள்.) குலமகட்கு-குலதர்மத்தையுடைய பெண்ணுக்கு, தெய்வம் - தெய்வம், கொழுநனே - தன்கணவனே; புதல்வர்க்கு - புத்திரர்களுக்குத் தெய்வம், தந்தையும் தாயும் மன்ற - தந்தையுந்தாயுமே; அறவோர்க்கு - (பிரமசரியமுதலிய) தருமநிலையில் நின்றவர்க்கு, தெய்வம் - தெய்வம், அடிகளே - குருவே; அனைவோர்க்கும் - எல்லாருக்கும், தெய்வம் - தெய்வம், இலைமுகம் - வெற்றிலையினது முகம்போலத்தொழில் செய்யப்பட்ட, பைம்பூண் - பசும்பொன் அணி அணிந்த, இறை - அரசனே ஆம், எ-று.

(வி-ரை) ஏகாரங்கள் தேற்றம். மன்ற - அப்பொருளதாகிய இடைச்சொல். மகன்: மக - பகுதி, ன் - விகுதி; அன் விகுதி; எனக்கொண்டு பகுதியீற்று அகரங் கெட்டதென்றால் கடைக்குறை விகாரமெனவும், விகுதிமுதல் அகரங் கெட்டதென்றால் முதற்குறை விகாரமெனவும் உரைக்க. கொழுநன்-பண்படியாகப்பிறந்த பெயர்; கொழு - பகுதி, ந் - இடைநிலை, அன் - விகுதி; கொழு - பற்றுக்கோடு, அது இலக்கணையாக ஆதரவை யுணர்த்துகின்றதாதலால் பண்படியாகப் பிறந்ததென்றும். தந்தை - பொருளடியாகப் பிறந்தபெயர்; தாம்-பகுதி, ஐ- ஆண்பால் முறைப்பொருண்மை விகுதி, பகுதி முதல் குறுகியது குறுக்கல், மகரம் நகரமானது சந்தி, பகுதி ஒருமையில் பன்மை வந்த வழுவமைதி; த் - எழுத்துப்பேறு. தை-விகுதி எனினும் பொருந்தும். அறவோர் என்பதில் அகரம் ஒகாரமானது நன் - பொது - ௫-௨ "இல் ஆதலும்" என்ற ஆக்க உம்மையால் அமைக்க. அனையோர்க்கும் என்பதற்கும் இது ஒக்கும். இது பண்படியாகப்பிறந்தபெயர்; அத்தனை என்பதன் மரூஉ ஆகிய அனை - பகுதி, வ் - பெயரிடைநிலை, அர் - பல்லோர் படர்க்கைவிகுதி. பிரமசரிய முதலிய நிலையாவன:— ஆசிரியனிடத்தினின்று ஓதுதலும், விரதங்களை வழுவாமல் செய்தலுமாகிய பிரமசரியநிலை; தன் மனையாளோடு கூடி, அவளிடத்தன்பும், பிறர்க்குப் பகுத்துண்ணும் அறமுமுடைமையாகிய இன்னிலை; வீட்டைவிட்டு வனத்துக்குத் தீயோடு சென்று, மனையாள் வழிபாடு செய்பத் தவஞ்செய்தலாகிய வானப்பிரத்தநிலை; முற்றத்துறந்த போகவொழுக்கமாகிய சந்நியாசநிலை என்பன. பைம்பொற்பூண் என்பதைப் பைம்பூணென்றது ஓர் குறிப்பாகிய மரபுவழுவமைதி. உலகபாலருருவாய் நின்று உலகங்காத்தலின் அரசனை 'இறை' என்றும், 'அனையோர்க்குந் தெய்வம்' என்றுங் கூறினர். இறை: இற-பகுதி, ஐ-புடைபெயர்ச்சியை யுணர்த்தும் விகுதி; பகுதியீற்று அகரக்கேடு கடைக்குறை; இது தொழிலாகுபெயர்; பொருள்: மூலப்பகுதியையும், அதன் காரியமாகிய உலகையுங் கடந்துநிற்பவனென்பது; கடவுளென்

பதும் இது; ஐ-விகுதியை வினைமுதற்பொருண்மை விகுதியெனினும் ஒக்கும். (உசு)

கொடுங்கோன்மை.

கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத் தின் பாலதே யாயினும் - தண்ணளியால்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு.

(இ-ள்.) வயம் - வெற்றியைத் தாத்தருந்த, படை - ஆயுதம், ஆண் அல்லவர்க்கு - பேடிகளுக்கு, என் பயக்கும் - என்னபயனைத் தரும்; (அதுபோல) கண்ணின் - கண்ணால், சொல்லி - (தமதெண்ணத்தைத்) தெரிவித்து, செவியின் - காதினால், நோக்கும் - பிறர் செய்திலை அறிந்துகொள்ளும், இறை மாட்சி - அரசச்செல்வம், புண்ணியத்தின் - (முன்செய்த) நல்வினையினது, பாலதே ஆயினும் - வகையையுடையதானாலும், தண் அளியால் - தண்மையாகிய அன்பினால், மன்பதை - மனிதர்களை, ஓம்பாதார்க்கு - பாதுகாவாத அரசர்களுக்கு, என் ஆம் - (அவ்வரசச்செல்வம்) என்னபயனுள்ளதாகும் (ஒருபயனையுந் தராது), எ-று.

(வி-ரை.) இலக்கணையால் வாயினது வினையாகிய சொல்லியென்பதைக் கண்ணின்மேலேற்றியும், கண்ணினது வினையாகிய நோக்குமென்பதைக் காதின்மேலேற்றியுங் கூறியது அரசச்செல்வத்தினது பெருமை தோன்றற்கு. புண்ணியத்தின்பாலது என்பதில் நிலைமொழியீற்றில் பண்புத்தற்கிழமைப்பொருளதாய்த் தொக்குநின்ற ஆறாம்வேற்றுமை, வருமொழியாகிய பாலதென்னுங் குறிப்புவினைமுற்றின் பகுதியாகிய பால் என்பதனோடு முடிந்தது. ஏ - பிரிநிலை. உம்மை உயர்வுசிறப்பு. மன்பதை, ஞைஞ்ஞீல் இரண்டும் மக்கட்பரப்பு. என் இரண்டும் வினாப்பெயர். உடையானது வெற்றியைப் படையின்மேலேற்றி வயப்படை என்றது ஓர்மரபுவழுவமைதி. பயக்கு

மென்றும் செய்யுமென் முற்றின் பகுதியாகிய பய என்பது பயமென்றும் பெயரடியாகப்பிறந்தது. ஆணல்லவர் என்பது எழுவாய்த்தொகாநிலைத் தொடராயினும் ஒருசொல்லின் தன்மையதாகிப் பேடிகளுக்குப் பெயராயிற்று; இதுவே பொருளென்பதை "பேடிகை பொன்கொள்" எனவும், "பேடிகையினுயுதம் விளங்கினென்ன" எனவும் வருவனவற்றாலுமுணர்க. அவர் பெண்ணிலக்கணமிருந்தும், அத்தன்மை ஆணிலக்கணமிழந்தவர். அதுபோல என்பது இசையெச்சம். இதுவும் மேலையணி. (உஎ)

கொடுங்கோன்மை.

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொளலு மாண்பே - குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

(ப-ரை.) குடி - குடிகளை, கொன்று - வருத்தி, இறை - வரியை, கொள்ளும் - வாங்குகின்ற, கோமகற்கு - அரசனுக்கு, கற்றா - கன்றையுடைய பசுவினது, மடி - மடியை, கொன்று - அறுத்து, பால் - பாலை, கொளலும் - பெறுதலும், மாண்பே - நற்செய்கையே; குடி - குடிகளை, ஓம்பி - வருத்தாமல், கொள்ளும் ஆறு - (வரி) வாங்கும் வழியில், கொள்வோர்க்கு - வாங்கும் அரசர்க்கு, மா நிதியம் - பெருந்திரவியம், வெள்ளத்தின் உம் - வெள்ளமென்னும் எண்ணினும், மேல் பல - அதிகமாகப் பல இருத்தலை, காண்டுமே - காண்கின்றோமே, எ - று.

(வி-ரை.) இஃதறியாது அவன் குடிகளை வருத்துவதென்னை என்பது குறிப்பெச்சம். இருத்தல் - சொல்லெச்சம். ஏ இரண்டனுள் முன்னது பிரிநிலை; பின்னது குடிகளை வருத்தாமல் முறையாக வரி வாங்குகின்றவர்களுக்குப் பெருந்திரவியம் உண்டாயிருத்தலை அறியாமல், குடிகளை வருத்துவதைக் குறித்த இரக்கப்பொருளது. உம்மை

களில் முன்னுள்ளது இறந்ததுதழீஇயது; பின்னுள்ளது உயர்வுசிறப்பு. கோமகன்-கோவாகிய மகனென்பது பொருளாதலால் இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். மகன் - ஆடவன். ஆறு என்பது ஈறு தொகுத்தலாயிற்று. கொள்வோர் - உயர்வுபற்றிவந்த பால்வழுவமைதி. தம்போல்வாரையும் தம்மோடுபடுத்துக் கூறினதாதலால் காண்டும் என்பது உளப்பாட்டுத் தன்மைப்பன்மை இறந்தகால வினைமுற்று; பால்வழுவமைதி அன்று. இது நிகழ்காலம் இறந்தகாலமாக வந்த காலவழுவமைதி. ஐந்தனுருபு எல்லைப்பொருளது. இறை-தொழிலடியாகப் பிறந்தபெயர்; இறு-பகுதி, (கட்டு) ஐ-செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. மடி - இதுவும் அப்பெயர்போல்வது; மடு - பகுதி, (உண்டு) இ-செயப்படுபொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி; தன் கன்றால் உண்ணப்படுவதென்பது பொருள். (உ௮)

கொடுங்கோன்மை.

இன்று கொளற்பால நாளை கொளப்பொறான்
நின்று குறையிரப்ப நேர்படான் - சென்றொருவன்
ஆவன கூறி னெயிறலைப்பா னாறலைக்கும்
வேடலன் வேந்து மலன்.

(இ-ள்.) இன்று - குறித்தநாளில், கொளற்பால - கொள்ளத் தக்க பொருள்களை, நாளை - மறுநாளில், கொள்ள - வாங்கிக்கொள்ள, பொறான் - பொறுக்கமாட்டான்; நின்று - எதிரில்நின்று, குறை-குறைகளை, இரப்ப-யாசித்துக் கேட்டுக்கொள்ள, நேர்படான் - எதிர்படான்; ஒருவன் சென்று - எவனாயினும் போய், ஆவன - தனக்கு வேண்டியவற்றை, கூறின்-கேட்டுக்கொண்டால், எயிறு அலைப்பான்-தன்பல்லைக்கடித்துப் பயமுறுத்துவான்; (இவ்வரசன் காட்டிலிருந்து பறியாமையால்) ஆறு அலைக்கும் - வழிபறிக்கும், வேடு அல்லன்-வேடன் அல்லன்; (குடிகளை முறையாகக் காக்காமையால்) வேந்தும் அல்லன் - அரசனும் அல்லன், எ-று.

(வி-ரை.) எனவே வேடன் செயலும் அரசன் செயலு முள்ளா னென்பது. இன்று குறித்த நாளையும், நாளை அதை அடுத்த மறு நாளையுங் காட்டிய குறிப்புச் சொற்கள். கொளற்பால என்பதில் கொளல் என்றுந் தொழிற்பெயரோடு பால என்றுங் குறிப்புவினைப் பெயரின் பகுதி இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத் தொடராகப் புணர்ந்தது. இவ்வாறன்றிக் கொள்ளுதலினது பகுதியையுடையன எனப் பொருள்கொண்டு, ஒற்றுமைப்பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரெனினும் பொருந்தும். இரப்ப - காரியப்பொருட்டாகிய எதிர்காலச் செயவெனெச்சம். இர - பகுதி, ப்-சந்தி, ப்-விரித்தல் விகாரம், அ-எதிர்கால வினையெச்சவிகுதி. ஒருவனென்பதில் பகுதியாகிய ஒன்றென்னும் வரையறைப்பண்பு குறிக்கப்படாத பொருள்தந்தது. ஆவன-எதிர்கால வினையாலணையும் பெயர். வேடு-வேந்து-பண்பாகுபெயர்கள். எயிறலைத்தல்-பற்களை மெல்லுதல். ஆறலைத்தல் - வழியில்வருத்துதல். தந்துரைத்தன எல்லாம் இசையெச்சம். (உக)

கொடுங்கோன்மை.

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப வுடுத்துண்ப வுண்டு - இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிகொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.

(இ-ள்.) முடிப்ப - முடிப்பதற்குரிய மலர்களை, முடித்து-(சிகையில்) முடித்துக்கொண்டும், பின் - பின்பு, பூசுவ - பூசுதற்குரிய பூச்சுகளை, பூசி - பூசிக்கொண்டும், உடுப்ப - உடுத்தற்குரிய ஆடைகளை, உடுத்து-உடுத்துக்கொண்டும், உண்ப - உண்ணுதற்குரிய உணவுகளை, உண்டு - உண்டும், இடித்திடித்து - பலமுறை நெருக்கி, கட்டுரை - உறுதிமொழிகளை, கூறின் - சொன்னால், செவி கொள்ளா - காதிற் கொள்ளா, கண் விழியா - (எதிரில் நிற்பவர்களைக்) கண்கள் திறந்து

பாரா, (ஆதலால் அவை) நெட்டுயிர்ப்போடு - பெருமூச்சையுடையன வாய், உற்ற - கெடாமலுள்ள, பிணம் - பிணங்களாம், எ-று.

(வி-ரை.) முடிப்ப, பூசுவ, உடுப்ப, உண்ப என்பவை வினைமுதல் வினையைச் செயப்படுபொருளின்மேலேற்றிக்கூறிய வினையாலணையும் பெயர்கள். உண்ணா-செய்யா என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். அடுக்குப் பன்மைப்பொருட்டு. கட்டுரை-நெட்டுயிர்ப்புப்போன்ற பண்புத்தொகைநிலைத்தொடர். கூறின்-செயினென்வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்; கூறு-பகுதி, இன் - இறந்தகால வினையெச்ச விகுதி; உகரக்கேடு சந்தி; கூறல்-செவிகொள்ளுதற்கு முன் நிகழ்ந்ததாதலால்இறந்தகாலத்ததென்றும். கொளா, விழியா-பலவின்படர்க்கை எதிர்மறை வினைமுற்றுகள். ஓடுருபு விசேடணப் பொருளில்வந்தது. முடித்தல், பூசுதல், உடுத்தல், உண்ணலாகிய உயிருள் பொருளின் தொழிற்பண்பும், செவிகொளாமை, கண்விழியாமையாகிய உயிரில் பொருளின் தொழிற்பண்பும் உண்டாயிருத்தலால் அவ்வரசர்களை 'நெட்டுயிர்ப்போடுற்றபிணம்' என்றது ஏதுவுருவகவணி. (௩௦)

அரசன் முதறிவு.

ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றோ டுணையாத் தெரிதந்தும் - குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று.

(இ-ள்.) ஒற்றின் - வேவுகாரனால், தெரியா - (உண்மைகள்) அறியப்படா; சிறைப்புறத்து - ஒதுக்கிடத்திலிருந்து, ஓர்தும் என - அறிவோமென்று, பொன் தோள் - தனது அழகிய தோளே, துணை ஆக - துணையாகப்போய், தெரிதந்தும் - தெரிந்துகொண்டும், குற்றம் - (ஒருவரிடத்துள்ள) குற்றங்களை, அறிவு அரிது என்று - துணிதல் அருமையுடையதென்று, அஞ்சுவதே - பயப்படுவதே, செங்கோன்மை - அரசநீதியாம்; சென்று - (ஒருவன்) போய், முறையிடினும் - குறை

களைச் சொல்லிக்கொண்டாலும், கேளாமை அன்று - காதுகொடாமை அன்று, எ - று.

(வி-ரை.) பொற்றோன் துணையாக என்றமையால் பிறரறியாமல் தான் தனித்துச் செல்லவேண்டுமென்பது. ஒற்று-ஒன்றென்னும்வரை யறைப் பண்புப்பெயரினடியாகப் பிறந்த ஒன்று-பகுதி, தல் - விகுதி புணர்ந்து கெட்டமாத்திரையில் திரிந்தமையினால் முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; இது பகைவர், அயலவர், நட்பினரென்னும் மூவகை யாரிடத்தும் வேற்றுமை தோன்றாதபடி ஒன்றுபட்டிருந்து, நடந்தன வற்றை அறியவல்லவினை உணர்த்துதலால் தொழிலாகுபெயர். தெரி யா என்னும் வினைக்கு உண்மைகள் என்னும் எழுவாய் வருவிக்கப் பட்டது. சிறை என்பதற்கு மதிலெனை உரைப்பினும் பொருந்தும்; அது வழக்குக்கு வருவோருடைய வீட்டுமதில். ஓர்தமென்னுந் தனித் தன்மைப்பன்மைக்கு இலக்கணம் பதினான்காஞ் செய்யுளில் கற்றன மென்பதற்குக் கூறியதுபோலக் கூறுக. துணையாக என்பதில் ஈறு தொகுத்தல். தெரிந்து - இறந்தகால வினையெச்சம்; தெரி என்னும் முதனிலையோடு தா என்னும் முதனிலை புணர்ந்து, இரண்டும் ஒரு சொல்லின் தன்மைப்பட்டுநின்ற தெரிதா-பகுதி, த்-சந்தி, த் இறந்த கால இடைநிலை, உ-வினையெச்சவிகுதி, பகுதி ஆ அவ்வானது குறுக் கலும், சந்தித் தகரம் நகரமானது மெலித்தலுமாகிய விகாரம். தா என்னும் முதனிலை செய்தந்து, அபர்தந்து என வேறு முதனிலைக ளோடும் வருதல் காண்க. உம்மைகளிரண்டும் உயர்வுசிறப்பு. ஏ - பிரி நிலை. செங்கோன்மை-செம்மையாகிய கோல்போன்ற ஆளுகையின் தன்மை. செங்கோல் - அடையடுத்த உவமையாகுபெயர். கேளாமை- எதிர்மறைத் தொழிற்பெயர்; இம்மை விகுதி கேட்கின்றமை, கேட் டமை என எதிர்காலமல்லாத மற்றகாலத் தொழிற்பெயர்க்கும், ஆன்மை எனக் கால இடைநிலைபெறாத தொழிற்பெயர்க்கும் வருதல் அறிக. (௩௧)

கேடறிதல்.

ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு - நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு.

(இ-ள்.) நேர் நின்று - எதிரில் நின்று, காக்கை - காகம், வெளிது - வெண்மையுடையது, என்பார் - என்றுசாதிப்பவர், என் சொல்லார் - வேறெதைச் சொல்லார்; தாய்க்கொலை - தயினைக் கொலை, சால்பு உடைத்து - ஒவ்வுதலுடையது, என்பாரும் - என்று சொல்வாரும், உண்டு-(சிலர்) உளர்; (ஆதலால்) ஏதிலார்-அந்நியர், யாதும் - மெய்யையே அல்லாமல் பொய்யையும், புகல-சொல்ல, இறைமகன் - அரசன், கோது - பொய்யாகிய குற்றத்தை, ஒரீஇ - நீக்கி, கொள்கை- (உண்மையை) அறிந்துகொள்ளல், முதுக்குறைவு-பேரறிவாம், எ-று.

(வி ரை.) பின்னிரண்டடியிலுள்ள இரண்டுமுடிபும் கோதொரீஇக் கொள்கைக்கு ஏதுவாக்கியங்களாதலால் கொள்கை எழுவாய், முதுக் குறைவு பயனிலை என்க. யாதுமென்னுமும்மை முற்றுப்பொருளோடு இழிவுசிறப்பில் வந்தது. என்பாருமென்னு மும்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. ஒரீஇ - இறந்தகால வினையெச்சம்; ஒரு - பகுதி, உகரத்தின் திரிபாகிய இகரம் விகுதி, இகரம் ஈகாரமாய் அளபெழுந்தது நீட்டல்விகாரம், உகரக்கேடு சந்தி; இவ்வளபெடை சொல்லிசையளபெடை; இவ்வினை தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாயினும் இங்குப் பிறவினையாய் நின்றது. முதுக்குறைவு-வினைமுதற்பொருண்மையில் வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராயினும் ஒருசொல்லின் தன்மைப்பட்டுக் கூறறிவுக்காயிற்று. முதுமை-வன்மை; இதில் மை விகுதி தொகுத்தல். தாய்க்கொலை - செயப்படுபொருளில் வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்; கொலை - தொழிற்பெயர். வெளிது-பண்படியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று; வெண்மை-பகுதி,

மைவிகுதி கெட்டது சந்தி, இ-சாரியை, து-ஒன்றன்படர்க்கை விகுதி. என்-விகுதிப்பெயர்; எவனென்பதன் மரூஉ அன்று. சால்பு - நிறைவு. அது எல்லாருடைய சம்மதத்துக்காயிற்று. காக்கை - தொழிலடியாகப் பிறந்தபெயர்ச்சொல்; கா-பகுதி, கு-சாரியை, ஐ-வினைமுதற்பொருண்மைவிகுதி, ககரத்தோற்றமும், உகரக்கேடும் சந்தி; பொருள்-மற்றபறவைகள்போலாமல், தனக்கு இரையாயினவற்றைக் கண்டபோது, மறைக்காமல், தன் இனத்தை அழைத்து உடனுண்ணுதலும், இனத்திலொன்றுக்குப் பிறரால் துன்பம் நேரிட்டால் இரங்குதலும், தன்னால் இயன்றமட்டும் அவர்க்கு ஊறு செய்ய முயலுதலுமாகிய காத்தலையுடையதென்பது. இச்சொல் ஆரியத்தின் சிதைவெனினு மொக்கும். உயிரோம்புதலில் சிறந்த பொருளென்பது பொருளெனின், உயிருள்ள சரப்பொருள்களில் தன்னுயிரைக் காப்பதில் ஒவ்வொன்றும் சிறந்ததே அன்றிச் சிறவாததொன்றுமில்லை யாதலால் அது பொருளன்றென்க.

கேடறிதல்.

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகும் - மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து.

(இ-ள்.) மண்டு எரி - மிகுந்த தீயானது, வாய்மடுப்பினும்-சூழ்ந்தெரியினும், மாசுணம் - பெரும் பாம்புகள், பெருமூச்சு எறிந்து - பெருமூச்சுவிட்டுக்கொண்டு, கண் துயில்வ-நித்திரைசெய்வன, பேரா-(தூங்கும் இடம்விட்டு) நீங்கா ஆம்; (அதுபோல) கேடு - இடுக்கண், கண் கூடாக - கண்ணுக்குத் தோன்றுவதாக, பட்டது எனினும் - பொருந்தியதாயினும், கீழ்மக்கட்கு - கீழ்மக்களுக்கு, உணர்ச்சி - (அக்கேட்டில்நின்றும் ஒழியத்தக்க) அறிவு, உண்டோ - உண்டாகுமோ, மற்று இல் ஆகும் - இல்லையாகும், எ - று.

(வி-ரை.) கண்கூடாக என்பதை நான்காம்வேற்றுமைத் தொகை நிலைத்தொடராகக் கொள்ளலே அன்றிக் கண்கூடுவதாக என எழுவாய்த் தொகாநிலைத்தொடராக்கினும் அமையும். கூடு என்னும் முதனிலையோடு ஆ என்னும் முதனிலைகூடி இரண்டும் ஒருசொல்லின்தன்மைப் பட்டுநின்ற கூடா - பகுதி, கு-சாரியை, அ-வினையெச்சவிகுதி, உகரக் கேடு சந்திபெற்று முடிந்த கூடாக என்னும் செயவெனெச்சம் ஈறு தொகுத்தலாய் நின்றது. கேடு-முதனிலைதிரிந்த தொழிற்பெயர் தன் காரணமாகிய இடுக்கணுக்கு ஆதலால் காரியவாகுபெயர்; இவ்வாறன்றிக் கேட்டைத் தருவதென்னும் பொருளில் தொழிலடியாகப்பிறந்த பெயரெனக்கொண்டு, கெடு-பகுதி, வினைமுதற்பொருண்மை விகுதியாகிய இ புணர்ந்துகெட்டு, கெட்டமாத்திரத்தில் பகுதி எகரம் ஏகாரமாயினதெனினும் பொருந்தும். இக்கேட்டின் குறியை அடிப்பாட்டில் விளங்க உணர்க. உம்மைகளிரண்டும் உயர்வுசிறப்பு. ஓ - எதிர்மறை. மற்று-வினைமாற்றுப்பொருளது. வாய்மடுப்பின் - வாயால் உண்ணின் என்பது பொருள்; எரியின் என்பதை இவ்வாறு கூறியது இலக்கணை. பின் கண் எனவேண்டாது கூறினர் வருங்கேட்டை உணராமல் நித்திரித்தலாகிய இழிவை உணர்த்தற்கு. தான்-அசை. மாசுணம் - பால்பகா அஃறிணைப்பெயராயினும், கண் துயில்வ என்றமையால் பன்மையாய், மாசுணங்கண்டுயில்வ என்பது பால்வழுவமைதியாய் நின்றது. மேன்மக்கள் கேடு நேரிடுவதானால் முன்னதாக அறிந்து அதனைத் தடுக்க முயல்வார்; கீழ்மக்களோ நேரிட்டகாலத்தும் ஒருமுயற்சியுமின்றி யிருப்பரென்பது கருத்து. இது எடுத்துக்காட்டுவமையணி. (௩௩)

கேடறிதல்.

நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுதல் - தக்கார்
நெடுமொழி கோறல் குணப்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி.

(இ-ள்.) நட்பு - நட்பினரை, பிரித்தல் - பகையாக்கலும், பகை - பகைவரை, நட்டல் - சிநேகித்தலும், ஒற்று - வேவுகாரரை, இகழ்தல் - அவமதித்தலும், பக்கத்தார் யாரையும் - பக்கத்திலுள்ளோர் எல்லாரிடத்தும், ஐயுறுதல் - சந்தேகித்தலும், தக்கார் - பெரியோருடைய, நெடுமொழி - உறுதிச்சொற்களை, கோறல் - கடந்து நடத்தலும், குணம் - (முன்னிருந்த) தன்மை, பிறிது ஆதல் - வேறு ஆதலும், கெடுவது - வரவேண்டியதாகிய கேட்டை, காட்டும் - முன்னே காட்டுகின்ற, குறி - குறிகளாம், எ-று.

(வி-ரை.) இச்செயல்கள் ஓரரசனிடத்துண்டாயின் அவன் கெடுவனென அறிக என்பது கருத்து. பிரி-பிரிதல், பிரித்தல் எனவும், கெடு-கெடுவது, கெடுப்பது எனவும் வருதலால் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவான பகுதிகள். நட்பு-காரியவாகுபெயர், தொழிலாகுபெயருமாம். பகை, ஒற்று என்பவற்றிற்கு முன்னே இலக்கணம் சொல்லப்பட்டது. சாமுறுதலென்பதுபோல ஒருசொல்லின் தன்மைப்பட்டுநின்ற ஐயுறுதல் தொழிற்பெயர்; ஐயம் உறு என்னும் முதனிலைப் புணர்ச்சியில் அம் கேடு கடைக்குறையாய்ப் புணர்ந்த ஐயுறு-பகுதி, தல்-புடைபெயர்ச்சிவிகுதி. நட்டல்-தொழிற்பெயர்; நள்-பகுதி, தல்-புடைபெயர்ச்சி விகுதி, ளகர தகரங்கள் டகரமானது சந்தி. தக்கார்-இறந்தகாலவினையாலணையும் பெயர். தகு என்னும் முதனிலை இரட்டியதே இறந்தகாலங்காட்டியது. நெடுமை - பெருமை; பெருமையைத் தருமொழியை நெடுமொழி என்றது ஓர் குறிப்பாகிய மரபுவழுவமைதி. கோறல்-தொழிற்பெயர்; கொல்-பகுதி, தல்-புடைபெயர்ச்சி விகுதி, பகுதி ஒகரம் ஓகாரமானது நீட்டல் விகாரம், லகரக்கேடும் தகரத்திரிபும் சந்தி. (௧௪)

மேன்மக்கள் குணம்.

கன்றூக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா - வண்மை

பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு.

(இ-ள்.) கண் நோக்கு (ஏ) - கண்ணினது குளிர்ந்தபார்வையே, அரும்பு ஆக - அரும்பாகவும், நகை முகமே - இனியமுகமே, நாள் மலர் ஆக - புதுமலராகவும், வாய்மையின் இன்மொழியே - உண்மையாகிய இன்சொல்லே, தீ காய் ஆக - மதுரமான காயாகவும், வண்மை (ஏ)-கொடையே, பலம் ஆக - பழமாகவும், நலம் கனிந்த - இந்நன்மைகள்மிகுந்த, பண்பு உடையார் அன்றே - தன்மையுடையார்களே, சலியாத - (கொடுப்பதில்) சலித்தலில்லாத, கற்பதரு-கற்பகதரு ஆவர், எ - று.

(வி-ரை.) நோக்கென்பதனீற்றிலும், வண்மை என்பதனீற்றிலும் தேற்றேகாரம் தொகுத்தல். ஆக என்னும் வினையெச்சங்களினீறும் அவ்விகாரம். அன்றே - தெளிவுப்பொருளில் வந்தது. கற்பகமென்பது கற்பமெனவும் ஆரியத்தில் வழங்கும். நோக்கு-முதனிலைத் தொழிற்பெயர். தம்மிடத்து வரும் யாசகர் தூரத்திலேயே திரும்பிப் போகாதபடி பார்க்குங் குளிர்ந்த பார்வையை அரும்பாகவும், நெருங்கும்படிக் காட்டுகின்ற முகமலர்ச்சியை மலராகவும், நெருங்கியபின் யாது வேண்டுமென வினவுகின்ற உண்மையாகிய இன்சொல்லைத் தீங்காயாகவும், பின்கொடுக்கும் கொடையைப் பழமாகவும், கொடுப்பவரைக் கற்பகத்தருவாகவும் உருவகஞ் செய்தமையால், இது முற்றுருவகம். மதுரத்தை யுணர்த்தும் தீ என்பது அடுக்கிக் குறுகின்ற போது, தித்தித்தல் தித்தித்த, தித்தித்து, தித்தித்தது எனவரும் வினைவிகற்பங்களுக்கு முதனிலையாகும். (கச)

மேன்மக்கள் குணம்.

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா - ஆங்கதுகொண்

டூருமெறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று.

(ப-ரை.) வாங்கும் - தாம் வாங்கிக்கொள்ளும், கவளத்து - கவளத்தில், ஒரு சிறிது - மிகச்சிறிதாகிய, வாய்-வாயிலிருந்து, தப்பின் தவறிச்சிந்தினால், தூங்கும் - அசையுமியல்புள்ள, களிறோ - யானைகளோ, துயர் உறா - துன்பமடையா; ஆங்கு - சிந்திய இடத்தில், அது கொண்டு - சிந்திய அரிசியைப்பெற்று, ஊரும் - தவழ்கின்ற, ஒரு கோடி எறும்பு - பல எறும்புகள், இங்கு - இப்பூமியில், ஆரும் - நிரம்புகின்ற, கிளையோடு - சுற்றத்தோடு கூடி, அயின்று - உண்டு, உய்யும் - சீவித்திருக்கும், எ-று.

(வி-ரை.) தமதாளுகைக்குளடங்கிய அரசரும், குடிகளும் கட்டுகின்ற இறைப்பணமாகிய தமது செல்வப்பொருளில் சிறிது இழந்துவிட்டால் அதைக்குறித்துப் பேரரசர்கள் துன்பப்படார்; பொருளுக்காக முயல்கின்ற எளியர்பலர் அவ்விழந்த பொருளைப்பெற்றுத் தமது குடும்பத்தோடு சீவனஞ் செய்வரென்னும் பொருள்தாலால் இது பிறிதுமொழிதலென்னும் அணி. ஒட்டணி எனினும் பொருந்தும். இப்பொருளைச் சொல்லிலக்கணத்தார் குறிப்பெச்ச மென்பர். ஒரு சிறிதென்பதில் ஒன்றென்னும் வரையறைப்பண்பு சிறுமை என்னும் பொருள்பட நிற்றலால், வருமொழிப் பகுதியோடு ஒருபொருட் பன்மொழியாய்நின்றது. ஓ-உயர்வுசிறப்பு. ஒருகோடி என்பது பன்மையைக் காட்டவந்ததோர் குறிப்புச்சொல். கிளை என்னும் முதனிலைத் தொழிற்பெயர் கோட்டுக்கானது தொழிலாகுபெயர்; அது கிளைபோன்ற சுற்றத்துக்கானது உவமையாகுபெயர். கிளை-கோடுகளை உணர்த்தியபோது கிளை என்னும் பகுதியோடு வினைமுதற்பொருண்மை விகுதியாகிய இகரம் புணர்ந்துகெட்ட தொழிலடியாகப் பிறந்த பெயரெனினும் ஒக்கும். அயின்று-இறந்தகாலவினையெச்சம்; அயில்-பகுதி, ற்-இறந்தகால இடைநிலை, உ-வினையெச்சவிகுதி, லகரம் றகரமாதல் சந்தி, அது னகரமாதல் மெலித்தல். (கக)

அரசன் மதிப்பு.

மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை
ஈகையி னெக்கழுத்த மிக்குடைய - மாகொல்
பகைமுகத்த வெள்வேலான் பார்வையிற் றீட்டும்
நகைமுகத்த நன்கு மதிப்பு.

(இ-ள்.) மாகம் - பெரிய ஆகாயமானது, சிறுக - சிறிதாம்படி, நிதிக்குவை - திரவியராசியை, குவித்து-குவியல்செய்து, ஈகையின் - கொடுப்பதினும், மா கொல்-யானையைக் கொல்லுகின்ற, பகை-பகைத் தன்மையை, முகத்த - தன்முனையிலுள்ள, வெள்வேலான் - ஒளிபொருந்திய வேலையுடைய அரசனது, பார்வையின்-பார்வையால், தீட்டும்- எழுதப்படுகின்ற, நகைமுகத்த - மலர்ந்த முகத்திலுள்ள, நன்கு மதிப்பு - உயர்வாக மதித்தல்கள், எக்கழுத்தம் - தலையெடுப்பை, மிக்கு உடைய - மிகுதியும் உடையன ஆம், எ - று.

(வி - ரை.) கல்வி அறிவு செல்விகளைக்குறித்து ஒருவனைக் காணும்போதெல்லாம் செய்வதைப்பற்றி நன்குமதிப்புப் பல ஆயது. மற்ற பூதங்களைத் தன்னுளடக்கி நிற்கும் பெருமையுடைய தென்பார் ஆகாயத்தைக் கம் என வாளா கூறாது 'மாகம்' என்றும், பகைவரை வணங்காத வலியுடையானென்பார் 'பகைமுகத்த வெள்வேலான்' என்றுங் கூறினர். மிகுந்த பொருளினும் நன்குமதிப்பே ஒருவனுக்குச் சிறந்ததென்பது கருத்து. சிறுக - சிறுகு என்னும் வினையடியாகப் பிறந்த செயவெனெச்சம், காரியப்பொருளதாதலால் எதிர்காலத்தில் வந்தது. நிதிக்குவை - ஒன்றன்கூட்டத் தற்கிழமைப் பொருளதாகிய ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். அட்டு என்பதுபோல மிக்கு முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; இறந்தகால வினையெச்சமன்று. முகத்த இரண்டும் குறிப்புப் பெயரெச்சம்; முன்னது சினையடியாகப் பிறந்தது; பின்னது இடமடியாகப் பிறந்தது. பார்வை-தொழிற்பெயர். வெள்வேலென்பதில் வெண்மை ஒளியை யுணர்த்திற்று.

ஒளிக்கு வெளி என ஒரு பெயர் வழங்கலுங் காண்க. வழக்கத்தில் வெளிச்சமென்பதும் அது. (௩௭)

மேன்மக்கள் குணம்.

பணியப் படுவார் புறங்கடைய ராகத்
தணிவில் களிப்பினுந் தாழ்வார்க் - கணிய
திளையான் முயக்கெனினுந் தீதன்றே மூத்தாள்
* * * * போகங் கொளல்.

(இ-ள்.) பணியப்படுவார்-(தம்மால்) வணங்கப்படும் பெரியோர், புறங்கடையர் ஆக - தலைவாயிலிடத்தராக, தணிவு இல் - குறைவில்லாத, களிப்பினால் - செல்வக்களிப்பினால், தாழ்வார்க்கு - (அவரை யெதிர்கொள்ளத்) தாமதிக்கும் அரசர்கட்கு, இளையாள் முயக்கு - சீதேவியினது போகம், அணியது எனினும் - சமீபித்திருந்தாலும், மூத்தாள் - மூதேவியினது, * * * * போகம் கொளல் - போகத்தைக் கொள்ளுதல், சேய்த்து அன்று - தூரமல்ல, எ-று.

(வி-ரை.) தமது செல்வக்களிப்பால் பெரியோர்களை யெதிர்கொள்ளாத அரசர்கள் கெடுவர் என்பது கருத்து. களிப்பு - கள்ளுண்டலால் வருமறதி; செல்வத்தால் தம்மை மறந்திருத்தல் கூடும்; ஆதலில் அம்மறதியைக் 'களிப்பு' என்றார். களிப்பு - தொழிலாகுபெயர்; களி - பகுதி, ப் - சந்தி, பு - விகுதி. முயங்குதலால் வரும் போகத்தை முயக்கு எனக் காரியத்தைக் காரணமாக வுபசரித்தார். முயக்கு - முதனிலைத் தொழிற்பெயர், இடைநின்ற ங் க் ஆதல் வலித்தல் விகாரம். அணி

* இச்செய்யுள் "கண்மேனுக்கரும்பா" என்றுவருஞ் செய்யுளுக்கு முன்னிருக்கவேண்டும். இஃது அங்கு விடுபட்டது. ஆகையால், இதனை அங்குச் சேர்த்துப் படிக்கவும். இதற்குக் கோமளபுரம்-இராஜகோபாலப்பிள்ளை யவர்கள் உரை கிடைத்திலது; ஆகையால், இதற்கு மாத்திரம் சென்னைச் சோடசாவதானம் - சுப்பராயச்செட்டியா ரவர்கள் உரை சேர்க்கப்பட்டது.

வது - அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று; அணிமை - பகுதி, ஈறுகெடுதலும், யகரந்தோற்றமுஞ் சந்தி, அ - சாரியை, து - விகுதி. செய்த்து: செய்மை - பகுதி; ஈறுகெடுதலும், தகரத்தோற்றமும் சந்தி, து - விகுதி. இளையான் மூத்தான் பொருண் முரண. இது விரோத அணியுள்ளடங்கும். மூத்தான் - இறந்தகால வினைமுற்றுப்பெயர்; மூ-பகுதி, த்-சந்தி, த்-இடைநிலை, ஆன்-விகுதி.()

மானமிழத்தல்.

கிளைகளாந் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார் - தளர்நடைய
தூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தாமுடம் பட்டார்க டாம்.

(ப-ள்.) ஊன் - இறைச்சியாலாகிய, உடம்பு - தேகம், தளர் - (பின்பு) தளர்கின்ற, நடையது என்று - முறைமையுடையதென்று, புகழ் உடம்பு - (அவ்வாறு) தளராத புகழாகிய உடம்பை, (அடைந்து) ஓம்புதற்கே - பாதுகாப்பதற்கே, உடம்பட்டார்கள் - பாத்தியப்பட்டவர்கள், கிளைகள் ஆக - ஆதரவாக எண்ணி, தம் அடைந்தார்க்கு - தம்மை அடைந்தவருக்கு, உற்றுழியும் - (சிறிது) துன்பம் வந்தவிடத்தும், மற்று ஓர் விளைவு - வேறொருபயனை, உன்னி - கருதி, வெறு உடம்பு - பயனில்லாத உடம்பை, தாங்கார் - தாங்கி உயிர்வாழார், எ - று.

(வி-ரை.) தம்முடலைத் துறந்தாவது காப்பாரென்பது குறிப்பெச்சம். மற்றோர் விளையென்றது குடும்பப் பாதுகாப்பு, உலகவின்ப மநுபவித்தல் முதலியவற்றை. ஆக என்பது ஆ என ஈறு தொகுத்தலாய் நின்றது. உற்றுழி-இறந்தகாலவினையெச்சம்; உறு-பகுதி, உழி-இறந்தகால வினையெச்சவிகுதி, பகுதி ஒற்றிரட்டல் விரித்தல், உகரக்கேடு சந்தி. உம்மை-உயர்வுசிறப்பு. மற்று-பிறிதென்னும் பொருளது. இஃது ஒரோன விகாரப்பட்ட ஒன்றென்பது குறிக்கப்படாமைப் பொருளதாக நின்றது. நடையது - தொழிலடியாகப் பிறந்த குறிப்பு

வினைமுற்று. வலனுடம்பு, புகழுடம்பு என்பனவற்றை மூன்றாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகவாயினும், பண்புத்தொகைநிலைத் தொடராகவாயினுங் கொள்க. ஊன் - னகரச்சாரியை பெற்ற பெயர். ஆன், ஆ என்பதுபோல ஊ எனவும் வழங்கும். ஏ-பிரிநிலை. உடம்பட்டார்கள் - செய்வினையாகிய இறந்தகால வினையாலணையும் பெயர்; பகுதி உடம்படு; இது உடன்படு என்பதன் மரூஉ.; இப்பகுதி ஒற்றிரட்டியதே இறந்தகாலங் காட்டியது; பொருள் ஒன்றைச் செய்தலில் பொருந்து என்பது. தாம், தான் - அசை. இது வீரச்சுவை. (௧௧)

மானமிழத்தல்.

தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்தம்
இன்னுயி ரோம்பினு மோம்புக - பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின்.

(இ-ள்.) தம்முடைய - தம்முடைய, ஆற்றலும் - வலியையும், மானமும் - மானத்தையும், தோற்று - இழந்து, தம் - தம்முடைய, இன்னுயிர் - இனிமையாகிய உயிரை, ஓம்பினும் - காப்பாராயினும், ஓம்புக - காக்கக்கடவர்கள்; பின்னர் - அப்படிக்காத்தபின், சிறுவரை ஆயினும் - கணப்பொழுதாயினும், தமக்கு - (இழிதொழில் செய்து சீவிக்கும்) தமக்கு, ஆங்கு - காத்தவிடத்து, இறுவரை - முடியும் எல்லை (அதாவது சாங்காலம்), மன்ற இல்லை எனின் - நிச்சயமாக இல்லையானால், எ - று.

(வி-ரை.) சாவென்பது நிச்சயமாயிருத்தலால் வலியும் மானமுங் கெடாமல் சீவிக்கவேண்டுமென்பது கருத்து. ஆற்றலும் மானமுந் தோற்று உயிர்வாழ விரும்புதல் உயிர்விடுந் துணிவில்லாமையாலாதலின் அவ்வுயிர் இன்னுயிரெனப்பட்டது. மானமாவது-எக்காலத்தினும் தமது நிலையில் குறையாமல் நின்று, வழுவால் குறைவுநேரிட்டால் உயிர்வாழ விரும்பாமை. ஓம்பினும் என்ற உம்மை ஓம்புதல் கூடா

தென்றும் பொருள்தாலால் எதிர்மறையும்மை. சிறுவரையாயினும் என்ற உம்மை இழிவு சிறப்பும்மை. சிறுவரை-சிற்றளவையுடையகால த்தை உணர்த்தலால் பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகிய காரணப்பெயர். இறுவரை - வினைத்தொகைநிலைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; விரிந்தால் இறுமெல்லை யுடையதென விரியும். தம்முடை என்பதில் ஆறும்வேற்றுமைச் சொல்லுருபின்று தொகுத்தல். அவனுடைய விறலி என்றாற்தொடர் மூன்றுசொல் இரண்டு சந்தியாய், முன்னது எழுவாய்ச் சந்தியும், பின் னது பெயரெச்சக்குறிப்புச் சந்தியும் என்பவர்களுடைய இலக்கணம் தம்முடையாற்றலென்பதற்கு ஒருவாற்றாலும் பொருந்தாமை அறிக. தம்மையுடைய என இரண்டாவதை விரிக்கலாமெனின், உடைமை உடையதாகவும், உடையான் உடைமையாகவும் நிற்றலால் மரபுவழு வாமென்க. (௪௦)

சாவஞ்சாமை.

கலனழிந்த கற்புடைப் பெண்டிரு மைந்தா
புலனொருங்கப் பொய்பொழிந் தாரும் - கொலைஞாட்பில்
மொய்ம்புடை வீரு மஞ்சார் முரண்மறலி
தும்பை முடிசூடி னும்.

(இ-ள்.) கலன் அழிந்த - மங்கலநாண் இழந்த, கற்பு உடைய - கற்பையுடைய, பெண்டிரும் - குலப்பெண்களும், ஐந்து புலன் - ஐம் புலன், ஒருங்க - கெட, பொய் - நிலையில்லதாகிய உலக இன்பத்தை, ஒழிந்தாரும் - விட்டோரும், கொலை - கொல்லுந்தொழிலையுடைய, ஞாட்பில் - போரில், மொய்ம்பு உடைய - (கலங்காமையாகிய) வலி யையுடைய, வீரரும் - வீரர்களும், முரண் மறலி - வலிமையுடைய நமன், தும்பை-தும்பைப்பூமாலையை, முடி சூடினும் - முடியில் சூடிக் கொண்டாலும், அஞ்சார் - கலங்கார், எ-று.

(வி-ரை.) இம்மூவரும் உயிரின்மேல் விருப்பமில்லாராதலால் மரணத்துக்கு அஞ்சாரென்பது கருத்து. தும்பைமலர்மாலை சூடுதல்

போர்க்குச் செல்வோர் செயலாதலால் தும்பை முடிசூடினும் என்பதற்கு உயிர்வருந்தும்படி வந்தாலுமென்பது பொருளாகக்கொள்க. இது காரணத்தைக் காரியமாகக் கூறுவதோர் உபசாரவழக்கு. கலன் - தலைமைபற்றி மங்கலநாணுக்காயிற்று. ஐந்துபுலன்: ௪-ஆம் செய்யுளுரையிற் காண்க. உலக இன்பம் நிலைபெறாததாதலால், அதனைப் 'பொய்' என்றார். பொய்ம்பு-பண்புப்பெயர்; பொய்-பகுதி, ம்-சந்தி, பு-பகுதிப்பொருள் விகுதி. தும்பை - முதலாகுபெயர். வீரர் - பண்படியாகப் பிறந்த பெயர்; வீரம் - பகுதி, அர்-பல்லோர்படர்க்கை விகுதி, பகுதியீற்று அம்முக்கெடு கடைக்குறை, மகரக்கேடு சந்தி, ர்-விகுதி எனினும் பொருந்தும். மறலி-பண்படியாகப்பிறந்த பெயர்; மறு என்னும் வினைமுதனிலையோடு அல் என்னும் பண்படி புணர்ந்து, உகரக்கேடாகிய சந்திபெற்று நின்ற மறல்-பகுதி, இ-ஆண்பால் விகுதி. இவ்விகுதி யோகினி எனப் பெண்பாலிலும், பாசி என ஒன்றன்பாலிலும் வரும்; பொருள் ஒருவாறும் மறுத்தலில்லாதென்பது. சூடினுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. அரசருடைய கலங்காமையை எடுத்துக் கூறுவோர் மற்ற இருவரையும் உடன் கூறினமையின் இது ஒப்புமை கூட்ட அணி. அரசரைக்குறித்ததென்பது அதிகாரத்தாற் பெற்றாம்.

சாவஞ்சாமை.

> புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறும்
> கழிமுடை நாற்றத்த வேனும் - விழலர்
> விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
> களிப்பர் சுமைபோ மெதற்கு.

(இ-ள்.) விழலர் - (பிறப்பின்) பயனில்லார், புழு நெளிந்து - (தம்முடம்புகள்) புழுக்கள் நெளியும்படி, புண் அழுகி-புண்கள் அழுகி, யோசனை - யோசனைதூரம், நாறும் - நாறுகின்ற, கழி - மிகுந்த, முடைநாற்றத்த எனும் - துர்க்கந்தத்தையுடையன ஆயினும், விளிவு-சாதலை, உன்னி - நினைத்து, வெய்து உயிர்ப்பர் - பெருமூச்சுவிடுவார்; மெய்ப்பயன் - உடம்பாலாகிய அறப்பயனை, கொண்டார்-பெற்ற பெரி

யவர், சுமை - (உடம்பாகிய) சுமையை, போடுதற்கு - போட்டுவிடு தற்கு, கூளியார் - வெறுக்கார், எ-று.

(வி-ரை.) விழல்-பசுமுதலிய விலங்குகளுக்கும் பயன்படாதபுல்; அது தொழிலாகுபெயர். விழலர் அப்புல்லை ஒத்த தன்மையுடையார்; அதாவது பயனற்றவரென்பது. நெளிந்து - நெளிய என்பதன் திரிபு. போக்கு-பந்துநாழிகை யளவைக்கொண்ட தூரம்; இது நெடுந்தூர மென்பதை யுணர்த்தற்குக் காட்டியதோ ரளவைப்பெயர்; முடை - புலால் நாற்றமாகிய சிறப்புப்பெயர்; நாற்றம்-பொதுப்பெயர்; ஆதலால் முடைநாற்றம் இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். நாற்றத்த - தொழிலடியாகப்பிறந்த பலவின்படர்க்கைக் குறிப்பு வினை முற்று; நாற்றம்-பகுதி, அத்து-சாரியை, அ-பலவின்படர்க்கை விகுதி, மகரமும், சாரியைமுதல் அகரமும், ஈற்றுகரமும் கெட்டது சந்தி. என்-எனின் எனின் என்பதன் மரூஉ. உம்மை-இழிவுசிறப்பு. வெய்து-வெம் என்னும் பண்படியாகப்பிறந்த குறிப்பு வினையெச்சம்; மைவிகுதி கெட்ட வெம்-பகுதி, த்-எழுத்துப்பேறு, உ-வினையெச்சவிகுதி,மகரம் யகரமாதல் சந்தி. கூளியார்-தும்பை சூடின் என்பதுபோன்ற உபசார வழக்கு. கொண்டார்-இறந்தகாலவினையாலணையும் பெயர். (சஉ)

அமைச்சரியல்பு.

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னொன்று
புகழினு மொக்கப் புகழ்ப - இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை.

(இ-ள்.) இறைமகன் - அரசன், ஒன்று இகழின்-ஒருபொருளை இகழ்வானாயின், இகழ்ந்து - (தாமுங்கூட) இகழ்ந்து, ஆங்கு-அவ் விகழ்ந்தகாலத்திலேயே, ஒன்று - அவ்வொருபொருளை, புகழினும் - புகழ்ந்தாலும், ஒக்க - அவனோடுகூட, புகழ்ப - (உலகர்) புகழ்வார்கள்; நீர்வழி - நீரோடுகிறவழியில், பட்ட-உள்ள, புணை - தெப்பம், மற்று

என் செய்யும் - (அவ்வழியே செல்லாமல்) வேறொரு செய்யவல்லது; (அதுபோல) மன்பதை - மக்கட்கூட்டம், இகல் - மாறுபாட்டை யுடைய, மன்னன் - அரசனது, சீர்வழி - குறிப்பின்வழியில், பட்டதே - பொருந்தியதே ஆம், எ-று.

(வி-ரை.) புகழினுமென்ற உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. புகழ்ப-பலர்பாற் படர்க்கை எதிர்கால வினைமுற்று; பகரவிகுதியே பாலிடங்காலத்தைக் காட்டியது. இகலாவது-முன் ஒன்றனை இகழ்ந்து, பின் அதனையே புகழும் மாறுபடுந்தன்மை. மன்பதை-சொல்லளவில் அஃறிணையாதலால் பட்டதென்றும் அத்திணைவினைகொண்டது. மற்று - பிறிதென்னும் பொருட்கண்வந்தது. என் - வினாப்பெயர். புனை - புனைக்கப்பட்டதென்னும் பொருளில் புனை என்னும் பகுதியோடு ஐ செயப்படுபொருண்மை விகுதி புணர்ந்து கெட்ட தொழிலடியாகப் பிறந்த பெயர்; முதனிலைத் தொழிலாகுபெயரெனினும் பொருந்தும். புணைத்தல்-ஒன்றோடொன்றை இணைத்தல். ஒக்க-செயவெனெச்சம்; ஒ-பகுதி, க்-சந்தி, கு-சாரியை, அ-வினையெச்சவிகுதி, உகரக்கேடு சந்தி. இது எடுத்துக்காட்டுவமை அணி. (௪௩)

அமைச்சரியல்பு.

செவிசுடச் சென்றாங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் போா - கவிழ்மதத்த
கைம்மா வயந்தே பாகுமற் றெத்திறத்தும்
அம்மா மனைவே யமைச்சு.

(இ-ள்.) அமைச்சு - மந்திரிகள், செவி - காதில், சுட - சுடும்படி, சென்று-அணுகி, இடித்து - உறுதிமொழிகளைச் சொல்லி,அறிவு மூட்டி - அறிவுறுத்தலால், வெகுளினும் - (அரசன்) கோபிப்பானாயினும், ஆங்கு - அப்போது, வாய்வெரீஇ-சொல்லுதற்கு அஞ்சி, போா-அறிவுறுத்தலை விடார்கள்; பாகு-(ஓட்டும்) பாகன், கவிழ் - பெருகுகின்ற, மதத்த - மதமுள்ள, கைம்மா-யானையினது, வயந்தே-வசப்

பட்டவரோ, எத்திறத்தும் - எவ்விதத்திலும், அம்மாண்பினவே-(மந்திரிகளும்) அத்தன்மையரோ ஆவர், எ-று.

(வி-ரை.) இச்செய்யுளின் கருத்தை "கதங்கொள் சீற்றத்தை யாற்றுவா னினியன கழறிப், பதங்கொள் பாகனு மந்திரி யொத்தனன் பன்னூல், விதங்க ளாலவன் மெல்லென மெல்லென விளம்பும், இதங்கள் கோள்இலா விறைவனை யொத்ததோர் வேழம்" இத்திருவிருத்தத்தால் நன்குணர்க அமைச்சு-சொல்லாலஃறிணையை ஒத்துப் பால்பகா அஃறிணைப் பெயராயிருத்தலால் பேரா என்னும் பலவின்படர்க்கை வினை கொண்டது. பாகு என்பதும் அத்திணைச்சொல்லா யிருத்தலால் அத்திணைவினை கொண்டது. இவ்விருபெயரும் பண்பாகுபெயர்கள். முன்னுள்ள உம்மை உயர்வுசிறப்பு. பின்னுள்ள உம்மை முற்று. ஏ இரண்டில் முன்னுள்ளது எதிர்மறை; பின்னுள்ளது தேற்றம். வாய்-கருவியாகுபெயர்; இடவாகுபெயரெனல் குற்றம். வெரீஇ-இறந்தகால வினையெச்சம்; பகுதி-வெரு, மற்ற உறுப்பு - ௩௩ - ஆம் செய்யுளில் ஓரீஇ என்பதனோடொக்கும். மற்று-அசை. மூட்டி - பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம்; மூள்-பகுதி, டு-பிறவினைபடுத்தும் விகுதி, ளகரம் டகரமானது சந்தி; இவ்வாறு முடிந்துநின்ற மூட்டு - பகுதி, உகரத்தின் திரிபாகிய இகரம் இறந்தகால வினையெச்சவிகுதி, உகரக் கேடு சந்தி; இது மூட்ட என்பதன் திரிபு. கைம்மா என்பதில் மாவென்பது கையென்னும் விசேடணத்தினால் யானையையுணர்த்தியது. இதுவும் எடுத்துக்காட்டுவமை. (௪௪)

அரசனியல்பு.

கைவரும் வேந்த னமக்கென்று காதலிக்க
செவ்வி தெரியா துரைபற்க - ஒவ்வொருகால்
எவ்வையனேனு மரியன் பெரிதம்மா
கவ்வரில னுள்வெயர்ப்பி னான்.

(இ-ள்.) வேந்தன் - அரசன், ஒவ்வொருகால் - ஒவ்வொருகாலத்தில், எவ்வையன் எனும் - (ஒன்றைச்சொல்லிக்கொள்ள) எளியனு

யிருந்தாலும், அம்மா - இது ஆச்சரியம், பெரிது - மிகுதியாக, (அதா
வது பலகாலங்களில்) அரியன் - அரியனாயிருப்பன்; கண் இலன்-
தாட்சிணியம் இல்லான்; உள் - உள்ளத்தில், வெயர்ப்பினன் - கோப
முடையான்; (ஆதலால்) நமக்கு - நமக்கு, கைவரும் என்று - பழகினவ
னென்று, காதலித்த-விரும்பினவற்றை, செவ்வி-சமயம், தெரியாது -
தெரிந்துகொள்ளாமல், உரையற்க - நீசொல்லற்க, எ-று.

(வி-ரை.) அரசன் நமக்குப் பழகினவனென்று ஒருவன் சமயந்
தெரியாமல் தனக்கு வேண்டியவைச் சொல்லிக்கொண்டால், அக்
காரியம் பயன்படாமற்போவதுமல்லாமல், தானும் தண்டனையடைவா
னென்பது கருத்து. நாம்: சுஉ-ஆம் செய்யுளில் கற்றனம் என்
பதுபோல வந்த தனித்தன்மைப் பன்மைப்பெயர். கைவரும் - ஒரு
சொல்லின் தன்மையதாகிய செய்யுமென்முற்று; கைவா - பகுதி,
உம் - நிகழ்காலவினைமுற்றுப்பொருள் விகுதி, கு - விரித்தல்விகாரம்,
உகரக்கேடுசந்தி; இது பெயரெச்சம் வினைமுற்றானது. காதலித்த-காத
லென்னும் பெயரடியாகப்பிறந்த இறந்தகாலவினையாலணையும் பெயர்;
பகுதி காதலி. செவ்வி-பண்படியாகப்பிறந்தபெயர்; செம்-பகுதி, இ-
ஒன்றன்படர்க்கை விகுதி, மகரம் "முன்னின்ற மெய்திரிதல்" என்ப
தனால் திரிந்த, தனிக்குறில்முன் ஒற்றாகிய வகரமும், இரட்டிய வகர
மும் சந்தி; செம்மை யுடையதென்பது பொருள்; செம்மை-பக்குவம்.
உரையற்க - எதிர்மறைவியங்கோள்வினை; உரை - பகுதி, அல்-எதிர்
மறைவிகுதி, யகரம்-சந்தி, அனைத்து மொருபகுதி, க - வியங்கோள்
வினைவிகுதி, லகரம் திரிந்த றகரம் சந்தி. ஒவ்வொருகால் என்பதில்
ஒருகால் பண்புத்தொகை நிலைத்தொடராயினும், முன்னின்ற ஒவ்
வொன்றென்பது அல்வழிப்புணர்ச்சிப் பதினான்கின் புறத்ததாகிய ஒரு
வகைப்புணர்ச்சி. பெரிது - குறிப்புவினையெச்சம்; அது காலத்தின்
மேல் நின்றது. அம்மா-வியப்புப்பொருளதாகிய இடைச்சொல். எண்
மை - பண்புப்பெயர் ; எள் - பகுதி, மை - பகுதிப்பொருள் விகுதி,
ளகரம் ணகரமாதல் சந்தி; இகரச்சாரியை பெறின் எளிமை எனவரும்.

கன் - நன்றொடு பழகினவரைக் கண்டபோது ஒருவருக்கு உண்டாம் நாட்டினியத்தக்கானமையால் காரணவாகுபெயர். வெயர்ப்பிறன் - காரணத்தைக் காரியமாக உபசரித்த உபசாரவழக்கு. (௬௫)

அரசனியல்பு.

பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார் — வெகுளின்மன்
காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரும்
ஆர்வலரு மில்லை யவர்க்கு.

(இ-ள்.) பழமை-பழையசிநேகத்தை, கடைப்பிடியார் - மறவாமலிரார்; கேண்மையும் - உறவினராந்தன்மையும், பாரார் - மதியார்; கிழமை பிறிது ஒன்றும்-வேறொரு பாத்தியதையையும், கொள்ளார் - நினையார்; வெகுளின்மன் - மிகுதியுங் கோபித்தால், இறைமாண்டார்க்கு - அரசில் மாட்சிமைப்பட்டவர்க்கு, காதன்மை - (ஒருவர்மேல்) அன்புடைமை, உண்டே - உண்டோ, அவர்க்கு - அவ்வரசர்க்கு, ஏதிலரும் - அயலாரும், ஆர்வலரும்-சிநேகரும், இல்லை - இல்லை, எ-று.

(வி-ரை.) மேற்செய்யுளில் 'உள் வெயர்ப்பிறன்' என்றார்; அவ்வுள்வெயர்ப்பின் காரியத்தை இச்செய்யுளிற் கூறினார். கடைப்பிடியார்-பல்லோர் படர்க்கை எதிர்மறை வினைமுற்று; இது ஒருசொல்லின் தன்மையது; கடைப்பிடி-பகுதி. கேண்மை-பண்புப்பெயர்; கேள்(உறவு)-பகுதி; மை-பகுதிப்பொருள்விகுதி, ளகாந்திரிந்த ணகரம் சந்தி. கேண்மையுமென்ற உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை; இது பிறிதொன்று மென்னும் இறந்ததுதழீஇய எச்சஉம்மையை நோக்கின், எதிரதுதழீஇய எச்சவும்மையாம். மன் - மிகுதிப் பொருளதாகிய இடைச்சொல். காதன்மை:ஒன்றின்மேல் மனமெழுந்துதாக்கும் விருப்பமென்னும் பொருளமைந்த காதல்-பகுதி, மை-பகுதிப்பொருள்விகுதி, லகாந்திரிந்தனகரம் சந்தி. ஏ-எதிர்மறை. மாண்டார் - உரியடியாகப் பிறந்த இறந்தகால வினையாலணையும்பெயர்; மாண்-பகுதி, ட்-இறந்தகால இடைநிலை, ஆர்-பல்லோர் படர்க்கை விகுதி; இது இறந்தாரென்

நலம் பொருள் தருவதானும் மான் பகுதி என்க. ஏதிலனென்றும் பதத்திற்குப் பகுபத உறுப்பு அ-ஆம் செய்யுளுரையிற் காண்க. ஆர்வலர்-பண்படியாகப் பிறந்தபெயர்; ஆர்வம்-பகுதி, அம்-கடைக்குறைவிகாரம், அல்-சாரியை, அர்-பல்லோர் படர்க்கை விகுதி. (௬௧)

முயற்சிவிடாமை.

மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலங் கண்டேமென் றெள்ளற்க - பன்னெடுநாள்
காத்தவை யெல்லாங் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும்.

(இ-ள்.) யாம் - நாம், மன்னர் - அரசருடைய, புறங்கடை-தலைவாயிலே, காத்து-காத்திருந்து, வறிதே - (அது) பயனிலதே, எந்நலம் - என்ன நன்மையை, கண்டேம் என்று-கண்டோமென்று, எள்ளற்க-இகழாதிருக்கக்கடவாய்; பல் நெடுநாள் - பலநாள், காத்தவை எல்லாம்-காத்திருந்தவை எல்லாம், கடைமுறைபோய் - முடிவிற்சென்று, கைகொடுத்து - உதவி, வேத்து அவையில் - இராசசபையில், மிக்கு-பெருமையை, செய்யும்-செய்துவிடும், எ - று.

(வி-ரை.) வறிது என்னும் பண்படியாகப்பிறந்த குறிப்புவினைமுற்றுக்கு எழுவாய் காத்தற்றொழிலாதலால் அதைச்சுட்டிய அது என்னுஞ் சுட்டுப்பெயர் வருவிக்கப்பட்டது. ஏ-தேற்றம். வறிது என்பதைக் குறிப்புவினையெச்சமாகக்கொண்டு, வறிதேகாத்து- யாதோருதியமும் பெறாமலே காத்து என உரைப்பினும் பொருந்தும். பன்னெடு - ஒருபொருட்பன்மொழி. நாள்களை நோக்கிக் காத்தற்றொழிலும் காத்தவை எனப் பலவாயிற்று. கைகொடுத்து - ஒருசொல்லின் தன்மைப்பட்டு நின்ற இறந்தகாலவினையெச்சம்; பகுதி கைகொடு, த்-சந்தி, த்-இறந்தகால இடைநிலை, உ - வினையெச்சவிகுதி. மிக்கென்பதற் கிலக்கணம் ௩௧-ஆம் செய்யுளுரையிலும், வேத்தவையென்பதற் கிலக்கணம் ௨௧-ஆம் செய்யுளுரையிலும் காண்க. (௬௨)

முயற்சிவிடாமை.

உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறு முயல்ப - இறுமுயிர்க்கும்
ஆயுண் மருந்தொழுக்க றீதன்றா லல்லனபோல்
ஆவனவு முண்டு சில.

(இ-ள்.) இறும் உயிர்க்கும் - சாகும் நிலையிலிருக்கும் உயிருக்கும், ஆயுள் மருந்து - பிழைக்கும் மருந்தை, ஒழுக்கல்-வாயில்விடுதல், தீது அன்று - நலந்தருவதாகும்; (அதுபோல) சில - சிலகருமங்கள், அல்லனபோல் - முடியாதனபோலக் காணப்பட்டு, ஆவனவும் உண்டு - (பின்) முடிவனவுமுண்டு; (ஆதலால்) உறுதி - அடைதற்குரிய நன்மையை, பயப்ப - தாந்தக்கமுயற்சிகள், கடைபோகா எனும் - முடியா ஆயினும், இறுவரைகாறும் - முடியும் எல்லைவரையும், முயல்ப - (அறிவுடையோர்) முயற்சிசெய்வர், எ-று.

(வி-ரை.) உறுதி: அடையப்படுவதென்னும் பொருளில் உறு - பகுதி, த்-எழுத்துப்பேறு, இ-செயப்படுபொருண்மை விகுதி; உறு - பகுதி, தி - புடைபெயர்ச்சி விகுதி, இவ்விரண்டுறுப்பால் முடிந்த தொழிற்பெயரெனக்கொண்டு, தொழிலாகு பெயரெனினும் பொருந்தும். பயப்ப - பலவின்படர்க்கை எதிர்கால வினையாலணையும் பெயர். கடைபோகா - ஒருசொல்லின் தன்மையதாகிய பலவின்படர்க்கை எதிர்மறை வினைமுற்று. ஆயுண்மருந்து-இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனு முடன்றொக்க தொகைநிலைத்தொடர்; விரிந்தால் ஆயுளைத்தருமருந்து என விரியும். ஒழுக்கல் - பிறவினைத் தொழிற்பெயர்; ஒழுகு என்னுந் தன்வினைப் பகுதி, இடையே ககரவொற்றிரட்டிய ஒழுக்கு-பகுதி, அல்-புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு - சந்தி. போலென்னும் இடைச்சொலடி இறந்தகாலவினையெச்சப் பொருள்பட்டு நின்றது. உம்மை நான்கில் இறுவரைகாறுமென்ற உம்மை முற்றும்மை; மற்ற மூன்றும் இழிவு சிறப்பும்மை. (சஅ)

ஊழ்வினைவேறல்.

முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா வூழ்த்திறத்த வென்றார் - மயலாயும்
ஊற்ற மிறுவிளக்க மூழுண்மை காண்டுமென்
றேற்றா ரெறிகான் முகத்து.

(இ - ள்.) முயலாது-அறிவுடையார் முயற்சி செய்யாமல், வைத்து - (கருமங்களை) வைத்து, முயற்று இன்மையாலே - முயற்சி இல்லாமையாலே, ஊழ்த்திறத்த - ஊழின் வகையில் பட்டகருமங்கள், உயல் ஆகா - தப்புதலாகா, என்றார் - என்று நினையார்; ஊழ் - ஊழ்வினை, உண்மை - உண்டாயிருத்தலை, காண்டும் என்று - கண்டிருக்கிறோமென்று, மயல் ஆயும் - மயங்கியும், ஊற்றம் - மறைவு, இறுவிளக்கம் - இல்லாத தீபத்தை, எறி - வீசுகின்ற, கால்முகத்து - காற்றெதிரில், ஏற்றார் - (உலகர்) ஏற்றார்கள், எ - று.

(வி - ரை.) ஊழின் வகை ஆகூழ், போகூழென்பன. முயலாது- எதிர்மறை வினையெச்சம்; முயல்-பகுதி, ஆ-மறை விகுதி, அனைத்து மொருபகுதி, த்-எழுத்துப்பேறு, உ - வினையெச்ச விகுதி. முயற்று - தொழிற்பெயர்; முயல்-பகுதி, து-புடைபெயர்ச்சி விகுதி, லகரதகரங்கள் றகரமானது சந்தி. இத்துவ்விகுதி முயன்றது, முயல்கின்றது, முயல்வது எனக் கால இடைநிலை பெற்ற தொழிற்பெயர்க்கும், முயலாதது என எதிர்மறைத் தொழிற்பெயர்க்கும் விகுதியாய் வருதலே பெரும்பான்மை. முயற்றின்மை, ஊழுண்மை என்பனவற்றை ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராக்கினும், அவ்வாறுவரும் வினைமுதற்பொருளில்வந்ததேயாம். உயல்-தொழிற்பெயர்; உய்-பகுதி, அல்-புடைபெயர்ச்சிவிகுதிபெற்ற இதனோடு ஆ-என்னும் வினையடி புணர்ந்து ஒருசொல்லின் தன்மைப்பட்டு நின்ற உயலா-பகுதி, கு-சாரியை, ஆ-பலவின்படர்க்கைஎதிர்மறை விகுதி, உகரக்கெடுசந்தி. திறத்த-பண்படியாகப்பிறந்த பெயராயினும், பகுதியாகிய திறம் ஊழென்பதனோடு

பண்புத் தற்கிழமைப் பொருளதாகிய ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகப் புணர்ந்தது. ஊற்றம் - தொழிற்பெயராகப் பிறந்த பெயர்; ஊன்று-பகுதி, அம்-கருவிப்பொருண்மைவிகுதி, பகுதி குற்றியலுகரமாதலால் னகரம் றகரமானதும், உகரக்கேடும் சந்தி; அம் - புடைபெயர்ச்சி விகுதி எனக்கொண்டு தொழிலாகுபெயரெனினும் ஒக்கும். இது இலக்கணையால் இங்கு மறைவுக்காயிற்று. விளக்கமென்பதற்கும் பதபத இலக்கணம் மேலதுபோலக் கூறுக; கூறுகையில் அம் விகுதி வினைமுதற்பொருண்மை விகுதி என்க. இவ்வாறன்றிக் காரியவாகுபெயரெனினும் ஒக்கும். ஊற்றமிருவிளக்கம் என்பது மூன்று சொல்லாய், முன்னது எழுவாய்ச் சந்தியும் பின்னது வினைத்தொகைநிலைச் சந்தியுமாய் நின்றது. இது பால்வழுவமைதி, அணி மறுபொருளுவமை. (௪௧)

ஊழ்வினை வேறல்.

உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே - யுலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி.

(இ-ள்.) உலையாத - கெடாத, முயற்சி - முயற்சியானது, களைகண் ஆக - ஆதாரமாக, ஊழின் வலி-ஊழினது வன்மையை, சிந்தும் - கெடுக்கின்ற, வன்மையும் - பலமும், உண்டே - உளதே; (அதற்கு) கரி - சாட்சி, உலகு - உலகத்தார், அறிய - அறியும்படி, பால் முளை - ஊழின் முளையை, தின்று - கெடுத்து, மறலி - நமனுடைய, உயிர் - உயிரை, குடித்த - வாங்கிய, கான் முளையே - பிள்ளையாகிய மார்க்கண்டேயரே, எ-று.

(வி-ரை.) உலையாத, களைகணாக இரண்டும் ஈறு தொகுத்தலாய் நின்றன. தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய சிந்தும் என்னும் பெயரெச்சம் இங்குப் பிறவினையாய் நின்றது. தன்வினையில்

பால் பிரியாது எனவரும். எ இரண்டும் தேற்றம். இறைவன் ஒரு பிறப்பில் செய்த ஒருவன் வினையை ஆயிரங் கூறுசெய்து ஒரு கூற்றில் ஒருநாளிக்கூறு கொண்ட வினையை மறுபிறப்பில் அநுபவிக்கவிடுகின்றானாதலால் ஊழைப் 'பால்' என்றார். பால்-பண்பாகுபெயர். ஊழொன்றறு ஆகூழ் அன்று போகூழ். உம்மை - உயர்வுசிறப்பு. கான்முளை என்பதைக் கால்முளை எனப் பிரிக்க; ஒருவனுடைய மரபு பெருகுதற்கு அவன் புத்திரன் வழிபோதுதலால் கால் உவமையாகு பெயர்; முளை-தன் வயிற்றில் முளைத்தலுடையானுக்கு ஆதலால் முதனிலைத் தொழிலாகுபெயர்; இது இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடர். கான்முளை என்பதை ஒருபெயராகக் கொள்ளின் ஏழாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்; பிதாவின் வழியில் முளைத்தலுடையா னென்பது பொருள். ஊழின்முளை இன்றலும், நமனுயிர் குடித்தலும் மார்க்கண்டேயருக்கு இல்லாதிருந்தும், ஊழின் முளை கெடுத்தலும், நமனுயிர் வாங்கலும் அவருக்குண்டாயிருத்தலாலும் இது விட்டுவிடாதவிலக்கணி. போலும் - அசை. நமனை யுயிர்குடித்த சரித்திரம்: மிருகண்ட முனிவர் புத்திரனில்லாமையால் சிவமூர்த்தியை நோக்கித் தவம் செய்ய, அம்மூர்த்தி எதிரே தோன்றி நினக்கு ஒரு புத்திரன் உண்டாவான்; அவன் பதினாறு வயதுமட்டும் உயிர்பிழைத்திருப்பானென்று வரந்தந்து போதலும், அப்படியே மார்க்கண்டேயர் பிறந்து சிவநேசம் முதிர்ந்து சிவார்ச்சனை செய்துவருகையில் பதினாறு வயது எல்லையானபோது சிவார்ச்சனை செய்துகொண்டிருந்த மார்க்கண்டேயர் மேல் நமன் பாசம் வீசுதலும் சிவமூர்த்திக்குக் கோபம் பிறந்து நமனை எட்டியுதைத்தனரென்பது. இது ஏதுவணி. (௰)

கருமங்கண்ணுறுதல்.

கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூல மறிந்து விளைவறிந்து - மேலுந்தாம்

சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும்.

(இ - ள்.) தாம்-(அரசர்கள்)தாம், காலம்-(ஒருகருமத்தைச் செய்தற்குரிய) காலத்தை, அறிந்து - தெரிந்து, இடம் - (தகுந்த) இடத்தை, அறிந்து - தெரிந்து, செய்வினையின் - செய்தற்குரிய கருமத்தினது, மூலம் அறிந்து - காரணத்தைத் தெரிந்து, விளைவு அறிந்து - (அக்கருமத்தினா லுண்டாகும்) பயனை அறிந்து, மேலும் - இவற்றை அறிதல் அல்லாமலும், சூழ்வன - ஆராயப்படுவனவற்றை, சூழ்ந்து - (அறிவுடையாரோடு) ஆராய்ந்து, துணைமை - துணையானவர்களது, வலி தெரிந்து - பலத்தை அறிந்து, (பின்பு) ஆள்வினை-முயற்சியால், ஆளப்படும் - (அக்கருமம்) செய்யப்படும், எ-று.

(வி - ரை.) ஆள்வினை - இடைவிடாத உடலின்முயற்சி; இது வினைத்தொகைநிலைத்தொடர். விளைவு - தொழிலாகுபெயர். உம்மை - இறந்ததுதழீஇய எச்சவும்மை. சூழ்வன - செயப்பாட்டு வினையாகிய எதிர்கால வினையாலணையும் பெயர்; சூழ்-பகுதி, அ-சாரியை, ப் - சந்தி, படு - செயப்பாட்டு வினைப்பொருண்மை விகுதி, அனைத்து மொரு பகுதி, வ்-எதிர்கால இடைநிலை, அன்-சாரியை, அ - பலவின்படர்க்கை விகுதி; இப்படி முடிந்துநின்ற பகுபதம் படு விகுதி தொகுத்தலாய் நின்றது. துணைமை-குணியைக் குணமாகக் கூறுவதோர் மரபுவழுவமைதி. ஆளப்படும்-செயப்பாட்டுச் செய்யுமென்முற்று; இருசொல்லாகக் கொள்ளின் ஆள்வினை என்பதைச் செயப்படுபொருளாகவும், படும் என்பதைத் தேற்றப்பொருள் தரும் தொழிற்பெயராகவுங் கொ

க்க; அப்படி கொள்ளும்போது ஆள என்பது தொழிற்பெயர்ப் பொருளதாகநிற்கும்; பொருள்-முயற்சியைச்செய்தலே தகுதியாமென்பது.

குறிப்பு:—திருக்குறளாசிரியர் காலமறிதலும், இடமறிதலும் இன்றியமையாதன வென்பதைப் படிப்பார் மனத்திற் செவ்வனே பதியும்படி உவமைமுகத்தான் நன்கு விளக்கினர். அதனை அடியில் வரும் இரண்டு குறள்களாலுணர்க.

"பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது."

இது காலமறிதல்.

"நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற."

இது இடமறிதல்.

துணைவலியறிதல் இருவகைப்படும். தனக்குத் துணையாவார் வலியறிதலும், மாற்றார்க்குத் துணையாவார் வலியறிதலுமென. எது ஆளப்படும் எனின் கருமம் ஆளப்படும் என்க.

செயப்படுபொருளாகிய கருமம் என்பது ஈண்டு எழுவாயாக நின்றது. இது செயப்பாட்டு வினைவாக்கியம்.

கருமங்கண்ணுதல்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி

அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

(இ-ள்.) மெய்வருத்தம் - உடம்பின் வருத்தத்தை, பாரார் - கவனியார்; பசி - பசியை, நோக்கார் - நினையார்; கண் துஞ்சார் - கண்ணுறங்கார்; எவர் எவர் தீமையும் - எவர் எவர் செய்யும் பொல்லாங்கையும், மேற்கொள்ளார் - பாராட்டார்; செவ்வி - தக்ககாலத்தினை, அருமையும் - அருமையையும், பாரார் - கவனியார்; அவமதிப்பும் - அவமானத்தையும், கொள்ளார் - (மனத்தில்) கொள்ளார்; கருமமே - (தாம் மேற்கொண்ட) காரியத்திலேயே, கண் ஆயினார் - எண்ணமுள்ளவர், எ-று.

(வி-ரை.) முன் கண்ணென வேண்டாது கூறியது துஞ்சாமையாகிய சிறப்புடைய தென்பதை உணர்த்தற்கு; கண்டுஞ்சார் என்பது மையொடிந்தான் என்பதுபோன்ற வினைவழுவமைதியாகிய எழுவாய்த் தொகாநிலைத்தொடர், பின்மொழியிற் பொருள் சிறந்து நின்றது. எவர் எவர் எவ்வெவர் என விகாரப்பட்டுப் புணர்ந்தது - நன் - உயி - சுக - கூ - "ஒன்பதொழித்த எண் ஒன்பதும் இரட்டின், முன்னதின் முன் அல ஓட உயிர்வரின், வவ்வும் மெய்வரின் வந்ததும் மிகல்நெறி" என்பதில் நெறி என்றதனால் அமைக்க. எவர் எவர் என்பதற்கு நட்பினர் தீமைசெய்யா ராதலின் அவரொழிந்தவரைக்கொள்க. பொருள் : எவர் - மிக்கபகைவர், எவர் - முற்றும் அயலவர், தீமையும் - ஆகிய இவ்விருவரது தீமைகளையும் என்பது. தீமையும் என்ற உம்மை முற்றுப்பொருளோடு ஒருபுடை யிறந்ததுதழீஇய எச்சவும்மை; தன்கீழ் நின்றதை நோக்கும்போது ஒருபுடை எதிரதுதழீஇயதும், அவமதிப்பும் என்ற உம்மை ஒருபுடை இறந்ததுதழீஇயதும், இடைநின்ற அருமையும் என்ற உம்மை அவ்விருபொருளதுமாக நின்றன. கண்ணல் - குறித்திடல். கண்-முதனிலைத் தொழிற்பெயர். ஏ-பிரிநிலை. செவ்வி - பண்படியாகப் பிறந்த ஒன்றன் படர்க்கைப்பெயர்; செம்மை - பகுதி, ஒன்றன்படர்க்கை இகரவிகுதிப்புணர்ச்சியில் மையீறு கெட்டதும்,

மகரம் வகரமானதும், வகரத்தோற்றமுஞ் சந்தி [நன்-எழு-௩௪ - ௫] அவதானிக்குந் திறமில்லாத ஒருவர் செ-பகுதியெனக் குழறுவர். இதற்கு விதி தொல்காப்பியத்திலுண்டென்பதற்கு அஞ்சார். தொல்-கு-எ-எனவரு முயிர் மெய்யீறுகாணு. மற்ற நூலும் இது. (௧௬)

அநப்பகையஞ்சல்.

சிறிய பகையெனினு மோம்புதற் றேற்றார்
பெரியர் பிழைபா டுடையர் - நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது.

(ரு-ள்.) பகை - பகைகள், சிறிய எனினும் - சிறியன ஆயினும், ஓம்புதல் - (அவற்றைக்) காத்துக்கொள்ளுதலை, தேற்றார் - அறியாதவர், பிழைபாடு - குற்றம் உண்டாகுதலை, பெரிதும் உடையர் - மிகுதியும் (அப்பகைகளால்) உடையராவர்; நிறை - நிறைந்த, கயம் தாழ் - மிக ஆழமாகிய, நீர் மடுவில் - நீரையுடைய மடுவில், தவளை குதிப்பினும் - தவளை குதித்தாலும், யானை நிழல் - யானையினது நிழலை, காண்பது அரிது - (அம்மடுவில்) காணுதல் அரிதாகும், எ-று.

(வி-ரை.) பகை - சொல்லளவில் பால்பகா அஃறிணைப் பெயரா யிருத்தலால் பலவின்பாலாய்ச் சிறிய என்னும் பலவின்படர்க்கைக் குறிப்புவினை கொண்டது. பகைகளை ஓம்புதலாவது முற்றக் களைதல். தேற்றார்: தன்வினை பிறவினைகளுக்குப் பொது ஆயினும் இங்குத் தன்வினையாய் நின்றது. தேறென்னும் பகுதி தேற்றென விகாரப்பட்டது; தேற்று - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்து மொருபகுதி, ஆர் - பல்லோர் படர்க்கை விகுதி, விகுதி ஆகாரக்கேடு முதற்குறை; இது வினையாலணையும் பெயர். பெரிது - குறிப்பு வினையெச்சம். உம்மைகள் மூன்றில் நடுநின்றது உயர்வு சிறப்போடு முற்றுப்பொருளது, மற்ற இரண்டும் இழிவுசிறப்பு. கயத்தாழ் - ஒருபொருட் பன்மொழி. காண்பது என்பதில் ஈறுதொகுத்தல்.

காண்பெனத் தொல்லாசிரியர் நூலில் வழங்கலில்லாமையால் தொகுத்தலென்றே கொள்க. இது எடுத்துக்காட்டுவமையணி. (௬௯)

அகப்பகையஞ்சல்.

புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சார்
அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப - அனைத்துலகும்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை.

(இ-ள்.) அனைத்து உலகும் - எல்லா உலகங்களையும், சொல் ஒன்றின் - சொல்லொன்றினால், யாப்பார் - தமது வசப்படுத்தத்தக்க முனிவர், பல்காலும் - பலதரமும், காமப்பகை - காமமாகிய உட்பகையை, பரிந்து - வருந்தி, ஓம்பி காப்ப - மிகுதியுங் காப்பார்கள்; (அதுபோல) புறப்பகை - வெளிப்பகைவர், கோடியின் - கோடி என்னுந் தொகையினும், மிக்கு - அதிகமாய், உறினும் - பொருந்து வாராயினும், அஞ்சார் - (அறிவுடையார்) பயப்படார்; அகப்பகை - உட்பகைவனாகிய, ஒன்று - ஒருவனை, அஞ்சி - பயந்து, காப்ப - பரிகரிப்பார், எ-று.

(வி-ரை.) புறப்பகை - பகைமையைக்காட்டிப் புறத்திலுள்ள பகைவர். உட்பகை - பகைமையைப் புறத்தில் காட்டாமல் உள்ளாயிருக்கும் பகைவர். அவர் ஞாதியர், மந்திரிகள் முதலானோர். கோடி - மிகப் பலரென்பதற்குக் காட்டியதோரெண். மிக்கு - இறந்தகால வினையெச்சம்; மிகு - பகுதி, உ - வினையெச்சவிகுதி, முற்றியலுகரமாதலால் பகுதி ஒற்றிரட்டல் விரித்தல், உகரக்கேடு சந்தி. அனைத்து - இடைச்சொலடியாகப் பிறந்த பெயர்; அனை-பகுதி, த்-சந்தி, து-பகுதிப்பொருள் விகுதி. தன்னோடு புணர்ந்த உலகென்னும் பலவின்பாற்பெயரோடு இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைத்தொடராய் நின்றது. உலகும், பல்காலுமென்ற உம்மைகள் முற்றும்மைகள். உறினுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. ஓம்பிக்காப்ப—ஒருபொருட்பன்மொழி [illegible]

துறந்தவராயினும், உயிர்க்குணமாகிய காமம் இடையிடையே தோன்றுமாதலால், அதுநோக்கிப் 'பல்காலும்' என்றார். பல்கால் - பண்புத்தொகை; விரிந்தால் பன்மையாகிய காலென விரியும். நிலைமொழி பல என்பர் நன்னூலார். இது எடுத்துக்காட்டுவமை. (௬௫)

நடுவுநிலைமையின்மை.

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறாதல் வேண்டுங்-கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.

(ப-ரை.) புண் - புண்ணை, கருவி இட்டு - (நோயாளர்) கூரிய ஸ்திரம், ஆற்றுவார் - ஆறச்செய்வார்கள், பொதிந்து - மறைத்து, மூடார் - மூடிவையார்கள்; (அதுபோலப்) புறம் நட்டு - புறத்திலே சிநேகித்து, அகம் வேர்ப்பார் - உள்ளே கோபங்கொண்டிருப்பவருடைய, நச்சுப்பகைமை - விஷத்தை ஒத்த பகைத்தன்மையை, வெளியிட்டு - வெளிப்படுத்தி, வேறு ஆதல் வேண்டும் - வேறுபடுதலே தகுதி; கழி பெரு கண்ணோட்டம் - மிகுந்த தாட்சிணியம், செய்யேல் - செய்யாதே, எ-று.

(வி-ரை.) புண்ணை அறுத்தாற்றாமல் மூடிவைத்தவர்களை அப்புண் கொல்வதுபோல உட்பகையுடையாரை அவர் பகைக்குணத்தை வெளிப்படுத்தி நீக்காவிடில் தம் உயிர்க்கு இறுதி செய்வரென்பது கருத்து. நட்டு - இறந்தகாலவினையெச்சம்; நள் - பகுதி, ட் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்சவிகுதி, ளகரம் டகரமானது சந்தி. வேர்ப்பார் என்பது காரணத்தைக் காரியமாகவுபசரித்த உபசாரவழக்கு; இது எதிர்காலவினைப்பெயர். வேண்டும் - தேற்றப்பொருள்தரும் தொழிற்பெயர். கொந்து கொத்து; நந்து நத்து என வழங்குதல் போல நஞ்சு நச்சென வந்ததன்றிச் செய்யுள் அடிதொடை முதலிய நோக்கி வந்த வலித்தலன்று. தாட்சிணியம் - ஒருவனுக்குப் பழகினவர் மேல் கண்சென்றபோது உண்டாவதாதலால் அதற்குக் கண்ணோட்ட-

மெனப் பெயராயிற்று. இது கண்ணினதோட்டத்தி லுளதாவதென ஆறாம்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயராமென்க. செய்யேல்-ஏவலொருமை எதிர்மறைவினை; ஏவலொருமை எதிர்மறையைக் காட்டுவது ஏல் விகுதி. வைத்த மூடார் என்பதில் நிலைமொழி வருமொழிகளைப் பின்முன்னாக நிறுத்தி விகுதிகளைத் பிரித்துக் கூட்டிப் பொருளுரைக்க. கழிபெரு - ஒரு பொருட்பன்மொழி. இது எடுத்துக்காட்டுவமை. (௬௬)

நடுவுநிலைமையின்மை.

நட்பிடைக் குய்யம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத் - திட்பமாம்
நாளுலந்த தன்றே நடுவ னடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து.

(இ-ள்.) நட்பிடை - சிநேகத்தில், குய்யம் வைத்து - வஞ்சித்தலை வைத்து, எய்யாமை - அறிவின்மையாகிய, வினை - பொல்லாங்கை, சூழ்ந்து - ஆராய்ந்துகொண்டு, வட்கார்-பகைவருடைய, திறத்தர் ஆய்-வகையையுடையாராகி, நின்றார்க்கு - இருந்தவர்க்கு, திட்பம் ஆம் - (வாழ்வதற்குப்) பலமாயுள்ள, நாள்-ஆயுள், உலந்தது அன்று - முடிந்துவிட்டது அன்று, நடுவன் - யமன், நடு இன்மை-(இவர்கள் இறப்பதற்குக் காரணமாகிய) நடுநிலைமை யில்லாமையை, மறந்து-மறந்துவிட்டு, வாளா - சும்மா, கிடப்பன் - இருப்பான்போலும், எ-று.

(வி-ரை.) எனவே வஞ்சகமாகச் சிநேகித்துத் தீங்குசெய்யக் கருதுவோர்க்கு ஆயுள் முடிந்திலதாயினும், இடையில் அவர் முடிவாரென்பது குறிப்பெச்சம். சிநேகத்தில் வஞ்சனை வைத்தென்றது வஞ்சமாகச் சிநேகித்து என்றபடி. எய்யாமை - அறிவின்மைப் பொருளதாகிய பண்புப்பெயர்; எதிர்மறைத் தொழிற்பெயரன்று; ஆதலால் எய்யா வினை என்பதைப் பண்புத்தொகைநிலைத்தொடரென்க. சூழ்ந்து-சூழாநின்றென்னும் நிகழ்கால வினையெச்சத்தின் திரிபு. வட்கார் - எதிர்

மறை வினையாலணையும் பெயர்; வட்கு-பகுதி, ஆ-எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்து மொருபகுதி, ஆர் - பல்லோர்படர்க்கை விகுதி; கூறாரென்பது பொருள். நிட்பம்-பண்புப்பெயர்; நிண்-பகுதி, பம்-பகுதிப்பொருள்விகுதி, ணகரம் டகரமானது சந்தி. சொல்லியல்பு-உணரமாட்டாத ஒருவர் அம் விகுதியென்பர். இவ்விகுதி பெற்றுவருஞ் சொற்கள் கலம், இலம், வளம், திண்ணம் எனச் சிலவும்; நிட்பம், தட்பம், நுட்பம், ஒட்பம், பருப்பம், செப்பம், அருப்பம், வெப்பம் எனவருவனவை பலவும் ஆதலால் பம்விகுதியென்றேகொள்க. நாள்-சாதியொருமையாதலால் உலந்ததென்னும் ஒருமை வினைகொண்டது. வாளா, கேளா ஒருபொருட்கிளவி; இவை இடைச்சொல், உரிச்சொலென்பாருமுளர். சிலநாளுக்குந் தீங்குசெய்யக்கருதின் ஆயுள் முடியுமுன்னமே விரைந்தழிவா ரென்பதனை, நடுநிலைமையுடைய யமன் இடையே புகுந்து உயிர்கொண்டதாகிய நடுநிலைமையில்லாமையை மறந்துசெய்தான் போலு மென்பதாகக் கூறியதனால் இது தற்குறிப்பேற்றவணி. (௫௭)

மொழியியல்பு.

மனத்த கறுப்பெனி னல்ல செயினும்
அனைத்தெனவையுந் தீயவே யாகும் - எனைத்துணையும்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர்.

(இ-ள்.) கறுப்பு-(ஒருவன்மேல்) மிக்ககோபம், மனத்த எனின்-தம்மனத்திலுள்ளன ஆனால், நல்ல - நல்ல கருமங்களை, செயினும் - (அவன்) செய்தாலும், அனைத்து எவையும்-அவையெல்லாம், தீயவே-பொல்லாத காரியங்களாகவே, ஆகும் - தோன்றும்; மாசு இல் - (ஒருவன்மேல்) களங்கமில்லாத, மனத்தினவர் - மனமுடையார், எனைத்துணையும்-(அவன்) எவ்வளவுமிகுதியும், தீயவே - பொல்லாத காரியங்களையே, செய்யினும் - செய்தாலும், நல்ல ஆக - (அவற்றை) நற்காரியங்களாக, காண்ப - நினைப்பார்கள், எ-று.

(வி-ரை.) கறுப்பு சனத்த என்றது உயர்வுபற்றி ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று. உயர்வாவது மிகுதி; நல்ல, தீய - பண்படியாகப் பிறந்த பலவின்படர்க்கைப்பெயர். அனைத்தையும்-இருபெயரொட்டும் பண்புத்தொகை நிலைத்தொடர். கறுப்பு - கோபத்தின் காரியமாதலால் காரணத்தைக் காரியமாக வுபசரித்த உபசாரம். உம்மை நான்கில் முதலிலுள்ளது உயர்வுசிறப்பு. ஈற்றிலுள்ளது இழிவுசிறப்பு. இடையிலுள்ளன முற்று. எனை-எத்தனை என்பதன் மரூஉ. முதலிலுள்ள ஏ-பிரிநிலை; ஈற்றிலுள்ளது அசை. மாசு இல் - எழுவாய்த் தொகாநிலைத்தொடர். இல் மனத்தினவர்-பண்புத்தொகைநிலைத்தொடர். மாசின் மனம்-பால்வழு வமைதி. மனத்தினவர் - வினையடியாகப்பிறந்த பெயர்; மனம் - பகுதி, அத்து, இன், அ-சாரியை. மகரமும் சாரியைமுதலகரமும், ஈற்றுகரமுங் கெட்டதும், வகரத்தோற்றமுஞ் சந்தி. அர் - பல்லோர் படர்க்கை விகுதி. (கூஅ)

மொழியியல்பு.

இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே - அனல்கொளுந்தும்
வெங்கார மெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்.

(இ-ள்.) அனல் - தீப்போல, கொளுந்தும் - சுடும், வெங்காரம் - வெங்காரமானது, வெய்து எனினும்-வெப்பமுடையதானாலும், நோய் தீர்க்கும் - நோயை நீக்கும்; சிங்கி - விஷமானது, மெய் பொடிப்ப - உடல் புளகிக்கும்படி, குளிர்ந்தும் - குளிர்ந்திருந்தும், கொல்லும் - கொல்லும்; (அதுபோல) இனியவர் - அன்புடையார், என் சொலினும் - (காதுக்கு) இனிமையல்லாத சொல்லைச் சொல்லினும், இன் சொல்லே - (அதுபொருளால்) இனியசொல்லேயாம்; இன்னார் - அன்பிலாரது, கனியும்-(காதுக்கு) மதுரிக்கின்ற, மொழியும் - சொல்லும், கடுவே - (பின்தீங்கு தருதலால்) விஷமேயாம், எ-று.

(வி-ரை.) இனியவர் - பண்படியாகப்பிறந்த பெயர்; ஈறு திரிந்த குறிப்புவினைப்பெயரெனினும் ஒக்கும்; இனிமை-பகுதி, அ-சாரியை, அர் - பல்லோர்படர்க்கை விகுதி, மைவிகுதி கெடுதலும், யகரவகரத் தோற்றமுஞ் சந்தி, இப்பண்படியாகத் தெரிநிலைவினை இனித்தல், இனியாமை, இனித்த, இனியாத, இனித்து, இனியாமல், இனித்தான், இனியான் எனப்பிறக்கும். இன்சொல்-பண்புத்தொகை நிலைத்தொடர்; விரிந்தால் இன்பமாகிய சொல் என விரியும். இன்னார்-பண்படியாகப் பிறந்த பெயர்; இன்னாமை-பகுதி, அர்-பல்லோர்படர்க்கைவிகுதி, மகர வொற்றுக்கேடு சந்தி, விகுதி அகரக்கேடு முதற்குறை ரகரமெய்விகுதி எனினும் பொருந்தும். இது எதிர்மறை வினைப்பெயரென மயங்கிக் கூறுவாரொருவர். கொளுந்தும் என்பதில் கொளுந்து பகுதி, இது தன்வினை; கொளுத்து-பிறவினைப்பகுதி. வெங்காரம் என்பதில் காரம் பண்பாகுபெயர்; வெம்மை பிறிதினியைபு நீக்கியவிசேடணம். வெய்து-பண்படியாகப் பிறந்தபெயர்; வெம்மை-பகுதி, து-ஒன்றன்படர்க்கைவிகுதி, மைகெடுதலும், மகரம் யகரமாதலும் சந்தி; சாரியை பெறின் வெய்யது எனவரும். நீர்க்குமென்பதில் நீர் - பகுதி; இது பிறவினை; தன்வினை நீரும் என்பது. உம்மை நான்கில் முதலாவதும், மூன்றாவதும் உயர்வுசிறப்பு; இரண்டாவதும், நான்காவதும் இழிவுசிறப்பு; இது எடுத்துக்காட்டுவமையணி. (௬௧)

நல்லோரியல்பு.

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது - மெய்யில்
புலமைந்துங் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல்.

(ப - ரை.) பொய் (என்று)-பொய்யும், குறளை (என்று) - புறங்கூறலும், வல் சொல்(என்று) - கடுஞ்சொல்லும், பயனில என்று - பயனில்லாச் சொற்களும், இந்நான்கும் - ஆகிய இந்நான்கு வாக்குக் குற்

றங்களும், சொல்லின் - தம்சொல்லில், எய்தாமை - பொருந்தாமலும், மெய்யில் - உடம்பில், புலம் ஐந்தும் - பொறிகளைந்தும், வழுக்காது - நெறிதப்பிச் செல்லாமலும், காத்து - காத்துக்கொண்டு, மனமாசுகாம வெகுளி மயக்கமாகிய மனக்குற்றங்களையும், அகற்றும் -(ஒருவர்) நீக்கி நடக்கும், நலம் அன்றே - தன்மையே, நல் ஆறு - நன்னெறி, எனல் - என்று சொல்லப்படுவது, எ - று.

(வி - ரை.) மனம் வாக்குக் காய மூன்றினாலும் குற்றமில்லாமல் ஒழுகுதலே நல்லொழுக்கமெனப்படும். குறளை என்னும் சிறுமையைப் பொருளதாகிய பண்புப்பெயர் புறங்கூறலுக்கானது பண்பாகுபெயர். பயனில - பண்படியாகப்பிறந்த பலவின்படர்க்கைக் குறிப்பு வினைப் பெயர். என்றென்னும் எண்ணிடைச்சொல்லைப் பொய் குறளை வன் சொல் என்பவற்றோடுங் கூட்டுக. நன் - இடை - சூ - ௪0. நான்கு, ஐந்து-எண்ணலளவையாகுபெயர். எய்தாமை - எதிர்மறைவினையெச்சம்; எய்து-பகுதி, ஆ-எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்தும் ஒருபகுதி, மை-எதிர்மறைக்கண்வரும் வினையெச்ச விகுதி. புலம் - அறிவு; அது பொறிக்கானமையால் பண்பாகுபெயர். அகற்று நலம் என்பதை அகற்றும் நலமெனப் பிரித்துப் பெயரெச்சத்தொகைநிலைத் தொடரென்னலே அன்றி, அகற்று நலமெனப் பிரித்து வினைத் தொகைநிலைத்தொடரென்னலுமாம். அகலென்னுந் தன்வினைப் பகுதி பிறவினைப்படுத்தும் விகுதியாகிய றுவ்விகுதி ஏற்றுப் பிற வினைப்பகுதியாயிற்று. அன்றே - அன்று ஏ எனப் பிரிக்காமல் ஒரு சொல்லென்றே கொள்க. எனல் தொழிலாகுபெயர். (௬0)

நல்லோரியல்பு.

நல்லா ரொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் - பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

(இ-ள்.) பல் பொறிய - பலபுள்ளிகளுள்ள, செம் கண் - சிவந்த கண்களையுடைய, புலி ஏறு - ஆண்புலிகள், அற - மிக, பசித்தும் - பசியடைந்தும், கூபங்கண் - ஈரமான இடமுடைய, புனத்த - புனத்திலுள்ள, பைங்கூழ் - பயிர்களை, தின்றா ஆம் - உண்ணா ஆம்; (அதுபோல) நல் ஆறு - நன்னெறியில், ஒழுக்கின்றலை - நடப்பதில், நின்றார் - நிலைத்தவர்கள், நல்கூர்ந்தும் - வறுமையடைந்தும், அல்லன - பாவத்தொழில்களை, செய்தற்கு - செய்வதற்கு, ஒருப்படார் - உடன்படார், எ - று.

(வி-ரை.) நிற்றல் அசைவின்மை. ஒழுக்கு-ஒழுகென்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். பெரும்பாலும் பொய்ம்முதலிய பாவத்தொழில்களைச் செய்தல் தரித்திரமடைந்தபோதாதலால் நல்கூர்ந்துமென்ற உம்மை உயர்வுசிறப்பு. அல்லன என்னும் பலவின்பாற்கைக் குறிப்புவினைப்பெயர் முன் நல்லாறென்றதனால் பாவத்தொழில்களுக்காயிற்று. ஒருப்படார்-ஒருசொல்லின் தன்மையதாகிய பல்லோர்படர்க்கை எதிர்மறைவினை; ஒருப்படு-பகுதி, ஆ - எதிர்மறைவிகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, ஆர் - பல்லோர்படர்க்கை விகுதி, ஆகாரக்கேடு முதற்குறை. பொறிய - சினையடியாகப் பிறந்ததும், புனத்த-இடமடியாகப் பிறந்ததுமாகிய குறிப்புப்பெயரெச்சங்கள். இவ்வாறன்றிக் குறிப்புமுற்றுப் பெயரெச்சமாயின என்றுவது, குறிப்புவினைப்பெயர் அல்லது பெயரென்றுவது கொண்டு முன்றபே பின்னின்ற புலியேறு, பைங்கூழ் என்பவற்றோடு, குறிப்பு வினைமுற்றுத்தொகாநிலைத்தொடராகவும்,இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடராகவும் புணர்ந்தன எனவுங் கூறலாம். பைங்கண் என்பதில் பசுமை ஈரத்தையும், பைங்கூழ் என்பதில் பசுமை பாகஞ்செய்யாமையையும் உணர்த்தின இது எடுத்துக்காட்டுவமையணி. இவ்வுவமை "புலிபசித்தாலும் புல்லைத்தின்னாது"என் னும்பழமொழிபற்றிவந்தது.

அபகரித்துப் பொருளீட்டல்.

குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளுந் திருவும் - தவம்விற்றுங்

ஊனோம்பும் வாழ்வு முரிமைவிற் றுண்பதூஉம்
தானோம்பிக் காத்த றலை.

(இ - ள்.) குலம் - தன்குலத்தை, விற்று - முழுமையும் விட்டு, கொள்ளும் - அடைகிற, பொருளும் - பொருளும், வாய்மை நலம் - உண்மையாகிய நன்மையை, விற்று - முற்றும் விட்டு, கொள்ளும் - அடைகிற, திருவும் - செல்வமும், தவம் விற்று - தவத்தை முற்றும் விட்டு, ஊன் - உடம்பை, ஓம்பும் - காக்கின்ற, வாழ்வும் - வாழ்க்கையும், உரிமை - தன் வமிசத்துக்குரியவற்றை, விற்று - ஒருவர் வசமாக்கி, உண்பதூஉம் - சீவனஞ்செய்வதும், தான் ஓம்பிக்காத்தல் - (தன்னிடத்துண்டாகாமல் ஒருவன்) தான் காத்துக்கொள்ளலே, தலை - முதன்மையான தருமமாம், எ - று.

(வி - ரை) குலம் விற்றலாவது - பொருளுக்காசைப்பட்டுத் தன்னின் இழிகுலத்தாரோடு சம்பந்தஞ்செய்தல். வாய்மைநலம் விற்றலாவது - பொருளுக்காகப் பொய்ச்சாட்சிமுதலிய சொல்லல். தவம் விற்றலாவது - உடல்வலி குறையாமைக்காக மேற்கொண்ட விரதத்தை விடல். உரிமைவிற்றலாவது - வறுமை நீங்குதற்காகத் தன்வமிசத்துக்குரிய சுதந்தரத்தை ஒருவர் வசமாக்கிப் பொருள் பெற்றுண்ணல். ஆங்கு - அசை. ஓம்பிக்காத்தல் - ஒருபொருட் பன்மொழி. ஊன் - கருவியாகுபெயர். உரிமை - பண்பாகுபெயர். அளபெடை இன்னிசையளபெடை. உகரம் ஊகாரமாயளபெழலே இன்னிசை யளபெடை எனக் குழறுவார்க்குக் 'கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார்'' என்பதைக் காட்டி மறுக்க. (௬௨)

அபகரித்துப் பொருளீட்டல்.

இடைதெரிந் தஞ்சுறுத்து வஞ்சித் தெளியார்
உடைமைகொண் டேமாப்பார் செல்வம் - மடநல்லார்
பொம்மன் முலைபோற் பருத்திடினு மற்றவர்
நுண்ணிடைபோற் றேய்ந்து விடும்.

(இ-ள்.) இடை தெரிந்து - இடம் அறிந்து, அஞ்சு உறுத்து - பயப்படுத்தி, வஞ்சித்து - வஞ்சனைசெய்து, எளியார் - எளியவர்களுடைய, உடைமைகொண்டு - பொருளை அபகரித்து, ஏமாப்பார் - மிகக் களிப்பவருடைய, செல்வம் - செல்வமானது, மடம் - இளமையாகிய, நல்லார் - மாதர்களுடைய, பொம்மல் - பொலிவாகிய, முலைபோல - முலைபோல, பருத்திடினும் - (முன்னே) மிகுவதாயினும், அவர் - (பின்) அம்மாதருடைய, மற்று நுண் இடைபோல - நுட்பமாகிய இடையைப்போல, தேய்ந்துவிடும் - குறைந்தேபோம், எ - று.

(வி-ரை.) அஞ்சுறுத்து - பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம்; அஞ்சு என்னும் முதனிலைத்தனிவினைப் பெயரோடு உறு என்னும் முதனிலை புணர்ந்து இரண்டும் ஒரு சொல்லின் தன்மைப்பட்டு நின்ற அஞ்சுறு - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்சவிகுதி; இப்பகுதி தன்வினைக்கு அஞ்சுற்று எனவரும். தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய அஞ்சு என்னும் முதனிலையோடு பிறவினைப்படுத்தும் வி விகுதியும், தகரச்சந்தியும் பெற்றுவரும் அஞ்சுவித்து பகுதியானபோது அஞ்சுவித்தி எனவரும். உடைமை - பண்புப்பெயர். ஏமாப்பார் - பலர்பாற்படர்க்கை எதிர்காலவினைப்பெயர்; களிப்புணர்த்தும் ஏமம் என்னும் பண்புப்பெயர் யா என்னும் முதனிலை வினையின் மருஉ ஆகிய ஆ என்னும் முதனிலை வினைப்புணர்ச்சியில் அம் கடைக்குறைபாய்ப் புணர்ந்துநின்ற ஏமா பகுதி, ப் - சந்தி, ப் - எதிர்கால இடைநிலை, ஆர் - பல்லோர்படர்க்கை விகுதி. அறியாமைப்பொருளதாகிய மடம் என்னும் பண்புப்பெயர் காரணமாகிய இளமைக்காயிற்று. போல போல்லென ஈறுதொகுத்தலாயிற்று. உம்மை உயர்வுசிறப்பு. மற்று - பிறிதென்னும் பொருளது. தேய்ந்துவிடும் - செய்யுமென்முற்று; தேய் - பகுதி, த் - சந்தி, து - சாரியை, விடு - துணிவுப்பொருண்மை விகுதி சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம், அனைத்துமொருபகுதி, உம் - எதிர்காலத்திணைப்பாற்பொதுமை விகுதி, உகரக்கேடு சந்தி; செல்வமென்னும் எழுவாயை நோக்கிப் பொதுமை நீங்கி அஃறிணையொன்றன்பாலாய் நின்றது. (௫௩)

ஒழுக்கமிழுக்காமை.

பெற்ற சிறுகப் பெறாஅ பெரிதுள்ளுஞ்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா - முற்றும்
வரவர வாய்மடுத்து வல்லிறாய் மாய
வெரிதழன் மாயா திரா.

(இ - ள்.) வல்லிறாய் - வன்மையாகிய விறகு, வரவர - (தன்னிடத்து) வந்துகொண்டிருக்க, முற்றும் - முழுமையும், வாய் மடுத்து - வாயால் உண்டு, (எரித்து) மாய - (அவ்விறகு) மாண்டால், எரி தழல் - எரிகின்ற தீ, மாயாது இராது - அவியாமலிராது; (அதுபோல) பெற்ற - அடைந்த பொருள்கள், சிறுக - குறைவுள்ளன ஆக, பெறாத - அடையாத பொருள்களை, பெரிது உள்ளும் - மிகுதியாக நினைக்கின்ற, சிறு உயிர்க்கு - சிலவாழ்நாளையுடைய உயிர்க்கு, ஆக்கம் - செல்வம், அரிது - இல்லையாம், எ - று.

(வி - ரை.) அடையாதமுன் பெருமையுள்ளனவாகக் கருதிய பொருள்களை அடைந்தபின் சிறுமையுள்ளனவாக இவன் கருதுதலால் இவன்கருத்தை அப்பொருள்களின்மேல் ஏற்றிப் 'பெற்றசிறுக' என்றும், இவ்வாறு கருதும் இழிவுநோக்கிச் 'சிற்றுயிர்' என்றுங் கூறினார். பெற்ற, பெறாத-வினைப்பெயர்கள். சிறுக - செயவெனெச்சம்; சிறுகு - பகுதி. பெரிது - குறிப்புவினையெச்சம். அரிது-இன்மை குறித்துநின்ற ஒன்றன்பாற்க்கைக் குறிப்பு வினைமுற்று. அடுக்குத்தொழிலின் இடையறாமைப்பொருளது. வாய்மடுத்து இலக்கணை. மடுத்தல் - உண்ணல்; இதன் முதனிலையடியாக மடை என்னும் பெயர் சோற்றுக்கு வழங்கும்; மடு-பகுதி, ஐ - செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, உண்ணப்படுவதென்பது பொருள். மாயாது-எதிர்மறைவினையெச்சம்; மாய்-பகுதி, ஆ எதிர்மறைவிகுதி, அனைத்துமொரு பகுதி, த்-எழுத்துப்பேறு, உ-வினையெச்சவிகுதி; இதனை வினைமுற்று வினையெச்சமானதெனக் கொண்டால் விகுதி ஒன்றன்பாற்க்கைத் துவ்விகுதி என்க. இராது -

இரா எனத் தாய்விகுதி தொகுத்தலாயிற்று இது எடுத்துக்காட்டுவமை யணி. (கச)

ஒழுக்கமிழுக்காமை.

தத்த நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
ஒத்த கடப்பாட்டிற் றாளூன்றி - எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள்.

(இ - ள்.) தத்தம் - தங்கள் தங்களுடைய, நிலைக்கும் - நிலைமைக்கும், குடிமைக்கும் - குடிப்பிறப்புக்கும், தப்பாமே - தப்பாமல், ஒத்த - ஒத்துள்ள, கடப்பாட்டில் - முறைமையில், தாள் ஊன்றி - விடாமுயற்சி செய்து, எய்த்தும் - வருந்தியும், அறக்கடையில் - பாவவழியில், செல்லார் - செல்லாதவராகி, பிறன் பொருளும் - பிறனுடைய பொருளையும், வெஃகார் - இச்சியாதவருடைய, புறங்கடையது ஆகும் - தலைவாயிலில் சேர்வதாகும், பொருள் - பொருள், எ - று.

(வி - ரை.) பொருள் அவர் வேண்டுங் காலத்தை எதிர்பார்த்துக் காக்கு மென்பார் 'புறங்கடையதாகும் பொருள்' என்றார். தத்தம் என்னும் அடுக்குத் தனிமைப்பொருளது. தப்பாமே-எதிர்மறை வினையெச்சம்; தப்பு - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்து மொருபகுதி, ஏ-எதிர்மறையில் வரும் வினையெச்ச விகுதி. கடப்பாடு-முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; கடமை என்னும் பண்போடு படு என்னு முதனிலைவினை புணர்ந்தபோது, மை விகுதி கெட்டுப் பகரந் தோன்றி, ஒரு சொல்லின் தன்மையதாகிய கடப்படு முதனீண்டு நின்றது. அறத்தினின்று நீக்கப்பட்டதாதலால் பாவம் 'அறக்கடை' எனப்பட்டது; இது நான்காம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்; அறத்துக்குக் கடையானதென விரியும். கடை - புறம்பு. அறக்கடை அறங்கடை என்றானது மெலித்தல் விகாரம். செல்லார்-வினைமுற்றை வினையெச்சமாக்குக. வெஃகார்-எதிர்மறை வினையாலணையும் பெயர். (கரு)

ஈகையின்மை.

பொதுமகளிர் போல்வ தலையாயார் செல்வம்
குலமகளிர் போல்வ ஏனையோர் செல்வம் - கலனழிந்த
கைம்மையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில்.

(இ - ள்.) தலையாயார் - மேலோருடைய, செல்வம் - செல்வங்கள், பொதுமகள் (நலமே) போல்வ - (யாவருக்கும் பயன்படுதலால்) வேசையினுடைய இன்பத்தையே ஒப்பன; ஏனையோர் - இடையானவருடைய, செல்வம் - செல்வங்கள், குலமகள் (நலமே போல்வ) - (உடையாருக்கே பயன்படுதலால்) குலப்பெண்ணின்பத்தையே ஒப்பன; கடையாயார் - கீழ்மக்களுடைய, செல்வம் - செல்வங்கள், கலன் அழிந்த - மங்கலநாணிழந்த, கைம்மையார் - விதவைகளுடைய, பெண்மை நலம் போல - பெண்ணின்பத்தையேபோல, பயன்படுவது இல் - பயன்படுதல் இல்லையாம், எ - று.

(வி - ரை.) ஏகாரத்தைப் பெண்மை நலம் என்பதனோடும், நலம் என்பதைக் குலமகள் பொதுமகள் என்பவற்றோடும், போல்வ என்பதைக் குலமகள் என்பதனோடுங் கூட்டிப் பொருளுரைக்க. போல்வ, போல்வன என வருதலன்றி அஃறிணை வினைக்கண் போல்ப என வாராமை உணர்க. பாட்டாத ஒருவர் போல்ப என்பர், அது பகரவிகுதிபெற்ற உயர்திணை வினையாவதன்றி அகரவிகுதிபெற்ற அஃறிணை வினையாகாது. ஏகாரங்கள் பிரிநிலை. கல்வி அறிவு கேள்வி ஒழுக்க முதலியவற்றால் சிறந்தவரானமைபற்றி மேலோரைத் 'தலையாயார்' எனவும், அக்கல்வி முதலியவற்றை முயன்று பெறாமையால் இழிந்தோரானமைபற்றிக் கீழோரைக் 'கடையாயார்' எனவும் ஆக்கவினைப்பெயராற் கூறினர்; தலையா-பகுதி, ய்-இறந்தகால இடைநிலை, ஆர் பல்லோர் படர்க்கை விகுதி. முன்னே தலையாயாரையும், கடையில் கடையாயாரையுங் கூறினமையால், ஏனையோரென்பது இடையாயாருக்காயிற்று; பிறிதென்னும்

பொருட்பட நின்றன. எனை - பகுதி, ய் - சந்தி, ஆர் - பல்லோர் படர்க்கை விகுதி, விகுதி ஆ ஒவ்வானது செய்யுள்வழக்கு; கள் - பொது - கு - உ. பயன்படுவது - எதிர்காலச் செய்வினைத் தொழிற்பெயர். இது நியமவுவமையணி. (௧௮)

ஈகையின்மை.

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல - கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்.

(ப - ரை.) மற்றையோன் - ஈகைக்குணமுடையவறியன், அருளிலன் (என்று) - (உயிர்களிடத்துக்) கிருபையில்லாதவனென்றும், அன்பு இலன் (என்று) - பிரீதியில்லாதவனென்றும், கண் அறையன் என்று - (பழகினவரிடத்துக்) தாட்சிணிய மில்லாதவனென்றும், பலரால் (உம்) - பலராலும், கொன்னே - காரணமில்லாமலே, இகழப்படான் - நிந்திக்கப்படான்; (ஆதலால்) வள்ளன்மை - ஈகை, இல்லாதான் - இல்லாதவனுடைய, செல்வத்தின் - செல்வத்திலும், நல்குரவே - (அவனுடைய) தரித்திரங்களே, நனி நல்ல - மிகுதியும் நல்லன ஆம், எ - று.

(வி - ரை.) அநுபவிக்கப்படும்பொருள் பலவாதலால் அவற்றின்மையாகிய நல்குரவும் பல ஆயது. வள்ளன்மை - பண்புப்பெயர்; வள் - பகுதி, ன் - சந்தி, அல் - பகுதிப்பொருள் விகுதி, மாட்சிமை என்பதிற்போல மைவிகுதிமேல்விகுதியாய் நின்றது. வள்ளன்மையில்லாதான் - எழுவாய்த்தொகாநிலைத்தொடர்; இது திணைவழுவமைதி; இல்லாதான் - குறிப்புவினையாட்பெயர். மற்றையோன் - இடைச்சொலடியாகப் பிறந்த பெயர்; கொன்னே, உம்மை என்பனபோல வருமொழிநோக்காது ஐகாரச்சாரியை பெற்றுநின்ற மற்றை - பகுதி, ய் - சந்தி, ஆன் - ஆண்பாற் படர்க்கை விகுதி; ஆ - ஓவானது செய்யுள்வழக்கு. ஏ - பிரிநிலை. கொன் - பயனின்மைப்பொருளதாய் நின்றது. கண்ணறையன் - தொழி

லடியாகப்பிறந்த ஆண்பாற்பெயர்; கண்ணறு - பகுதி, ஐ - வினைமுதற்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி; கண்ணறை என ஒருமைப்பால் மூன்றுக்கும் பொதுமையாய் நின்ற பொதுமையை நீக்கவந்த அன் ஆண்பாற்படர்க்கை விகுதி, ய் - சந்தி. (௬௭)

சொல்வலிகோறல்.

ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல்
ஓவோ கொடிது கொடிதம்மா - நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட் டிடப்படின்மற்
றாவா விவரென்செய் வார்.

(இ - ள்.) ஈகை - கொடுக்குஞ்செய்கை, அரிது எனினும் - (சிலர்க்கு) இல்லையாயினும், இன்சொலினும் - இன்சொல் சொல்லுதலினும், நல்கூர்தல் - இல்லாதவராகுதல், ஓவோ - ஐயோ, கொடிது கொடிது - மிகுதியுங் கொடுமையுள்ளது; அம்மா - இது ஆச்சரியம்; தீவினை - பாவமாகிய, கம்மியனால் - கம்மாளனால், நா கொன்று - நாக்கை வலியடக்கி, வாய்பூட்டிடப்படின் - (இன்சொல் சொல்லவொட்டாமல்) வாய்பூட்டப்பட்டால், இவர் - இவர்கள், ஆவா - ஐயோ, மற்று என் செய்வார் - வேறு யாது செய்வார், எ - று.

(வி - ரை.) சிலர் அறத்தின்பொருட்டுப் பொருளைக் கொடுத்தல் இல்லாராயினும் இன்சொல்லையாயினுஞ் சொல்லலாயிருக்க, அதுவுஞ் செய்யாமைக்குக் காரணம் அவருடைய பாவமேயாமென்பது கருத்து. ஓவோ, ஆவா இரண்டும் இரக்கப்பொருளன. ஆகிய - இடைச்சொல். ஓவோ என்பதை ஓகோ என்பதாகப் பாடந்திருத்திக் கூறுவாருமுளர். இது தற்குறிப்பேற்றவணி. முன்னுள்ள உம்மை உயர்வுசிறப்போடு எதிரதுதழீஇயது; பின்னுள்ளது இழிவுசிறப்போடு இறந்ததுதழீஇயது. கொடிது - குறிப்புவினைமுற்று. அடுக்கு - மிகுதிப்பொருளது. மற்று - பிறிதென்னும்பொருளது. பூட்டிடப்படின் - செயப்பாட்டு வினையாகிய செயின்னென்வாய்பாட்டு வினையெச்சம்; பூண் - தன்வினைப்

பகுதி பிறவினைப்படுத்தும் விகுதியாகிய டகரத்தையும், ணகரம் டகரமாதலாகிய சந்தியையும் பெற்ற பூட்டு - பகுதி, இடு - பகுதிப்பொருள் விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, அ - சாரியை, படு - செயப்பாட்டு வினைவிகுதி, உகரக்கேடு சந்தி, இவ்வனைத்துமொருபகுதி, இன் - இறந்தகால வினையெச்சவிகுதி, உகரக்கேடு சந்தி. தீவினைக்கம்பியலென்பது உருவகமாதலால் இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடரென்க. தீவினை சிறப்புப்பெயராகவும், கம்பியல் பொதுப்பெயராகவும் கொள்க. தீவினை - பண்புத்தொகைநிலைத்தொடர். (கஅ)

சொல்வலிகோறல்.

சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல—வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினு மஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர்.

(இ-ள்.) சொல் வன்மை - (பிறர் ஏற்றுக்கொள்ளத்தக்க) சொல்லின்வலி, உண்டு எனின் - (ஒருவனுக்கு) உளதானால், கொன்னே - பயனிலாமலே, விடுத்தொழிதல் - விட்டுவிடல், நல்வினை - செல்வாக்குக் காரணமாகிய நல்வினையை, கோறலின் - கொல்லுதலினின்றும், வேறு அல்ல - வேறன்றாம்; வாக்கின் - செல்வாக்கினது, பயன் கொள்பவர் - பயனைக்கொள்ளவல்லவர், வல்லை - விரைவில், தம் ஆக்கம் - தமது விருத்தி, கெடுவது உளது எனினும் - கெடுதலுள்ளதாயினும், அஞ்சுபவோ - அஞ்சிவிட்டொழிவாரோ (விட்டொழியார்), எ - று.

(வி - ரை.) செல்வாக்கால் வரும்பயனை அறிந்தவர்கள் தமது செல்வாக்கால் பிறர்க்குப் பயனுண்டாவதானால் தமது பேற்றை நோக்காமல் அது செய்யாது விடாரென்பது கருத்து. விடுத்தொழிதல் - தொழிற்பெயர்; விடு-பகுதி, த்-சந்தி, து-சாரியை, ஒழி-துணிவுப்பொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, தல்-புடை

பெயர்ச்சிவிகுதி. சோறலின் - ஐந்தனுருபு நீங்கற்பொருளது. அறிந்திலைப் பார்க்கினும் வேறல்ல எனப் பொருள்கொண்டு எல்லைப்பொருளதெனினும் பொருந்தும். அல்ல-இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகிய குறிப்பு வினைமுற்று. இது உலகவழக்கு. வெள்ளை என்பதுபோல நின்ற வல்லை என்றும் பண்புப்பெயர் காலவிரைவின்மேல் நின்றது. கெடுவதுளது-பால்வழுவமைதி; உளதென்பதில் துவ்விகுதி சொல்வன்மைக் குரியது. ஓ - எதிர்மறை. சோர்பவர் - ஈறுதிரிந்த வினைப்பெயராதலால் பகர இடைநிலை பெற்றது. ஆக்கம்-தொழிற்பெயர்; ஆ-பகுதி, கு - சாரியை, அம் - புடைபெயர்ச்சி விகுதி, ஆக ஆக்கென இரட்டல் சந்தி, உகரக்கெடும் அது. (கூக)

நல்லோர் செயல்.

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழார் - அறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினும்
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார்.

(இ-ள்.) அறன் அல்ல-பாவங்கள், எண்மைய ஆயினும்-(செய்ய) எளியனவாயிருப்பினும், கைவிட்டு - நீக்கிவிட்டு, அரிது எனினும் - (செய்ய) அரிதாயினும், ஒண்மையின்-அறத்தினின்றும், தீர்ந்து-நீங்கி, ஒழுகலார்-நடக்க அறியாதவர்கள், சிறுமுயற்சி செய்து சிறிய முயற்சியைச்செய்து, ஆங்கு - அத்தொழிலில், உறுபயன் - பெரும்பயனை, கொள்ள-தாம் அடைய, பெறும் எனின் - (அம்முயற்சி) பெறுமானால், தாழ்வரோ - தாமதிப்பரோ, தாழார் - தாமதியார், எ - று.

(வி-ரை.) சிறுமுயற்சி என்றது மேற்கூறிய செல்வாக்கை; சிறுமுயற்சி - பண்புத்தொகைநிலைத்தொடர். பெறுமென்பதற்கு எழுவாய் சிறுமுயற்சி; செயப்படுபொருள் கொள்ளல். அறனல்ல - எழுவாய்த் தொகாநிலைத்தொடர். அல்ல-பலவின்படர்க்கைக்குறிப்பு வினைப்பெயர். எண்மைய என்பது அவ்வினைமுற்று. உயிர்கள் தீவினை மிகுதியர்.

வினை சிறிதும் செய்வனவாதலின் 'அறனல்ல எண்மைய' எனவும், 'ஒண்மை அரிது' எனவுங் கூறினர். உயிருமென்ற உம்மை இழிவு சிறப்பு. எளிதுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. ஒண்மை என்றுங் காரியப்பெயர் உயிரை விளங்கச்செய்வதாகிய அறமென்னுங் காரணத்தின் மேல் நின்றது. ஒழுகலார்-எதிர்மறை வினையாலணையும்பெயர்; ஒழுகு-பகுதி, அல்-எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்து மொரு பகுதி, ஆர்-பலர்பால் படர்க்கைவிகுதி; பகுபதவிலக்கண மறியாதவர் அல் சாரியை எனக் கூறுவர். அது ஒழுகலன், ஒழுகலது, ஒழுகல என்பவற்றிற் பொருந்தாமையே அன்றி; ஒழுகிலன், ஒழுகிலது, ஒழுகில என்பவற்றில் இல் சாரியை எனக் கொள்ளவேண்டும்; கொள்ளின் எதிர்மறை யுணர்த்தும் உறுப்பிலதாதலானும் குற்றமே ஆம். (௭௦)

தீயவர் சாதுரியம்.

செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயக்கரு நாகரிக மென்னும் - செயிர்த்துரைப்பின்
நெஞ்சநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

(இ-ள்.) செய - (தம்மால்) செய்து முடிப்பதற்கு, கடவ அல்லனவும் - தகுதியல்லாதவற்றையும், செய்தும் மன் - மிகுதியும் (நாம்) செய்துமுடிப்போம், என்பார் - என்று சொல்பவர், நயக்கந்தரும் - விரும்பத்தரும், நாகரிகம் - தாட்சிணியம், என்-என்னபயனுடையது; செயிர்த்து - கோபித்து, உரைப்பின்-(கடுஞ்சொல்லைச்) சொல்லினால், நெஞ்சு - மனம், நோம் என்று-(ஒருவன்) வருந்துவானென்று கருதி, தலை - (அவனுடைய) தலையை, துமிப்பான் - வெட்டுவோனுடைய, தண் அளிபோல - கொடுமையாகிய இரக்கமில்லாமையைச் சொல்வதுபோல, எஞ்சாது - சிறிதும் ஒழியாமல், எடுத்து உரைக்கல் - (பலர்முன்) எடுத்துச்சொல்லுதலாகிய, பாற்று - தன்மையையுடையது, எ-று.

(வி - ரை.) தம்மால் செய்யமுடியாதவற்றையும் நினக்குச் செய்வோமென்று காலங்கழிப்பவரிடத்தில் தாட்சிணியம் வையாமல் அவரால் முடியாமையைப் பலரறியச் சொல்லி நீங்குக என்பது கருத்து. இவன் சொல்லாமலிருக்கும் தாட்சிணியம் அவ்வலியில்லார் அவ்வாறு சொல்லிக்கொள்ளுதற்குக் காரணமானதைப்பற்றி, 'செய்தும்மன் னென்பார், நயத்தகு நாகரிக மென்' என்றார். கடவ-பண்படியாகப்பிறந்த பலவின்படர்க்கைக் குறிப்புவினைப்பெயர்; கடமை - பகுதி, அ - பலவின் படர்க்கை விகுதி, ஈறு போதலும், வகரத்தோற்றமுஞ் சந்தி. உம்மை உயர்வுசிறப்பு. செய்தும் - தனித்தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று; தும் விகுதி தன்மைப்பன்மையையும், எதிர்காலத்தையு முணர்த்திற்று. இது உயர்வுபற்றிவந்த பால்வழுவமைதி. மன் மிகுதிப் பொருளதாகிய இடைச்சொல். நயக்கத்தகுமென்பதில் முன்மொழி ஈறுதொகுத்தலாய் நின்றது. நெஞ்சு-இடவாகுபெயர். நோதும் அல்லது நோவும் என்னும் வினைமுற்றில் ஈற்றுயிர்மெய் கெட்டதற்கு நன் - வினை - உஉ-ரு. நெஞ்சநோம் - திணைவழுவமைதி. தன்னனி: தன்-எதிர்மறையை யுணர்த்தவந்த குறிப்புச்சொல். உரைக்கல் - தொழிற்பெயர்; உரை-பகுதி, க்-சந்தி, கு சாரியை, அல்-புடைபெயர்ச்சி விகுதி, உகரக் கேடு சந்தி, ஆம் - அசை. (௱௧)

தீயவர் சாதுரியம்.

அல்லன செய்யினு மாதலங் கூழாக்கொண்
டொல்காதார் வாய்விட் டுலம்புப - அல்லால்
பிறர்பிறர் செய்பபோல் செய்தக்க செய்தாங்
கறிபடம் பூண்டுநிற்பா ரார்.

(இ-ள்.) ஒல்காதார் - அடங்காதவர், அல்லன - அறமல்லனவற்றை, செய்யினும் - செய்தாலும், ஆதலம் - பலரறிதலையே, கூழ் ஆகக் கொண்டு - பயனாகக்கொண்டு, வாய்விட்டு உலம்புப - வாய்விட்டிரைவார்கள்; அல்லால் - (அப்படி) அல்லாமல், செய்தக்க - செய்தற்குரிய

அறங்களை, பிறர் பிறர் - யாரோ பிறரொருவர், செய்பபோல் - செய்வார்போன்று, செய்து - தாம் செய்து, ஆங்கு - அக்காரியத்தில், அறிமடம் - அறிந்தும் அறியார்போலிருத்தலை, பூண்டு - அடைந்து, நிற்பார் - நிற்பவர், ஆர் - ஒருவருமிலர், எ - று.

(வி - ரை.) செய்தக்க என அடியில் சொன்னமையால் அல்லன பாவச்செய்கைகளாயிற்று. செய, கூறாக என்பவற்றில் விகுதி தொகுத்தல். பயனிலாகிய காரியத்தை அதன்காரணமாகிய ஆதலமென்றது காரியத்தைக் காரணமாகக் கூறுவதோர் உபசாரவழக்கு. உம்மை - இழிவுசிறப்பு. பயனோர் கூறுமென்றது இலக்கணை. வாயினிழிவைச் சிறப்பித்தற்கு 'வாய்விட்டு' என்றும், அவர் சொல்வன பயனில்லனவென் றுணர்த்தற்கு 'உலம்புப' என்றும், நிற்பாரரியாதல் கருதி 'ஆர்' என் றுங் கூறினர். அடுக்குப் பன்மைப்பொருளது. போலென்னும் முதனிலை வினையெச்சப்பொருள்பட்டு நின்றது. ஆர் - யாவரென்னும் வினாப்பெயரின் மரூஉ; இது இன்மைப்பொருள் தந்தது. ஒல்குதல் - தளர்தல். (எ௨)

பிறர்பழி தூற்றல்.

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனாக் கொள்வான் - பயமின்று [ல்
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடியுடைத்துக் கொல்வான்போ
கைவிதிர்த் தஞ்சப் படும்.

(இ - ள்.) பகை இன்று - பகையில்லாமலே, பல்லார் - பலருடைய, பழி - பழியை, எடுத்து ஓதி - எடுத்துச்சொல்லி, நகை ஒன்றே - நகைத்தலொன்றையே, நல் பயன் ஆக - பெரும்பயனாக, கொள்வான் - கொள்ளுமியல்புடையான், பயம் இன்று - (தனக்கு வேறு) பயனில்லாமல், மெய் விதிர்ப்பு - (மற்றவனுடைய) உடலினடுக்கத்தை, காண்பான் - காணும்பொருட்டு, கொடிறு - கொடிற்றை, உடைத்து - உடைத்து, கொல்வான்போல - வருத்துமியல்புடையானுக்கு

நடுங்கி அஞ்சுதல்போல, கைவிதிர்த்து - (பிறரால்) கைந்நடுங்கி, அஞ்சப்படும் - அஞ்சப்படுவோன், எ - று.

(வி-ரை.) பகையின் றென்றறிஞல் பல்லார் நட்பினர், அயலவருக்காயிற்று இன்று இரண்டும் இன்றி என்னும் குறிப்பு வினையெச்சத்தின் திரிபு; முன்னதின்முன் பகரமியல்பாதற்கு நன் - உயி - சூ - உஉ. ஏ-பிரிநிலே. நன்பயன் - பண்புத்தொகை நிலைத்தொடர்; விரித்தால் நன்மையாகிய பயனெனவிரியும். மைவீறு கெடநின்ற நல் என்னும் பண்புப்பெயரி னீற்றுலகரம் மெல்லின முதன்மொழிமுன் நன்மலரெனத் திரிதல்போல வல்லினமுதன்மொழி முன்னும் திரிந்தது. நன் - மெய் - சூ - உசு. வன்கணம், வெண்பல், அகன்குளம், என்பொருள் என மற்ற பண்பீற்று லகர ளகரங்களும் அவ்வாறு னகர ணகரங்களாகத் திரிதல் காண்க. கைவிதிர்த்து என்னுஞ் சினைவினை அஞ்சப்படும் என்னும் தம்மினுகிய தொழிற்செயப்பாட்டுவினையில் தந்தொழிலாகிய அஞ்சு என்னும் வினைகொண்டது. (எக)

தீயவர் செல்வம்.

தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும் தெய்வம்
இலதென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்.

(இ - ள்.) தம் - (தந்தையர்) தம்முடைய, இன்புதல்வர்க்கு அன்றே - நல்ல புத்திரர்களுக்கே, பயன் - பயனுள்ளமொழியை, பலகாலும் - பலதரமும், சொல்வார் - சொல்வார்கள்; (அதுபோல) தெய்வம் உளது - தெய்வம் உண்டு, என்பார் - என்று அஞ்சி நடப்பவர், தீய - கெடுதியாயினவற்றை, செயப்புகின் - செய்யத்தொடங்கினுல், தெய்வமே - அத்தெய்வமே, கண் இன்று - தாட்சிணியமில்லாமல். நின்று - எதிர்நின்று, ஒறுக்கும் - தண்டிக்கும்; தெய்வம் - தெய்வமானது, இலது என்பார்க்கு - இல்லை என அஞ்சாது நடப்பவர்க்கு: இல்லை-(அவ்வாறு தண்டித்தல்) இல்லை, எ-று.

(வி - ரை.) தெய்வம் இலதென்பார்க்கு ஒறுத்தலில்லை என்றது இவரை மறுமையில் நரகவேதனை முதலியவற்றால் தண்டித்தலால் இம்மையில் இல்லை என்றபடி. இது பெரும்பான்மைபற்றிக் கூறியது. கண்ணின்று நின்றொறுத்தலென்றது முற்பகல் செய்யின் பிற்பகல் விளைதலை. தெய்வம் - சொல்லால் அஃறிணை ஆதலால் உளது, இலதென்றும் அஃறிணைவினைகொண்டது. ஏ-பிரிநிலை. தேற்றப்பொருளதாகிய அன்றே ஒரு சொல்லாகிய இடைச்சொல். உம்மை முற்றும்மை. இது எடுத்துக்காட்டுவமையணி. (எச)

தீயவர் செல்வம்.

தீயசெயல் செய்வா ராக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல - தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமா போல்.

(இ - ள்.) நா - நாவினால், இன்பு உற - இன்பம் உண்டாக, நக்கி - நக்கி, கொல்லும் - பின்கொல்லுகிற, கவயமாபோல - காட்டுப் பசுவைப்போல, தீய செயல் - பொல்லாங்கான செய்கையை, செய்வார் - செய்பவர்களுடைய, ஆக்கம் - செல்வங்கள், பெருகினும் - முன் பெருகினாலும், தீயன - கெடுதொழிலால்வந்த செல்வங்கள், தீயனவே - துன்பந்தருவனவே ஆம், வேறு அல்ல - இன்பந்தருவன அல்ல; (ஆதலால்) தீயன - தீயவை, ஆகா - அடைதற்குரியன அல்ல, நல்லன - நல்லவை, ஆம் - அடைதற்குரியன, எ-று.

(வி - ரை.) தீயன நல்லன ஆகா ஆம் என்பதை முறைநிரனிறையாகப் பொருள்கொள்க. [நன்-பொது - ரு கங.] தீய-பண்படியாகப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; தீமை-பகுதி; ய் சந்தி, அ-பெயரெச்சவிகுதி, மகர ஐகாரக்கேடு சந்தி. செயல் செய்வார் - நிலைமொழி அஃறிணைப்பெயராதலாலும், இப்புணர்ச்சி இரண்டாம் வேற்றுமைத்தொகைப்புணர்ச்சியாதலாலும் நன் - மெய் - உச - ரு-இன்படி நிலைமொழி

யிற்று லகாரம் திரியாமல், கூ - இன்படி விகாரத்திற்பாலாயிற்று. ஆற்றொழுக்காகப் பொருள் கொள்ளின் தீயன தீயனவே எனத் தேற்றேகாரங் கொடுத்ததோடமையாது, எதிர்மறைமுகத்தாலுங் கூறி முடித்தலையால் அது குற்றமே ஆம். கவயமா - இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். கவயம்-சிறப்புப்பெயர். (எ௰)

வியபசாரவியல்பு.

நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயும்
செந்நெறிச் செல்வாரிற் கீழல்லர் - முன்னைத்தம்
ஊழ்வலி யுன்னிப் பழிநாணி யுள்ளுடைவார்
தீய செயினுஞ் சில.

(இ-ள்.) தம் - தம்முடைய, முன்னை - பழமையாகிய, ஊழ் வலி - ஊழ்வினையினது வலியை, உன்னி - (தம் அநுபவத்துக்குக் காரணமாக) நினைத்து, பழி - பழித்து, நாணி - கூசி, உள் உடைவார் - மனம் வருந்துவோர், சில தீய - சிலபொல்லாங்குகளை, செயினும் - செய்தாராயினும், (அவர்) நல்மக்கள் - நல்லோருடைய, செம் நா - உண்மையைக் கூறும் நாவில், தழும்பு இருக்க - புகழ்ந்த தழும்பு மாறாதபடி, நாள்வாயும் - நாள்தோறும், செம் நெறி - நல்வழியில், செல்வாரின் - நடக்கின்றவர்களினின்றும், கீழ் அல்லர் - தாழ்ந்தவரல்லர், எ-று.

(வி-ரை.) ஊழ்வலியைத் தம்மநுபவத்துக்குக் காரணமாக நினைத்தலும், பழித்துக் கூசி மனம் வருந்துதலும் மிகுதியும், தீயசெய்தல் சிறிதுமாதலால் இவரை நல்வழியில் நடக்கிறவர்களினின்றும் தாழ்ந்தவரல்லரென்றார். நாக்குக்கு உண்மை கூறுதலின் மேற்பட்ட நன்மை வேறின்மையால் செம்மைக்கு உண்மை கூறுதலெனப் பொருள் கொள்ளப்பட்டபோதிலும், செந்நா-பண்புத்தொகைநிலைத்தொடரென்க; விரித்தால் செம்மையாகிய நா என விரியும். தழும்பு - முதனிலைத் தொழிலாகுபெயர். முதலிலுள்ள உம்மை முற்றும்மை, ஈற்றிலுள்ள உம்மை சில தீயவுஞ் செய்பாரென்பதை விளக்கிநிற்றலால் எதிர்மறையும்மை என்க. தீய பண்படியாகப்பிறந்த பலவின்படர்க்கைப்பெயர். (எக)

வியபாரவியல்பு.

பிறன்வரை நின்றாள் கடைத்தலைச் சேறல்
அறனன்றே யாயினு மாக - வெறுவரையும்
நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே
மெய்ந்நடுங்க வுள்ளநடுங்கு நோய்.

(இ-ள்.) பிறன் வரை - பிறனுடைய எல்லையில், நின்றாள் - நின்றவளுடைய, கடைத்தலை - தலைவாயிலில், சேறல் - (அவளை விரும்பிச்) செல்லுதல், அறனே அன்று - தருமமே அன்று; ஆயினும் ஆக - தருமம் ஆயினும் ஆகட்டும்; வெறுவரையும் - கணப்பொழுதும், நன்னலத்தது ஆயினும் - நல்ல இன்பத்தைத் தருவதாயிருப்பினும், கொள்க - (அப்பாரதாரகமனத்தை) அடையக்கடவாய்; (அக்காலத்தில் நீ படுகின்ற) மெய் நடுங்க - உடல் நடுங்கும்படி, உள் நடுங்கும் - உள்ளம் நடுங்குகின்ற, நோய் - நோய், நலம் அன்றே - இன்பம் அல்லவே, எ-று.

(வி-ரை.) பாரதாரகமனம் பாரத்திரிகமாதலால் அறமென்னும் இன்பனுடையானை நோக்கி, அது அறமே ஆயினும், நீ அக்காலத்தில் அநுபவிப்பது உடல் நடுங்கும்படி மனம் நடுங்குகின்ற நடுக்கமன்றோ? ஆதலால் அது ஒழிக என்பது கருத்து. பாரத்திரிகம் - பிறர்க்கு இன்பத்தைத் தருவதென்பது பொருள். இச்சொற்பொருளுணராதவர் இச்சொல்லைப் பரகேடெனப் பரிமேலழகருரையில் திருத்தினர். அன்றென்பதவீற்றிலுள்ள பிரிநிலை ஏகாரத்தை அறமென்பதனோடு கூட்டுக. சேறல் - தொழிற்பெயர்; செல் - பகுதி, தல் - புடைபெயர்ச்சி விகுதி, பகுதியீற்று லகரக்கேடும், விகுதி முதல் தகரம் றகரமாதலும் சந்தி, பகுதி முதல் எகரம் ஏகாரமாதல் நீட்டல் விகாரம். ஆயினுமென்ற உம்மைகள் எதிர்மறை உம்மைகள். வெறுவரையுமென்ற உம்மை முற்றுப்பொருளோடு இழிவுசிறப்புப்பொருளது. ஈற்றிலுள்ள ஏ இரக்கப்பொருளது. "நின்முகங்காணு மருந்தினேன்" என்பதுபோல நின்ற நடுங்கு நோய் என்னும் பெயரெச்சம் செயற்பெயர் கொண்டதென்க. (எஎ)

காமவியல்பு.

கருமஞ் சிதையாமே கல்வி கெடாமே
தருமமுந் தாழ்வு படாமே - பெரிதுந்தம்
இன்னலமுங் குன்றாமே யேரிளங் கொம்பன்னார்
நன்னலந் துய்த்த னலம்.

(இ-ள்.) தம் - தமது, கருமம் - உரிய தொழிலும், சிதையாமே - கெடாமல், கல்வி - கல்வியும், கெடாமே - மறவாமல், தருமமும் - (கொண்ட) தருமமும், தாழ்வுபடாமே - தளர்ச்சியடையாமல், பெரிதும் - மிகுதியும், இன் நலமும் - (இளமைமுதலிய) இனியதன்மைகளும், குன்றாமே - குறையாமல், ஏர் - அழகிய, இளங்கொம்பு - இளமையாகிய பூங்கொம்பை, அன்னார் - ஒத்த தம்மனைவியரது, நல் நலம் - நல்ல இன்பத்தை, துய்த்தல் - அநுபவித்தல், நலம் - அறமாம், எ-று.

(வி - ரை) பரதாரமனத்தில் உண்டாகும் நடுக்கம் தராததனால் 'நன்னலம்' என்றும், இளமை தேசுபலம் இவ்விரண்டையும் அடக்கிப் பொதுப்பட 'இன்னலம்' என்றும், தம்மின் இளையராயிருத்தல்வேண்டுமென்னுங் கருத்தால் 'இளங்கொம்பன்னார்' என்றுங் கூறினர். கருமம், கல்வி என்பவற்றினீற்றில் உம்மைகள் தொகுத்தலாய் நின்றன; உம்மைகள் நான்கில் முதலும்மை எதிரதுதழீஇயதும், ஈற்றும்மை இறந்ததுதழீஇயதும், மற்ற உம்மைகள் மேல்நின்றதை நோக்கின் இறந்ததுதழீஇய எச்சவும்மையும், கீழ் நின்றதை நோக்கின் எதிரதுதழீஇய எச்சவும்மையுமாய் நின்றன. பெரிதென்னுங் குறிப்பு வினையெச்சத்தை அடுத்து வந்த உம்மை முற்றும்மை; இவ்வினையெச்சம் குன்றாமே யென்னும் எதிர்மறை வினையெச்சங் கொண்டது. அன்னாளென்னாமல் அன்னாரென்றது கற்பாதிய உயர்வுபற்றிவந்த பால்வழுவமைதி; சாதிப்பன்மை யெனினும் பொருந்தும். (எஅ)

காமவியல்பு.

கொலைபஞ்சார் பொய்ந்நாணர் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார் - பழியோடு

பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்வார்
காமங் கதுவப்பட் டார்.

(இ-ள்.) காமம் - காமத்தினால், கதுவப்பட்டார் - பற்றப்பட்டவர்கள், கொலை-(பிறரைக்) கொல்லுதற்கு, அஞ்சார்-பயப்படார்; பொய் - பொய்சொல்லுதற்கு, நாணார் - கூசார்; மானமும்-மானத்தையும், ஓம்பார் - காத்துக்கொள்ளார்; களவொன்றோ-திருட்டையும், ஏனையவும் - மற்ற தீச்செயல்களையும், செய்வார் - செய்வார்கள்; (தமது செயல்களில்) இஃது - இச்செயல், பழியொடு - பழியுடனே, பாவம் - பாவத்தைத்தருவது, என்னார் - என்று நினையார்; (இவை அல்லாமல்) பிறிது என் செய்வார் - வேறு எதைச் செய்வார்கள், எ-று.

(வி-ரை.) கொலையஞ்சாமை, பொய்நாணாமை, மானமோம்பாமை, களவாடல், மற்றவையுஞ் செய்தல் ஆகிய இவற்றுள் இது பழியொடு பாவத்தைத் தருவதென நினையார்களென்பது கருத்து. ஏனையவுஞ் செய்வார் என மேற்கூறியவை ஒழிந்த தீச்செயல்களையும் கூறி முடித்தமையின், பிறிது மற்றென் செய்யாரென்னும் பாடம் கூறியதுகூறலாமாதலால், பிறிது மற்றென்செய்வாரென்னும் பாடமே கொள்க. களவு-தொழிற்பெயர்; கள்-பகுதி, அ-சாரியை, வு-புடைபெயர்ச்சி விகுதி, இப்பகுதியடியாக, கட்டான், கட்டு, கட்ட என இறந்தகால வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் வரும். இஃதுணராதவர் கள்ளினான், கள்ளி, கள்ளின என வருமெனக் குழறுவார். பிறிது என் செய்வாரென்றது இவற்றின் வேறாகிய எந்த நன்மையுஞ் செய்யவறியாரென்றபடி. ஒன்றோ என்பது எண்ணிடைச்சொல். களவு ஒன்றோ என்பதற்குத் திருட்டு ஒன்று மாத்திரமோ என்று பொருள் கூறினும் பொருந்தும். ஓ எதிர்மறை. மற்று அசை. (எக)

காமவியல்பு.

திருவினு நல்லாண் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பார் - நறுவிய

வாயின வேனு முமிழ்ந்து கடுந்தின்னும்
தீய விலங்கிற் சிலர்.

(இ-ள்.) நறுவிய - இனிய பொருள்கள், வாயின எனும் - வாயிலுள்ளன ஆனாலும், உமிழ்ந்து-(அவற்றை) உமிழ்ந்து, கடு - கசப்பான பொருள்களை, தின்னும் - தின்னுகிற, தீய - கொடிய, விலங்கின் - மிருகங்களைப்போல, சிலர் - சில தீயோர், மனைக்கிழத்தி - இல்லறத்துக்குரியாளாகிய மனைவி, திருவினும் - திருமகளைப் பார்க்கினும், நல்லாள் எனும் - (கற்பினும் அழகினும்) சிறந்தவளாயிருப்பினும், பிறர் மனைக்கே-பிறருடைய மனைவியரிடத்தேயே, பீடு அழிந்து நிற்பார் - பெருமைக்குணம் அழிந்து நிற்பார்கள், எ - று.

(வி-ரை.) திரு - காரியவாகுபெயர்; பண்பாகுபெயருமாம். கடு - பண்பாகுபெயர். மனை - இடவாகுபெயர். விலங்கு - முதனிலைத்தொழிலாகுபெயர்; இது தொழிலுவமை. கிழத்தி-பண்படியாகப்பிறந்த பெண்பாற்பெயர். கிழமை - பகுதி, மகர ஐகாரக்கேடும், தகரத்தோற்றமுஞ் சந்தி, த்-பெயரிடைநிலை, இ-பெண்பால் விகுதி. நறுவிய - பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர். நறுமை-பகுதி. இ-சாரியை, அ-பலவின் படர்க்கை விகுதி, மைக்கேடும் வகர யகரத்தோற்றமுஞ் சந்தி. நல்லாள் - பண்படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று. வாயின-இடமடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று. என்-எனின் என்பதன் மரூஉ. குவ்வுருபு ஏழாவதனிடப்பொருளது. ஏ - பிரிநிலை. உம்மைகள் உயர்வுசிறப்பு. ஐந்தனுருபிரண்டில் முன்னது எல்லைப்பொருளது; பின்னது ஒப்புப்பொருளது. (௮௦)

மக்கட்பேறு.

கற்புடைத் தன்பு முடித்தானாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு - மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு.

(இ - ள்.) கற்பு - கற்பாகிய உடையை, உடுத்து - தரித்து, அன்பு - அன்பாகிய மலரை, முடித்து - கொண்டையில் செருகி, நாண் - நாணமாகிய சந்தனத்தை. மெய் பூசி - உடம்பில்பூசி, நற்குணம் - நற்குணமும், நற்செய்கை நற்செய்கையுமாகிய ஆபரணங்களை, பூண்டாட்கு - பூண்டவளுக்கு, மக்கட்பேறு என்பது - பிள்ளைப்பெறுதலெனப்படுவதாகிய, ஓர் செல்வமும் - ஒப்பற்றசெல்வமும், உண்டாயின் - உண்டாயிருந்தால், கொண்டாற்கு - கணவனுக்கு, செய் தவம் - செய்ததவப்பயன், வேறு இல் அன்றே - வேறில்லையே ஆம், எ - று.

(வி - ரை.) இத்தன்மையள் ஒருவனுக்கு மனைவியாகக் கிடைத்தல் அவன் செய்த தவப்பயனென்பது கருத்து. கொண்டான் உலக வழக்கு. உடுத்து, முடித்து, பூசி, பூண்டாள் என்னும் வினைகளால் கற்புமுதலியவை இன்னபொருளாக உருவகஞ் செய்யப்பட்டன என விளங்குகின்றமையால் கற்பு, அன்பு, நாண், நற்குண நற்செய்கை என வாளாகூறினர். மக்கட்பேறு - இரண்டாம்வேற்றுமைத் தொகையிலைப் புணர்ச்சியாதலாலும், நிலைமொழி உயர்திணைப்பெயராதலாலும் நவ் - உயி - கு - க - இப்படி நிலைமொழியிற்றுமாகரம் இயல்பாகாமல், உரு - கு - கக இப்படி இயல்பின்விகாரமாயிற்று. பேறு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். அன்றே தேற்றப்பொருள்தரும் இடைச்சொல். பயனாகிய காரியத்தைத் தவமாகிய காரணமாக உபசரித்தார். செல்வமுமென்ற உம்மை இறந்ததுதழீஇயஎச்சவும்மை உயர்வுசிறப்புப்பொருளது. கற்புமுதலியனபோல இவள் வசத்ததல்லாமையால் செல்வமு முண்டாயினென்றார். (அக)

கற்பின்மகளிர்செயல்.

எங்கெழிலென் ஞாயி றெமக்கென் றமர்மரீஇ
காந்தையர் கண்கவர் நோக்கத்தான் - வாய்ந்த
நயனுடை யின்சொல்லான் நேமிலெனினு மாதர்க்
கயலார்மேடி லாகு மனம்.

(இ - ள்.) கேள் - கணவன், எய்த்து எழில் - சிறந்த அழகு, மிக்கான் - மிகுந்தவன், இளையான் - இளமைப்பருவமுடையவன், இசை வல்லான் - இராகம் வல்லவன், காந்தையர் - பெண்களுடைய, கண் கவர் - கண்களைப் பிடிக்கத்தக்க, நோக்கத்தான் - பார்வையையுடையவன், வாய்ந்த - அமைந்த, நயன் உடைய - கேள்வித்திறமுடைய, இன் சொல்லான் எனினும் - இனிய சொல்லையுடையவனாயிருப்பினும், மாதர்க்கு - பெண்களுக்கு, அயலார்மேல் - அந்நிய புருஷர்மேல், மனம் ஆகும் - மனம் செல்லும், எ-று.

(வி-ரை.) இது பெரும்பான்மைபற்றிக் கூறியது. சுமக்கின்ற அழகென்னும் பலபொருளுடையதாதலால் எய்த்தெழிலென்பது சிறந்த அழகுக்காயிற்று. எழில்மிக்கான், இசைவல்லான் இரண்டும் வினைவகையமைதி. உடையவென்னும் ஈறுதொக்கதலாய் நின்ற குறிப்புப் பெயரெச்சத்திற்குச் செயப்படுபொருளாய் நின்ற நயனென்பது வாய்ந்தவென்னும் இறந்தகாலப் பெயரெச்சத்துக்கு வினைமுதல். கேள் - பண்பாகுபெயர். மாதர் - பண்பாகுபெயராகிய மாது பலர்பால் விகுதியாகிய அர் விகுதிபெற்று நின்றபெயர். மாது-குற்றியலுகர வீற்று மொழியாதலால் சுரும்பு சுரும்பர், முத்து முத்தர் என்பனபோல அர் போலிபெற்றும், அதன்மேல் ஆள் விகுதி பெற்றும் மாதராளெனப் பெண்பாலொருமையை உணர்த்தலும் உண்டு. (அஉ)

கற்பின்மகளிர்செயல்.

கற்பின் மகளி ரலவிற் றுணவுகொளும்
பொற்றொடி நல்லார் நனிநல்லார் - மற்றுத்தம்
கேள்வற்கு மேதிலற்குந் தங்கட்குந் தங்கிளைஞர்
யாவர்க்குங் கேடுசூ ழார்.

(இ - ள்.) தம் - தம்முடைய, மற்று கேள்வற்கும் - நிலையில்லாத நாயகனுக்கும், ஏதிலற்கும் - (அவனில்லாதபோது வரும்) அந்நியனுக்

ரும், தங்கட்கும் - தங்களுக்கும், தம் கிளைஞர் யாவர்க்கும் - தம்முறவினை எல்லார்க்கும், கேடு - கெடுதியை, சூழார் - ஆலோசியார்; (ஆதலால்) கற்பு இல் - கற்பில்லாத, மகளிர் - குலஸ்திரீயைப்பார்க்கிலும், நலம் - இன்பத்தை, விற்று - விலைப்படுத்தி, உணவு கொள்ளும் - அநுபவப்பொருள்களைப் பெறுகின்ற, பொன் தொடி - பொன்னாற் செய்யப்பட்ட வளையலணிந்த, நல்லார் - வேசியர், நனி நல்லர் - மிகுதியும் உத்தமியர், எ-று.

(வி - ரை.) குலப்பெண்ணின் நாயகன்போலே நிலையுடையானாகா. இவ்வளவெனப் பொருள் வரையறுத்துக் கொடுப்பவனாதலால் மற்றைக்கேள்வனென்பதில் மற்றுப் பிறிதென்னும் பொருளது. கற்பிறத்தல் வேசிக்குரிய செயலாதல்போலக் குலப்பெண்ணுக்காகாமையால், அச்செயல் கேள்வன் முதலிய நால்வர்க்கும் நிந்தையைத் தருதல்பற்றி 'வேசியர் நனி நல்லர்' என்றார். உணவு-தொழிலாகுபெயர்; அது உண்டி, ஆடை, அணி முதலியவற்றுக்கு இங்காயிற்று. காமத்தால் கற்பிறத்தலை ஆலோசித்துச் செய்வதாகக்கொண்டு சூழாரெனக் கூறினமையால் அது இலக்கணை. இப்படி அன்றிச் சூழ்விக்காரென்றும் பிறவினை விகுதி தொகுக்கப்பட்டதெனக்கொண்டு, சூழ்ந்துகொள்ளச்செய்யார், அதாவது உண்டாக்காரெனப் பொருள் கூறினும் பொருந்தும்; சூழ்தல் - ஆராய்தல்; சுற்றிக்கொள்ளல். பொற்றொடி நல்லார் நனிநல்லாரென்பதற்கு வேசிமை உணவின்பொருட்டுக் கற்புக் கெடுதலாகிய இழிவு கருதிப் பொற்றொடி என ஒருமையால் வாளா கூறி, கேள்வன் முதலிய நால்வர்க்கும் கேடு சூழாமையாகிய சிறப்புக் கருதி நல்லாரென்றும், அதுவும் நிரம்பாமல் நனிநல்லரென்றும் பன்மையாற் கூறினதாகப் பொருள் கொள்ளலுமாம். பொற்றொடி-மூன்றாம்வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்; பண்புத்தொகைப்புறத்துப் பிறந்ததெனினுமாம். தொடி-தொழிலடியாகப் பிறந்த பெயர்ச்சொல்; தொடு-பகுதி, இ-செயப்படுபொருள்மை விகுதி, உகரக்கேடு சந்தி. (அக)

கற்பின்மகளிர்செயல்.

முறையுங் குடிமையும் பான்மையு நோக்கார்
நிறையு நெடுநாணும் பேணார் - பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக் குண்டே பெரும்பாவம்
கற்பின் மகளிர் பிறப்பு.

(இ-ள்.) முறையும் - (ஒருவன் தமக்காகும்) முறைமையையும், குடிமையும் - (தாம் பிறந்த) குடிப்பெருமையையும், பான்மையும் - (சாதியினது) வகுப்பையும், நோக்கார் - எண்ணார்; நிறையும் - (மனம் அந்நியர்பால் செல்லாமல்) நிறுத்துங் குணத்தையும், நெடு நாணும் - மிக்க நாணத்தையும், பேணார் - விரும்பார்; பிறிது ஒரு பெற்றிமையும் - வேறொரு நன்மையும், பேதைமைக்கு - (அவருடைய) அறியாமைக்கு, உண்டே - உண்டோ; (ஆதலால்) கற்பு இல் - கற்பில்லாத, மகளிர் பிறப்பு - பெண்களுடைய சன்மம், பெரும்பாவம் - மிகுந்த பாவத்தாலானதாம், எ-று.

(வி-ரை.) முறை முதலியன நோக்காமை முதலானவற்றிற்கெல்லாம் அவருடைய பேதைமையே காரணமாதலால் அதன்மேலேற்றிப் 'பிறிதொரு பெற்றிமையும் பேதைமைக்குண்டே' என்றார். ஏ - எதிர்மறை. பிறப்பெனுங்காரியத்தைப் பாவமென்னுங்காரணமாக உபசரித்தார். நிறை-தொழிலடியாகப் பிறந்தபெயர்; நிறு-பகுதி, ஐ-வினைமுதற் பொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி; வினைமுதல் நிறுத்துந்தன்மை, நிறு, நில்-தன்வினைப்பகுதி, று-பிறவினைபடுத்தும்விகுதி, பகுதியீற்று லகரக்கேடு சந்தி. நாண்-முதனிலைத்தொழிற்பெயர். பெற்றிமை: பெறு-பகுதி, இ-செயப்படுபொருண்மை விகுதி. முற்றியலுகரமாதலால் பகுதி ஒற்றிரட்டியது விரித்தல்விகாரம், உகரக்கேடு சந்தி, பொருளுக்கு இயற்கையாயமைந்த தன்மையைப் பெறப்பட்டதென்றது இலக்கணை; மை-பகுதிப்பொருள் விகுதி. ஆக்கமென்னும் பொருளதாகிய பெற்றென்பதைப் பகுதியாகக் கொண்டால், அதுவே முதனிலைதிரிந்த தொழி

லாகுபெயராய் ஆக்கத்தை உணர்த்தலால் குற்றமாம். மகளிர்: மக - பகுதி, ள்-விகுதி பெற்ற மகள்-பகுதி, இர்-பல்லோர் படர்க்கை விகுதி.

துறந்தோரியல்பு.

பெண்மை வியவார் பெயரு மெடுத்தோதார்
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார் - பண்ணொடு
பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
வீடில் புலப்பகையி னார்.

(ப - ரை.) வீடு இல் - (பிறர்க்குக்) கெடுதலில்லாத, புலப்பகையினார் - விடயங்கட்குப் பகையாகிய துறவிகள், பெண்மை - பெண் தன்மையை, வியவார் - கண்டுமதிக்கார்; பெயரும் - பெண்ணென்னும் பெயரையும், எடுத்து ஓதார் - எடுத்துச் சொல்லார்; நெஞ்சு உறைப்ப - மனதில் பதியும்படி, கண்ணொடு - கண்களால், நோக்குறார் - பாரார்; பண்ணொடு - இசையுடனே, பாடல் - பாடுதலை, செவிமடார் - காதாற் கேளார்; பண்பு அல்ல - (மற்ற) நல்லதன்மையன ஆகாதனவற்றை, பாராட்டார் - கவனியார், எ-று.

(வி - ரை.) கண்ணொடு என்னும் மூன்றனுருபு கருவிப்பொருளில் வந்தது. பாடலைச் செவிமடாதபோது பண்ணும் செவிமடாமல் நிற்றலால் பண்ணொடு என்னும் மூன்றனுருபு உடனிகழ்ச்சிப்பொருளது. மடார்-எதிர்மறைப் பல்லோர்படர்க்கை வினைமுற்று; மடு-பகுதி, ஆ எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்து மொருபகுதி, ஆர்-பல்லோர் படர்க்கைவிகுதி. விகுதி ஆகாரக்கேடு முதற்குறை. வீடு - முதனிலைத் தொழிற்பெயர்; வீடுதல்-சாதல்; விடு என்னும் முதனிலை வீடு எனத் திரிந்ததெனக்கொண்டு, வீடில் என்பதற்கு விடுதலில்லாத என உரைப்பினும் பொருந்தும். விடயமாவன-சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தமென்பன. இவை மனத்தை முத்திநெறியில் செல்லவிடாமல் தம்மை அநுபவிக்கும்பொருட்டு, துன்பத்தாலும், பாவத்தாலும் வரும் பொருள்களின்மேல் செல்லவிடுதலால் இவற்றைப் 'பகை' என்

ளூர். புலப்பகைவிளூர்: நான்காவதாயினும், ஆருவதாயினும் தொகையாய் நின்ற வேற்றுமைப்புணர்ச்சி என்க; விரிந்தால் புலத்துக்குப்பகைவிளூர், புலத்தினது பகைவிளூர் என விரியும். வருமொழி குறிப்புவினைப் பெயர். (அ௦)

ஞாநிகளியல்பு.

துயிற்சுவையுந் தூநல்லார் தோட்சுவையு மெல்லாம்
அயிற்சுவையி னாகுவவென் றெண்ணி-அயிற்சுவையும்
பித்துணாக் கொள்பமோற் கொள்ப பிறர்சிலர்போல்
மொத்துணா மொய்ம்பி னவர்.

(இ-ள்.) பிறர் சிலர்போல-பிறராகிய சிறியர்போல, மொத்துண்ணூத-(பிறவித்துன்பத்தில்) அடிபடாத, மொய்ம்பினவர் - (தவத்தின்) வல்லமையுடையார், துயில் சுவையும்-நித்திரையின்பமும், தூநல்லார்-குற்றமில்லாத மாதர்களுடைய, தோள் சுவையும் - தோள்களைத்தழுவும் இன்பமும், எல்லாம் - மற்றயாவும், அயிற்சுவையின் - (சோறு முதலிய வற்றை) உண்ணுதலின்பத்தால், ஆகுவ என்று-உண்டாவனவென்று, எண்ணி-கருதி, அயிற்சுவையும்-அவ்வுண்ணுத லின்பத்தையும், பித்து-பித்தர்கள், உணா - உண்டியை, கொள்பபோல - கொள்வார்போல, கொள்ப - மிகச் சிறிதுகொள்வார்கள், எ-று.

(வி - ரை.) துயிற்சுவை, தோட்சுவை, அயிற்சுவை என்பன மூன்றுவதன் கருவிப்பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்கள். துயில், அயில்-முதனிலைத்தொழிற்பெயர்கள். விகுதி பெறின் துயிறல், துயிலுதல், துயிலல், துயில்கை, துயில்வு எனவரும். அயிலென்பதும் இவ்வாறே வரும். பித்து - பண்பாகுபெயர். உணா - தொழிலாகுபெயர். இது உணவு என்பதன் விகாரமாதலால் மரூஉ என்க. மொத்துண்ணூத-இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். உண்ணல் - அடைதல்; இது இலக்கணை. உணா ணகரவொற்றும், தகர எழுத்துப்பேறும், பெயரெச்சத் தீறும் தொகுத்தல். இதனைச்

செயப்பாட்டுவினையாகச் சொன்னின் கொலையுண்டபுலியென்னும் விகுதிபெற்ற தொழிற்பெயராகும், ஓடியுண்டவினை, சுடவுண்டநெல், அம்பு ஓடுண்டயாக்கை எனச் செயப்படுபொருள் குன்றிய முதனிலைத் தொழிற்பெயராயும், உண் என்பது வருதலால் அது முழுமுடமை. ()

ஞானிகளியல்பு.

அன்பொ டருளுடைய ரேனுமுயிர் நிலைமற்
றென்பியக்கங் கண்டும் புறந்தரார் - புன்புலாற்
பொய்க்குடி லோம்புவரோ போதத்தாற் றாம்வேய்ந்த
புக்கில் குடிபுகுது வார்.

(இ - ள்.) போதத்தால் - ஞானமாகிய மேற்பரப்பால், தாம் வேய்ந்த - தாம் கூரைவேய்ந்த, புக்கில் - மோட்சமாகிய வீட்டில், குடி புகுதுவார் - குடிபோக என்றுவோர், புல் புலால்-இழிவாகிய ஊனால் வேய்ந்த, பொய்க் குடில் - நிலையில்லாததாகிய உடலென்னுங் குடிசையை, ஓம்புவரோ - காப்பரோ காக்கார்; (ஆதலால்) அன்பொடு - அன்புடனே, அருள் - இருபையை, உடையர் எனும் - உடையாராயினும், என்பு - எலும்பு, இயக்கம் - மேலெழுந்து தோன்றல், கண்டும் - உண்டாகியும், உயிர்நிலை - தம்முடம்பை, புறந்தரார் - (அன்பும் அருளும் வைத்துக்) காப்பாற்றார், எ-று.

(வி - ரை.) முத்தியுலகை அடையவிரைகுவோர் பிறவுயிர்களின் மேல் அன்பும் அருளுமுடையாராயினும் தம்முடம்பில் உடையரல்லரெனவே, அவ்விதமுநிலைக் குறித்துக் கவலையிலரென்பது கருத்து. அன்பு - தம்மோடு சம்பந்தமுடைய உயிர்களின்மேல்வைக்கும் பரிவு, அருள்-சம்பந்தத்தாலல்லாமல் இயல்பாக எல்லாவுயிர்கள்மேலும் வைக்கும் இரக்கம். உயிர்நிலை - ஆறும் வேற்றுமைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர், விரிந்தால் உயிரினது நிலையையுடையது எனவிரியும். என்பியக்கம்-வினைமுதற்பொருளில் வந்த ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். இயக்கம்-தொழிற்பெயர்;

பகுதி இயங்கு; இது மென்றொடர்க் குற்றுகரமாதலால் அம் விகுதிப் புணர்ச்சியில் இயக்கென விகார மடைந்தது. புறந்தாரார்-பல்லோர் படர்க்கை எதிர்மறை வினைமுற்று; புறந்தா - பகுதி, (ஒருசொல்லின் தன்மையது), ரு-விரித்தல் விகாரம், ஆ-எதிர்மறைவிகுதி, பகுதியீறு குறுகியது குறுக்கல் விகாரம், உகரக்கேடு சந்தி, அனைத்தும் ஒருபகுதி, ஆர் - பல்லோர்படர்க்கை விகுதி, விகுதி ஆகாரக்கேடு முதற்குறை. புறம் - முதுகை, தா - கொடு என்பது பொருளாதலால் புறந்தா இலக்கணையால் காப்பாற்றென்னும் பொருள்பட்டது. புக்கில் - ஒருசொல்லின் தன்மைதாகிய பெயர்; புக்கு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; பொருள் புகுதலையுடைய விடு என்பது. புகுதுவார் என்பதில் து-சாரியை; இது புகுதும், புகுத எனப் பெயரெச்ச வினையெச்சங்களிலும் வரும். (அஎ)

இணைவிழைச்சகற்றல்.

சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப - முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும் பியில்.

(இ-ள்.) சிறு இன்பம் - சிற்றின்பமானது, சில் நீரது ஆயினும் - அற்பசுபாவமுடையதாயினும், அஃது உற்றார் - அச் சிற்றின்பத்தை யடைந்தவர்கள், மற்று இன்பம் யாவையும் - மற்ற இன்பங்களையெல்லாம், கை விடுப - கைவிடுவார்கள்; (அங்ஙனமாக) பேர் இன்பம் - பேரின்பமாகிய, மா கடல் - பெரியகடலில், முற்றும் ஆடுவார் - முழுவதும் முழுகுவோர், பார் இன்பம் - உலக இன்பமாகிய, பாழ் கும்பியில் - பாழ்நரகத்தில், வீழ்பவோ - வீழ்வார்களோ, எ-று.

(வி - ரை.) சிற்றின்பம் - ஒருசொல்லின் தன்மையது. உம்மை மூன்றில் முன்னது இழிவுசிறப்பு, பின்னைய விரண்டும் முற்று. மற்று-பிறிதென்னும் பொருளது. கரு காவென நின்றாற்போலப் பரு பாவென

நின்ற பண்புப்பெயர் பூமிக்கு ஆதலால் பண்பாகுபெயர்; பா என்றும் முதனிலை முதல் நீண்டு, உகரங் கெட்டுத் தொழிலாகுபெயராயிற் றென்பாரொருவர்; அவ்வாறு முதனிலை தன்னிலே விகாரப்படல் ஒரு வழக்கினும் இன்மையால் பேதைமையென்க. பாழ்ங்கும்பி - பண்புத்தொகைநிலைத்தொடர்; விரிந்தால் பாழாகிய கும்பி என விரியும்; பாழ் பய னின்மைப்பொருளதாகிய பண்புப் பெயர்ச்சொல்; பயன்படாத புத்தகத்தை வாங்கினவனைப் பார்த்து, ஒருவன் இவன் பணத்தைப் பாழாக்கினானென்றால், பணத்தைப் பயனிலதாக்கினா னென்பதன்றிப் பழமையாக்கினா னென்பதன் றாதலால் இதுவும் அவரது மடமையே யாம். (அஅ)

இணைவிழைச்சகற்றல்.

எவ்வினைய ரேனு மிணைவிழைச்சொன் றில்லெனின்
தெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம் - அவ்வினை
காத்த லிலரே லெனைத்துணைய ராயினும்
தூர்த்தருந் தூர்ப்பா ரலர்.

(இ-ள்.) எவ்வினையர் ஏனும் - (துறவிகள்) எந்தத் தீத்தொழிலை யுடையராயினும், இணை - தழுவுகின்ற, விழைச்சு - புணர்ச்சியாகிய, ஒன்று இல் எனின் - ஒரு தீத்தொழில் இல்லாரானால், தெவ்வும்-பகைவரும், திசை நோக்கி - (தாமிருக்கும்) திக்குநோக்கி, கை தொழும் - கைகூப்பித்தொழுவர்; அவ்வினை - அத்தீச்செயலை, காத்தல் - தடுத்தல், இலர் ஏல் - இல்லாரானால், எனைத்துணையர் ஆயினும் - எவ்வளவு பெருமையுடையாரானாலும், தூர்த்தரும் - காமுகரும், அலர் - பழிச்சொற்களால், தூர்ப்பார் - (பிறர்காதை) நிரப்புவார், எ - று.

(வி-ரை.) எவ்வினையரேனும் என்னும் உம்மை எத்தீத்தொழிலும் செய்யாதவரா யிருத்தல் வேண்டும் என்னும் பொருள்தருதலால் எதிர்மறையும்மை. இணைவிழைச்சு - வினைத்தொகை நிலைத்தொடர்; இணை என்பதை முதனிலைத் தொழிற்பெய ரெனக்கொண்டு ஆறும்

வேற்றுமைத் தொகைநிலைத்தொடரெனினுமொக்கும்; பொருள் தழுவுதலினது விருப்பமென்பது. தெவ் - பண்பாகுபெயர்; இது வருமொழிப் புணர்ச்சியில் உகரச்சாரியை பெறும். இம்மொழியை அடுத்த உம்மையும், ஆயினுமென்று மும்மையும் உயர்வுசிறப்பு. எல்-எனிலென்பதன் மரூஉ. எனை-எத்துணை என்பதன்மரூஉ. தூர்த்தரும் இழிவுசிறப்பு; புகழ்போலன்றித் தான் சிறிதாயினும் எங்கும் விரைவில் பாவுதலால் பழிமொழிக்கு அலர் தொழிலாகுபெயராயிற்று. (௯௧)

முருந்தவநோக்கல்.

பாபரப்பி னோடே பலபல செய்தாங்
கிரவுபகல் பாழுக் கிறைப்ப - ஒருவாற்றான்
நல்லாற்றி னூக்கிற் பதறிக் குலைகுலைப
எவ்வாற்றா னுய்வா ரிவர்.

(இ-ள்.) பாபரப்பினோடே - (பலர்) மிக்கவிரைவுடனே (சிறிதுஞ் சோம்பலில்லாமல்), பலபல செய்து - மிகப் பல காரியங்களைச் செய்யாநின்று, இரவு பகல்-இராவையும் பகலையும், பாழுக்கு - அவமாகிய காரியத்துக்கு, இறைப்ப - கழிப்பார்கள்; ஒரு ஆற்றான் - (பெரியவர்) ஒருவிதத்தால், நல் ஆற்றின் - நல்வழியில், ஊக்கின் - உற்சாகப்படுத்திச் செலுத்தினால், பதறி - துடித்து, குலைகுலைப - நடுநடுங்குவார்; இவர் - இத்தன்மையோர், எவ்வாற்றான் - எவ்விதத்தால், உய்வார் - (பிறவித்துன்பத்தினின்றும்) தப்புவார், எ - று.

(வி - ரை.) பாபரப்பு, குலைகுலைப என்பன இரண்டும் இரட்டைக்கிளவி; பின்மொழிகள் பிரிந்திசைத்தாலும், முன்மொழிகள் பிரிந்திசைக்காமையால் அவை இரட்டைக்கிளவி எனப்படும். கிளவி-சொல். ஓடு-விசேடணப்பொருளது. செய்து - செய்யாநின்றென்னும் நிகழ்கால வினையெச்சத்தின் திரிபு. பாழ் - பண்பாகுபெயராய்க் காரியத்தை உணர்த்திற்று. இறைப்ப-பல்லோர்படர்க்கை எதிர்காலவினைமுற்று; இறை-பகுதி, ப்-சந்தி, ப-பல்லோர் படர்க்கை எதிர்காலவிகுதி;

முக்காலத்திலும் ஒத்து நடக்கும் பொருளை எதிர்காலத்தால் கூறுதல் தமிழர் மதம்; அவ்வினைக்கண் வருவதாகலால் ப-இடைநிலை, அ-பல வின் படர்க்கை விகுதியென்க; அவ் சாரியை பெற்று இறைப்பன எனவும் வரும். நல்லாற்றி னூக்கின் என்பதனை நல்லாற்றில் நூக்கின் எனப் பிரித்தால், நல்வழியில் செலுத்தினால் எனப் பொருளுரைக்க. நூக்கல்-தள்ளல். அடுக்கு மிகுதிப்பொருளது. (௩௦)

முதுதவநோக்கல்.

இளைய முதுதவ மாற்றுது நோற்றிறன்
றுளைவின்று கண்பாடு மூழே - விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேற் காண்பாரும்
தாழாமே நோற்பார் தவம்.

(இ-ள்.) விளிவு - சாதல், இன்று - இல்லாமல், வாழ்நாள் - தம் ஆயுள், வரம்பு - எல்லையை, உடைமை - உடைத்தாயிருப்பதை, காண்பரேல் - ஒருவர் அறியமாட்டுவாராகில், இளையம் - நாம் இளமைப் பருவத்தையுடையோம், முதுமை - முதுமைப்பருவத்தில், நோற்று - (பசிமுதலானவற்றைப்) பொறுத்து, தவம் - தவத்தை, ஆற்றுதும் என்று - செய்வோமென்று, உளைவு இன்று - வருத்தமில்லாமல், கண்பாடும்-தூங்கிக்கிடப்பதும், ஊழே-முறைமையே, காண்பாரும்-(வாழ்நாள் வரம்புடைமையை) அறியவல்ல முனிவரும், தாழாமே - தாமதியாமல், தவம் நோற்பார் - தவம் செய்வர், எ - று.

(வி-ரை.) உடைமை என்னுங் குறிப்புத் தொழிற்பெயருக்கு வினைமுதல் வாழ்நாள். முதுமை என்பதில் மை யீறுதொகுத்தலாய் நின்றது. முதுதவமென்பது செய்வோரது முதுமையை வீரக்கழலெ ன்பதுபோல அவரால் செய்யப்படும் தவத்தின்மேலேற்றிக் கூறிய மரபுவழுவமைதி யெனினுமொக்கும். இளையம், ஆற்றுதும் இரண் டும் ஒருவர் தம்மைப்பற்றித் தம்மில் கருதும்போதும், பேசும்போ தும் தம்மைத் தனித்தன்மைப் பன்மையாக வைத்தல் இயல்பாதலால்

வழாநிலையே ஆம்; முன்னது குறிப்புவினைமுற்று; பின்னது எதிர்காலத் தெரிநிலை வினைமுற்று. நோற்று -இறந்தகால வினையெச்சம்; நோன்-பகுதி, ற்-இறந்தகால இடைநிலை, உ-வினையெச்சவிகுதி, னகரம் றகரமானது சந்தி, எதிர்மறையில் நோனாது, நோனமல், நோனாமே எனவரும். நோற்பார்-பல்லோர்படர்க்கை எதிர்காலவினைமுற்று; நோல்-பகுதி, ப்-எதிர்கால இடைநிலை, ஆர்-பல்லோர்படர்க்கை விகுதி, லகரம் றகரமானது சந்தி. எதிர்மறையில் நோலார் எனவரும். தவநோற்பார் என்பது போர்பொருதா ரென்பதுபோல வந்தது. (கக)

தவத்தியல்பு.

நல்லவை செய்யத் தொடங்கினு நோனாமே
அல்லன வல்லவற்றிற் கொண்டுய்க்கும் - எல்லி
வியனெறிச் செல்வாரை யாறலைத் துண்பார்
செலவு பிழைத்துய்ப்ப போல்.

(இ-ள்.) ஆறலைத்து - வழிபறித்து, உண்பார் - அப்பொருளால் சீவனஞ் செய்யுங்கள்ளர்கள், எல்லி - இரவில், வியன்நெறி - பெருவழியில், செல்வாரை - போகுகின்றவர்களை, செலவு-(கருதிய இடத்துக்குக்) போதலகையை, பிழைத்து - தப்புவித்து, உய்ப்பபோல-செலுத்துவார்போல, நல்லவை - நற்காரியங்களை, செய்யத்தொடங்கினும் - (ஒருவர்) செய்யத்தொடங்கினாலும், அல்லன-தீயவழிகள், நோனாமே - பொறுக்காமல், அல்லவற்றில் - தீய கருமங்களில், கொண்டு - (அவரைத்) தம் வசப்படுத்தி, உய்க்கும் - செலுத்தும், எ - று.

(வி-ரை.) தவம்முன்செய்த தவத்தால் கைகூடுமென்பது கருத்து. உம்மை செய்யத்தொடங்குதலின் அருமை குறித்து நின்றமையின் உயர்வுசிறப்பு. வியனெறி என்பதை வியல் நெறி எனப்பிரித்து, விரிவாகிய வழி என உரைப்பினும் பொருந்தும். வியனென்பதில் மகரத்துக்கு னகரம்போலி. பிழைப்பித்து-பிறவினை இறந்தகால வினையெச்சம்; இதில் பிவ்விகுதி தொகுத்தலாய்நின்றது. நோனாமையாவது

போகூழ்கள் வாய்க்குங்காலத்தில் தாமறியாமை. அறலைத்து - இறந்தகாலவினையெச்சம்; அறலை - பகுதி (ஒரு சொல்லின் தன்மையது), த்-சந்தி, த்-இறந்தகால இடைநிலை, உ-வினையெச்சவிகுதி. செலவு-தொழிற்பெயர்; செல்-பகுதி, அ-சாரியை, வு-புடைபெயர்ச்சி விகுதி. (௬௨.)

தவத்தியல்பு.

நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே - கஞ்சுகம்
எப்புலமுங் காவாமே மெய்ப்புலங் காக்குமற்
றிப்புலமுங் காவா திது.

(பொ-ள்.) கஞ்சுகம்-சட்டை, எப்புலமும் - எல்லாப்புலன்களையுங், காவாமே - காக்காமல், மெய்ப்புலம் - உடம்பாகிய புலனை, காக்கும் - பாதுகாக்கும்; இது - தவவேடப்போர்வை, இப்புலமும் - மெய்ப்புலனையும், மற்றுக்காவாது - காக்கவலியிலது; (ஆதலால்) நெஞ்சு - மனம், புறம்பு ஆக - புறத்தில் செல்ல, துறந்தார் - துறந்தவர்களுடைய, தவப்போர்வை-தவவேடமாகிய போர்வை, கஞ்சுகம் உம் அன்று - சட்டையுமல்ல; பிறிது ஒன்றே - வேறாகிய ஒருபொருளே, எ - று.

(வி-ரை.) தவம்-காரணவாகுபெயர். நெஞ்சு புறம்பாக என்றது மாதரிடத்தே மனஞ் செல்லலே. முயற்சியுடையோன் அதற்குத் தகுதியாகக் கஞ்சுகம்பூண்டு செல்லல்போல, இவருடைய தவவேடமும் பிறருடைய மாதரை விரும்பி யடைதற்குரியதாதலின் அதனைப் 'போர்வை' என்றுங், கஞ்சுகம்போல உடலைக் குளிர்முதலியவற்றால் வருத்தாமல் காக்கமாட்டாமையால் 'பிறிதொன்று' என்றுங் கூறினர். மற்று - வினைமாற்றுப்பொருளது. போர்வை - தொழிலடியாகப்பிறந்த பெயர்; போர்-பகுதி, வ்-உடம்படு மெய்யல்லாத மெய்யாகிய சந்தி, ஐ-செயப்படுபொருண்மைவிகுதி; தொழிலாகுபெயரெனக் கொள்ளின் ஐ-புடைபெயர்ச்சி விகுதி என்க. போர்வை கஞ்சுகம் அன்று பால்வழுவமைதி. ஏ-பிரிநிலை. கீழே இப்புலமென்றமையால் எல்லாப்புலமென்

றது மெய்ப்புலமொழிந்தவற்றை. எப்புலமும் என்ற உம்மை முற்று. காவாமே-எதிர்மறை வினையெச்சம்; கா-பகுதி, வ்-உடம்படு மெய்யாகிய சந்தி, ஆ-எதிர்மறை விகுதி, அணைந்தமொருபகுதி, மே-எதிர்மறை வினையெச்சத்துக்கே உரிய விகுதி. இப்புலமுமென்ற உம்மை இழிவுசிறப்பு. (௯௯.)

தீயவெளிவரல்.

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் - வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு.

(இ - ள்.) வஞ்சித்து - (தவவேடத்தினால் உலகத்தாரை) வஞ்சனைசெய்து, ஒழுகும் - நடக்கின்ற, மதியிலிகாள் - அறிவிலிகளே! யாவரையும் - எல்லாரையும், வஞ்சித்தோம் என்று - (ஒருவரையும்) நமது தீயொழுக்கம் பிறரறியாதபடி நடந்தோமென்று, மகிழன்மின் - மகிழ்ச்சி யடையாதிருங்கோள்; வஞ்சித்த - பிறரறியாதபடி நடந்த தீயொழுக்கங்களை, எங்கும் உளன் - எப்பொருள்களிலும் நிறைந்துள்ளவனாகிய, ஒருவன் - ஒப்பு உயர்வில்லாத இறைவன், காணும் என்று - அறிவானென்று, அஞ்சி - பயந்து, அங்கம் குலைவது - உடல் நடுங்குதல், அறிவு - அறிவாம், எ - று.

(வி-ரை.) தீயொழுக்கமென்றது பிறர் அறியாதபடி அவர்மனைவியரைத் தம்வசப்படுத்தலை. ஒழுகுமென்னும் காரியப்பொருட்டாகிய பெயரெச்சம் மதியிலிகாளென்னும் பெயரின் பகுதியாகிய மதியின்மை என்னும் கருவிப்பெயர் கொண்டது. மதியிலிகள்-பண்படியாகப் பிறந்தபெயர்; மதியின்மை - பகுதி, இ - ஆண்பாற் படர்க்கை விகுதி, மகர ஐகாரக்கேடு சந்தி, கள் - அப்பாற் பன்மைகாட்டும் விகுதி, இப்பெயர் விளிஉருபேற்று, ஈற்றயல் அகரம் ஆகாரமாயிற்று. மகிழன்மின் - ஏவற்பன்மை எதிர்மறைவினை; மகிழ்-பகுதி, அல்-எதிர்மறை

விகுதி, அனைத்து மொருபகுதி, மின் ஏவற்பன்மை எதிர்கால விகுதி, லகரம் னகரமானது சந்தி. நீர் அங்கங்குலைவது திணைவழுவமைதி. குலைவது அறிவு என்பது காரியத்தைக் காரணமாகக் கூறும் உபசார வழக்கு. யாவரையும் என்பதில் உம்மை முற்றுதலால் யா எஞ்சாமைப் பொருளது. (௯௪)

தீயவெளிவரல்.

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந் தாங்கோடிப் பரக்கும் - கழிமுடைப்
புன்புலா னாற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்றுறைக்குஞ் சேயார் முகத்து.

(இ-ள்.) கழி முடை - மிக்க துர்க்கந்தத்தையுடைய, புல் புலால் - இழிவாகிய இறைச்சியை, பொதிந்து - ஒன்றிற்போட்டு, மூடினும் - மூடிவைத்தாலும், நாற்றம் - அதன் தீநாற்றம், புறம் சென்று - வெளிப்பட்டு, சேயார் - தூரத்திலிருப்பவருடைய, முகத்து உம் - மூக்கிலும், உறைக்கும் - தாக்கும்; (அதுபோல) மறை வழி - இரகசியத்தில், பட்ட - நடந்த, பழி - பழிக்கப்பட்ட தீயொழுக்கத்தைக் குறித்த, மொழி - சொற்கள், தெய்வம் - கடவுள், பறை அறைந்தால் ஆங்கு - பறைகொட்டினாற்போல, ஓடி - விரைந்து, பரக்கும் - (எங்கும்) பரவும், எ - று.

(வி-ரை.) மறை முதனிலைத் தொழிற்பெயர் இடத்துக்கானமையால் தொழிலாகுபெயர். இம்முதனிலையும் பகை என்பதுபோல, மறு-பகுதி, ஐ-புடைபெயர்ச்சி விகுதியையும், உகரக்கேடாகிய சந்தியையும் பெற்று முதனிலைத் தொழிற்பெயராயிற்றெனக. வழி - ஏழனுருபு. பழி - முதனிலைத் தொழிலாகு பெயர்; இங்ஙனமன்றி ஐ யென்னும் செயப்படுபொருண்மை விகுதி புணர்ந்து கெட்ட தொழிலடியாகப் பிறந்த பெயரெனினு மொக்கும். அறைந்தாங்கென்பதை அறைந்தது ஆங்கு எனவும் பிரிக்கலாம். பரக்கும் - செய்யுமென்வாய்பாட் டெதிர் கால வினைமுற்று; பர-பகுதி, க்-சந்தி, கு-சாரியை, உம் - எதிர்காலத்

நினைப்பாற் பொருளைவிருத்தி, உகரக்கேடு சந்தி; இங்கு மொழியென்றும் வினைமுதலால் நினைப்பாற் பொருளை நீங்கி, அவ்வினைப் பலவின்பாலாய் நின்றது. சேயார் - இடமடியாகப் பிறந்தபெயர்; சேய்மை என்னும் பண்பு இடத்துக்கானமையால் பண்பாகுபெயர். முகம்-முதலாகுபெயர்; அதனிற்றில் இறந்தது தழீஇய எச்சவும்மை தொகுக்கப்பட்டது. சென்றுரைக்கும் என்பதைச் சென்று உரைக்குமெனப் பதம்பிரித்துத் உரைக்குமென்பதற்கு நன்றாகப் பொருந்துமென உரைத்தலுமாம். ஓடிப் பரத்தல் யாவருமறியநிற்றல். இது எடுத்துக்காட்டுவமை அணி.

மேலோர் செயலியல்பு.

மெலியார் விழினு மொருவாற்றா னுய்ப
வலியார்மற் றொன்றானு முய்யார் - நிலைதப
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினும்
உய்யுமா றுய்யா பிற.

(இ-ள்.) நிலைதப - நிலைகெட, நொய்ய - அற்பமானவை, சழக்கு என - விரைவாக, வீழா - விழமாட்டா; வீழினும் - வீழ்ந்தாலும், உய்யும் - பிழைக்கும்; பிற - கனமானவை, உய்யா-(வீழ்ந்தால்)பிழைப்பன அல்ல; (அதுபோல) மெலியார் - சிறியோர், விழினும் - (தம் நிலையினின்று) தவறினாலும், ஒரு ஆற்றான் - ஒருவகையால், உய்ப - (அத்தவறுதலினின்றும்) தப்புவார்; வலியார் - பெரியோர், (தம் நிலையில் தவறினால்) ஒன்றானும் - ஒருவகையாலும், மற்று உய்யார் - தப்புவாரல்லர், எ - று.

(வி - ரை.) அவமதிப்பவரை அழிக்கவும், நன்குமதிப்பவரை உயர்த்தவும் வலியின்மையால் இல்லறத்தாரை, 'மெலியார்' என்றும், அவ்வலியுடைமையால் துறவறத்தாரை 'வலியார்' என்றும் கூறினர். விழின்-செயினென்வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்: விழு-பகுதி. வீழ் இதன்மரூஉ. விழினும், வீழினும் இவ்விரண்டும்மையும் எதிர்மறை உம்மை; இழிவுசிறப்புமாம். சழக்கு-விரைவுக் குறிப்புரிச்சொல்

பிற-இடைச்சொலடியாகப் பிறந்த பலவின் படர்க்கைப்பெயர்; பிற - பகுதி, அ-பலவின்படர்க்கை விகுதி, பகுதியீற்று அகரங்கெடு கடைக் குறை. ஆம், ஆல்-அசை. செய்ப சழக்கென வீழாது எனப்பாடமாகுனல் வீழாது பன்மையி னொருமைவந்த வழுவமைதி. ஏதுவும் மேலையணி.

மேலோர் செயலியல்பு.

இசையாத போலினு மேலோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லால் - பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கங் காண்பானை யொப்பவே
யூனோம்பி யூன்றின் பவர்.

(ப-ரை.) தீ ஓம்பி - தீயைவளர்த்து, பசு - பசுவினால், வேட்டு-யாகஞ்செய்து, வான் வழக்கம் - மேகம் மழைபெய்தலை, காண்பானை-செய்பவல்ல அந்தணனை, ஊன் தின்று-இறைச்சியைத் தின்று, ஊன் ஓம்புபவர் - உடலைப் பாதுகாக்கும் இழிசனர்கள், ஒப்பவே - ஒப்பார்களோ; (அதுபோல) மேலோர் - பெரியோருடைய, செய்கை - செயல்கள், இசையாத - பொருந்தாதன, போலினும் - போலக்காணப்படினும், மற்றையோர்க்கு-(அச்செயல்கள்) கீழோர்க்கு, அல்லால்-பழிப்பாவன அல்லாமல், வசை ஆகா - (அப்பெரியோர்களுக்குப்) பழிப்பாக மாட்டா, எ-று.

(வி-ரை.) பசு யாகத்துக்குரிய உயிர்களுக்குப் பொதுப்பெயர். வான் என்னும் ஆகாயத்தின் பெயர் மேகத்துக்கும், அது மழைக்கும் ஆனமையால் இருமடியாகுபெயர். வழக்கம்-தொழிற்பெயர்; வழங்கு-பகுதி; பொருள் கொடுத்தல். வான் வழக்கங் காண்பானை என்பதற்கு வான் - சுவர்க்கத்துக்கு, வழக்கம் - செல்லுதலை, காண்பானை - செய்வானை என உரைப்பினும் அமையும். வேட்டு - இறந்தகால வினையெச்சம்; வேள்-பகுதி, ட்-இறந்தகால இடைநிலை, உ-வினையெச்ச விகுதி; ளகரம் டகரமானது சந்தி, இது யாகத்துக்குரிய வினை; தொழிற்பெயர் வேட்டல், வேள்வி எனவரும். ஒப்ப-பலர்பாற் படர்க்கை வினைமுற்று,

ஓ-பகுதி, ப்-சந்தி, ப-பலர்பாற்படர்க்கை எதிர்கால வினைமுற்று விகுதி. எ-எதிர்மறை. ஓம்பித் தின்பவர் என்பதைத் தின்று ஓம்புபவர் எனச் சொல் பின்முன்னாக நிறுத்தி விகுதிகளைப் பிரித்துக் கூட்டிப் பொருளுரைக்க. முன்னுள்ள ஊன் கருவியாகுபெயர். போலியுமென்ற உம்மை அறிவுடையார்க்கு இசைந்தனவாகவே காணப்படுமென்னும் பொருள்தராமல் எதிர்மறைப்பொருளது. இதுவும் அவ்வணி. (கக)

ஞானிகள் செயல்.

எவரெவ ரெத்திறத்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவன கூறி - எவரெவர்க்கும்
உப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையான்
எப்பாலு நிற்ப தென.

(இ-ள்.) தம் உடையான் - தம்மை ஆளாக உடைய இறைவன், எப்பாலும் - (எல்லாப் பொருள்களிலும்) உள்ளும் புறம்பும், நிற்பது என - நிறைந்திருப்பதுபோல, எம் உடையார் - எம்மை ஆளாகவுடைய யோகிகள், எவர் எவர்-யாவர் யாவர், எத்திறத்தர்-எவ்வெப்பக்குவத்தை யுடையாரோ, அத்திறத்தர் ஆய்-அப்பக்குவத்துக்கு அமைந்தவர்களாய், நின்று - தாம் இருந்து, அவர் அவர்க்கு-அவரவர்களுக்கு, ஆவன-தகுந்த உறுதிமொழிகளை, கூறி - உபதேசித்து, எவர் எவர்க்கும்-எவரெவர்களுக்கும், உப்பால் ஆய் - புறம்பாகி, நிற்ப - இருப்பார்கள், எ-று.

(வி-ரை.) எவரெவரென முன்னே கூறினமையால் எத்திறத்த ரென்பதற்கு எவ்வெத்திறத்தரென வினாக் கூட்டப்பட்டது. எவரெவ ரென்றது கல்வி யறிவுடையோரையும் அஃதில்லாரையும். எவ்வெத் திறத்தரென்றது தீவிரபக்குவம் மந்தபக்குவ முடையார்களை. முதலி லுள்ள ஏன்கனுருபு தொடைப்பொருளது. பின்னுள்ளது நீங்காவனிங் கற்பொருளது. "ஊழையும் உப்பக்கங்காண்பர்" என்பதிற்போல உப்பா லென்பதில் உகரச்சுட்டு இங்குப் புறத்தாக்காயிற்று. எவரெவர்க்கும் உப் பாலாய்நிற்ப என்பதற்கு, எவரெவர்களுடைய நிலையிலும் கலவாமல் தந்நிலையாகிய யோகநிலையில் நிற்பரென்பது கருத்தாகக் கொள்க. (கஉ)

ஞானிகள் செயல்.

மெய்யுணர்ந்தார் பொய்ம்மேற் புலம்போக்கார் மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணாப் புலங்காப்பார் - மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாண நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து.

(இ-ள்.) மெய் உணர்ந்தார் - (பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும்) உண்மையறிவா லறிந்தவர்கள், பொய் மேல் - நிலையில்லாதனவாகிய விடய இன்பங்களில், புலன் - ஐம்புலன்களையும், போக்கார் - செலுத்தாமல், மெய் - மெய்ம்மையாகிய முதற்பொருளை, உணர்ச்சி - பாவித்தல், கைவருதல் - சித்திப்பதே, கண்ணாக - கருத்தாக, புலம் காப்பார் - அவ்வைம்புலன்களையும் தடுப்பார்கள்; மெய் உணர்ந்தார் - அவ்வுண்மையறிவா லறிந்தவர்கள், காப்பே - (புலன்களை) அடக்குதலே, நிலையாக - வாசற்காலாகவும், பழி நாணம் - பழிக்குக்கூசுதலே, நீள்கதவா - பெருங்கதவாகவும், நிறை - (மனத்தைப் புலன்களின் வழியிற்செல்லாமல்) நிறுக்குங்குணமாகிய, தாழ் - தாழக்கோலை, செறித்து - உறுதியாகப்பூட்டி, சேர்ப்பார் - (முதற்பொருளைப் பாவித்தலில் மனத்தை) ஒருமைப்படுத்துவார்கள், எ-று.

(வி-ரை.) உண்மையறிவா லறிதலென்றது விபரீத ஐயங்களா லன்றி அறிதலை. உணர்ந்தார், சேர்ப்பார் செயப்படுபொருள் குன்றா வினையாதலால் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டன. முன்னது வினைப்பெயர். போக்கார் - வினைமுற்றுவினையெச்சம். பின்வந்த மெய்யுணர்ந்தார் சுட்டுப்பொருளது. பிரிநிலை ஏகாரத்தைக் கைவருதல் கண்ணா மென்பதற்கிறுதிக் கூட்டுக. பிறப்பிறப்பில்லாமல் நித்தியமாய், விகாரமில்லாமல் இருத்தல்பற்றி முதற்பொருளை 'மெய்' என்றார்; அது பண்பாகுபெயர். முதற்பொருளென்றது இறைவனை. கண்ணா, நிலையா, கதவா என்பன ஈறுதொகுத்தலாய் நின்றன. இது இயைபுருவகம். ()

மெய்நெறிநின்றோரியல்பு.

கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல் - முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றுவதே யின்பம்
இறந்தவெலாந் துன்பமலா தில்.

(இ-ள்.) கற்று - (ஞானநூல்களைக்) கற்று, துறை - பொருள் வகைகளில், போய - தேர்ந்த, காதலற்கு - கணவனுக்கு, கற்பினாள் - கற்புடைய மனைவி, பெற்றுக்கொடுத்த-பெற்றுக்கொடுத்த, தலைமகன் போல - அறிவிற்சிறந்த புத்திரன்போல, முற்ற - முழுவதும், துறந் தார்க்கு - துறந்தவர்க்கு, மெய் - முதற்பொருளை, உணர்வில் - பாவித்த லில், தோன்றுவதே - தோன்றும் இன்பமே, இன்பம்-நிரதிசய இன்ப மாம்; இறந்த எல்லாம் - அஃது ஒழிந்த உலகத்தின்பமெல்லாம், துன் பம் - துன்பமாம், அல்லாது இல் - இன்பமாவதில்லை, எ-று.

(வி-ரை.) துறையென்னும் பண்புப்பெயர் கற்றென்பதை அடு த்துநின்றமையால் பொருள்வகைக்கும், அலாதென்னும் ஒன்றன்படர்க் கைக் குறிப்பு வினைப்பெயர் துன்பமென்பதை அடுத்துநின்றமையால் இன்பத்துக்கும் ஆயின. துறு-பகுதி, ஐ செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, நீர்க்கரையின் பெயராயினும், துறை இந்த வகை என்னும் பொருள்தரலால் பண்பென்றும். ஏ-பிரிநிலை. இறந்த-இறந்த காலப்பெயரெச்சம்; இறந்தகால வினைப்பெயராகக் கொள்ளின் இரு பெயரொட்டுப் எண்புத்தொகை நிலைத்தொடரென்க; விரியின் இறந்த வாகிய எல்லாமென விரியும். (கூ0௦)

மெய்நெறிநின்றோரியல்பு.

கற்றும் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப் - பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச் சென்றார்.

(இ-ள்.) கற்று-(ஞானநூல்களைக்) கற்று, அறிந்து-(அவற்றின் பொருள்களைச் சந்தேக விபரீதமில்லாமல்) அறிந்து, அடங்கி-(செருக்கில்லாமல்) அடங்கி, தீது-(அந்நூல்கள்) விலக்கியதினின்று, ஒரீஇ - நீங்கி, நன்று - விதித்ததை, ஆற்றி-செய்து, பெற்றது கொண்டு-அடைந்த அறிவினால், மனம் - மனத்தை, திருத்தி - திருந்தச்செய்து, பற்றுவதே - கொள்ளுதற்குரிய முத்திநெறியையும், பற்றுவதே - (அதற்கு அமைந்த) உபாயத்தையும், பற்றி - உட்கொண்டு, பணி-வேறுமுயற்சி, அற - நீங்க, நின்று - (தியானநிலையில்) நின்று, ஒன்று - ஒப்புயர்வு இல்லாத முதற்பொருளை, உணர்ந்து - (இடைவிடாமல்) பாவித்தல் செய்து, நிற்பாரே - (அந்நிலையில்) மாறாதவரே, நீள் நெறி - (முத்தியாகிய) பெருவழியில், சென்றார்-அடைந்தவர், எ-று.

(வி - ரை.) தன்வினை பிறவினை இரண்டுக்கும் பொதுவாகிய ஒரீஇ என்னும் இறந்தகால வினையெச்சம் இங்குத் தன்வினையாய் நின்றது; ஒரு-பகுதி, உகரத்தின் திரிபாகிய இ-இறந்தகால வினையெச்சவிகுதி, உகரக்கேடு சந்தி, இகரம் ஈகாரமாய் அளபெழுந்தது நீட்டல் விகாரம், இவ்வளபெடை சொல்லிசையளபெடை; செய்யுளிசையளபெடையின்றி அச்செய்யுள் நடவாததுபோலச் சொல்லிசையளபெடையின்றி அச்சொல் நடவாதென்பதை உணரமாட்டாதவர் குற்றமெனக் குழறுவார். சொல் நிரம்பாமல் எவ்வாறு வழங்குமென வினவி மறுக்க. இது ஒருவியென்னும் வினையெச்சம் சொல்லிசை நிறைத்தற்கண் வந்த அளபெடையென்பர். இது அளபெழுந்தால் ஒருவீஇயென அளபெழல்வேண்டும்; ஒரீஇ என எவ்வாறு அளபெழும்; ஒருவீஇ என வரின் செய்யுளிசையளபெடையாவதல்லது சொல்லிசையளபெடையாகாமையால் பெருங்குழறலே ஆம். தீது, நன்று-பண்படியாகப் பிறந்த பெயர்ச்சொற்கள். நன்மை-பகுதி, து-ஒன்றன்படர்க்கை விகுதி, பகுதிப்பொருளதாகிய மை விகுதிக்கேடும், லகாரதகாரங்கள் றகரமாகத் திரிந்ததும் சந்தி, பகுதியீற்று றகரம் னகரமானது மெலித்தல்விகாரம். பெற்றது-வினைமுதல் வினையைச் செயப்படுபொருளின்மேல் ஏற்றிக்

கூறப்பட்ட ஒன்றன்படர்க்கை இறந்தகால வினையாலணையும் பெயர். இது விலக்கியுதிலீங்கி விதித்ததைச் செய்வதைப்பற்றி அறிவு தூய்மை பெறுதலால், அந்நிருமல ஞானத்துக்காயிற்று. கொண்டு-மூன்றுவதன் சொல்லுருபாகிய இடைச்சொல். திருத்தி-பிறவினையாகிய இறந்தகாலவினையெச்சம். திருந்தி-தன்வினை. முன்னுள்ள ஏ இரண்டும் எண்ணிடைச்சொல். பின்னுள்ள ஏ பிரிநிலை. ஒன்று - எண்ணலளவையாகு பெயர். பற்றுவது - பெற்றதுபோன்ற எதிர்கால வினையாலணையும் பெயர். (௯0௧)

ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சிக் கண்விழிப்பத் தூங்குவார் - தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்.

(இ - ள்.) அளந்து-(ஆன்மசொரூபத்தை வேதாகமங்களாகிய) அளவையாலறிந்து, ஐயம் - சந்தேகமும், திரிபு-விபரீதமும், இன்று - இல்லாமல், உத்தியின் - கருதலளவையால், தெளிந்து - துணிந்து, மெய் - முதற்பொருளை, உணர்ச்சி - பாவித்தலாகிய, கண் விழிப்ப - கண்விழியாதிருக்க, தூங்குவார்-ஞானநித்திரை செய்பவர்கள், தம்முள் - தம்மிடத்தில், காண்பதே - தோன்றுவதாகிய ஆநந்தமே, காட்சி ஆக - காணப்படும் பொருளாகவும், கனவு ஏ-(அத்தூக்கத்தில் வெளிப்படும்) கனவே, நனவு ஆக - சாக்கிரமாகவும், பூண்பதே - பொருந்துதிலேயே, தீர்ந்த பொருள் - முடிந்த பயனும், எ-று.

(வி - ரை.) செய்யுளாதலால் இன்றியென்னுங் குறிப்புவினையெச்சம் இன்றெனத் திரிந்தது. (நன் - உயி - சூ - ௩௩) இன்றென்னும் வினையெச்சவினைக்குறிப்பு முற்றாய்த் திரிந்ததெனின், ஏகிற்று அற்று என்பவற்றிற்போல இன்றென்பதில் றுவ் விகுதி அஃறிணையொன்றன் படர்க்கையை யுணர்த்தலாலும், ஐயந்திரிபென்னும் இரண்டெழுவாய் இன்றென்பதைக் கொள்ளுதலால் பால்வழுவாயும், யானி

ன்று, நீயின்றெனச் செய்யுளில் வருவன இடவழுவாயும் முடியுமாதலா லும் இது மறவியின் குற்றமென்க. விழிப்ப-செய என் எச்சம்; விழி- பகுதி, ப்-சந்தி, ப்-விரித்தல் விகாரம், அ-நிகழ்கால வினையெச்சவிகுதி. முன்றுள்ள ஏ ஈற்றசை. மற்ற இரண்டும் பிரிநிலை. காண்பவே என் னும் ஏகாரத்தைக் கனவு என்பதனோடும் ஆக என்னும் வினையெச்சத் தைக் காட்சி என்பதனோடுங் கூட்டுக. முதற்பொருளை இடைவிடாது பாவித்தல் செய்து வேறு முயற்சியற்று ஆசரிக்கின்றவராதலால் 'மெய்புணர்ச்சிக்கண் விழிப்பத் தூங்குவார்' என்றார். கண்விழிப்பத் தூங்குவார், கனவு நனவாக என்பன விரோத அணியிலொருவகை. காட்சி - தொழிலாகுபெயர்; இவ்வாறன்றித் தொழிலடியாகப் பிறந்த பெயரெனலுமாம். காண் - பகுதி, ச்-எழுத்துப்பேறு, இ - செயப்படு பொருண்மை விகுதி, ணகரம் டகரமானது சந்தி. பூண்பது மேலைச் செய்யுளில் பெற்றதுபோன்ற எதிர்காலவினையாலணையும்பெயர். காணு தல்-உண்டாகுதல்; காண்பது-எதிர்காலவினையாலணையும்பெயர்.(௧௦௨)

நீதிநெறிவிளக்கம் மூலமும் உரையும்

மு ற் றி ற் று.

ஸ்ரீ

நீதிநெறிவிளக்கத்தின்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.